

# ஞானச்சுடர்

புரட்டாதி

2010



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு

பொருள் : சிறவர் பெற்றோரின் உடம்பைத் தொடுதல் உடம்பிற்கு இன்பம் தரும். அவரது மழலைச் சொற்களைக் கேட்டல் காதுகளுக்கு இன்பம் தரும். (65)

குழலினிது யாழினி தென்பதும் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்

பொருள் : தமது குழந்தைகளின் மழலை சொற்களைக் கேட்டு மகிழாதவர் குழல் ஓசையும் யாழ் ஓசையும் இனியவையெனக் கூறுவர். (66)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### திருத்தாண்டகம் - 6



என்னையெனக் கென்னாலே அறிவித்த வெம்பெருமான்
அன்னையினும் மிகவினிய வாருயிருக் குறுதுணைவன்
பொன்னைநிகர் மேனியான் பூங்கமலத் திருத்தாளான்
தென்னைபனை சேரிலங்கை மாநகரிற் கண்டேனே 3

நஞ்சை வென்ற கண்டத்தான் நால்வேதம் நவில்வாயான்
பஞ்சைவென்ற மெல்லடியாள் பாலையுடைமை பாகத்தான்
அஞ்சைவென்ற வடியார்கள் அகங்கோயில் கொண்டபிரான்
மஞ்சைவென்ற மலைபொலியும் இலங்கைநகர் கண்டேனே 4

ஆவதொன்று மறிகில்லேன் அந்திசந்தி தொழுகில்லேன்
சாவதையுங் கருதுகிலேன் சஞ்சலமே மிகவுள்ளேன்
போவதுவும் வருவதுவும் இல்லாத புண்ணியனை
தேவர்குழு(உத்) தொழுதேத்துஞ் சீரிலங்கை கண்டேனே 5

இடுவதுவோ சிறிதுமிலேன் எமர்மாட்டு மன்புமிலேன்
சுடுவதுபோற் சொல்வல்லேன் தூயோரைப் பணிகில்லேன்
கெடுவதுவோ மிகவுள்ளேன் கேவலமாய்க் கிடக்கின்றேன்
நடுவிகவா நாயகனே நம்மையாள் வதுகடனே 6

# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 153

## 2010 புரட்டாதி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| விபூதிக் கலாசாரம் | T. நாகராசா | 1 - 4 |
| தமிழும் மெய்ந்நெறியும் | இரா. சாந்தன் | 5 - 7 |
| பழந்தமிழ் இலக்கியங்கள் | திருமதி கு. செந்தில்பிரியா | 8 - 13 |
| தினம் தினம்.. | ஜக்கி வாசுதேவ் | 14 - 16 |
| படங்கள் தரும்.. | - | 17 - 20 |
| அப்பர் தேவாரத்துள்... | க. நாகேஸ்வரன் | 21 - 27 |
| தர்ப்பைப்புல்லின்... | நீர்வை மணி | 28 - 29 |
| நித்திய அன்னப்பணி | - | 30 - 31 |
| வினையின் விளைவு | க. சிவசங்கரநாதன் | 32 - 34 |
| பெரிய புராணத்தின்... | செல்வி. பா. வேலுப்பிள்ளை | 35 - 37 |
| கர்மமும்.... | கு. கோபிராஜ் | 38 - 41 |
| திருவிளையாடல்.... | ஆறுமுகநாவலர் | 42 - 44 |
| சிறுவர் கதைகள் | - | 45 - 46 |
| சிவபுராணம் | சு. அருளம்பலவனார் | 47 - 49 |
| 97ஆம் அகவையில்... | - | 50 |
| ஓதுதல் | வாரியார் சுவாமிகள் | 51 - 52 |
| இறைவனை... | கு. நவரத்தினராஜா | 53 - 55 |
| செய்திச்சிதறல்கள் | - | 56 |
| சந்நிதியான் | ந. அரியரட்ணம் | 57 - 60 |
| தமிழகத் திருக்கோயில்.. | வல்வையூர் அப்பாண்ணா | 61 - 64 |


---


அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம் : 021 3219599

Web Site : WWW. Sannithiyan.org

பதிவு இல. Q.D/46/NEWS/2010

அச்சகம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

உ



# ஞானச்சுடர் ஆவணி மாத வெளியீடு

**வெளியீட்டுரை -**

ஆவணி மாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை பேரவை உறுப்பினர் கு. அருணகிரிநாதர் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது உரையில் ஆற்றங்கரை வேலவனின் அருளாசி யோடு ஆச்சிரமத்தில் சமய, சமூகப் பணிகள் யாவும் சிறப்பாக நடைபெறு கின்றது. "பசித்தோர் முகம் பாராதே" என்ற வாக்கிற்கிணங்க ஆச்சிரமமானது சாதி, மத பேதமின்றி சிறப்பாக தனது அன்னதானப் பணியை ஒவ்வொரு நாளும் வழங்கி வருகின்றது என்பதில் ஐயமே இல்லை.

மேலும் இங்கே வெளிவருகின்ற "ஞானக்குழந்தை" என்று செல்லமாக அழைக்கப்படும் ஞானச்சுடர் மலர் தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை-**

152ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு. சுரேசன் அவர்கள் நிகழ்த்தினார். முதலில் சந்நிதி வேலவனின் அருளாசியோடு வெளி வருகின்ற ஞானச்சுடர் மலரை மதிப்பீடு செய்வதென்பது இயலாத காரியமாகும்.

இச்சுடரில் இடம்பெறும் கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள் யாவும் எளிமையான சொற்பிரயோகங்களையும், நிறைந்த கருத்துக்களையும் கொண் டவையாக அமைந்துள்ளன. இவ்விடயங்களை சிறியோர் முதல் பெரியோர் வரைபடித்த இன்புறும் அளவிற்கு இச்சுடர் அமைந்துள்ளது.

மேலும் இச்சஞ்சிகை வேறுபல விடயங்களையும் உள்ளடக்கி சுடர்விட்டு பிரகாசிக்க வேண்டும் என்று கூறிவிட்டு, மதிப்பீட்டுரையை நிகழ்த்த சந்தர்ப்பம் வழங்கியதையிட்டு பெருமகிழச்சியடைகின்றேன் என்று கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

உ

நமது மனமானது எப்பொழுதும் எதையோ நினைத்தபடியே இருக்கும். அப்படி இருக்கும் காலங்களில் நல்லனவற்றையே எப்போதும் நினைக்கவேண்டும். நினைத்ததைச் செயலாற்றவேண்டும். நல்ல நினைவு இல்லையெனில் எமது வாழ்வு சிதைந்துவிடும். தனக்கு உரியவற்றையே தான் அனுபவிக்கவேண்டும். தன் உடைமை அல்லாதனவற்றை மனத்தினால் கூட நினைக்கக்கூடாது.




நினைவு எப்பொழுதும் இறைவன்மீது இருந்தால் துன்பமேயில்லை. வேறு நினைவிற்கே இடமில்லை. சிந்தனை முழுவதும் சிவன்பால் வைத்தவருக்கு தாம் அடிமை என்பார் சுந்தரர். எமது இன்றைய துன்பங்களுக்குச் சிந்தனை மாறுபாடே காரணம். இறைவழிபாடு, இறை சிந்தனை இவற்றிற்கு எமக்கு நேரம் இல்லை என்று நாள் முழுவதும் ஏதோ செய்கிறோம். தினமும் சிலநிமிடநேரமாவது இறைவனை நினைத்து வழிபடவேண்டும். ஆலயத்திற்குச் சென்று வழிபாடு இயற்றவேண்டும்.

நாம் உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்து கோயில்களுக்குச் செல்வதாலும் ஆர்வத்துடன் வணங்குவதாலும் இறைவனைக் காணமுடியாது. ஆலயச் சூழலில் உள்ள ஏழை, எளிய, வறுமை, நோய் முதலிய பிணிகளால் பீடித்துள்ள மக்களைப் பார்த்தும் பாராததுபோல் ஆலயத்திற்குச் சென்று வழிபடுகின்றோம். ஆலயங்களில் நாம் செய்யும் எதுவும் மக்களை சென்றடைவதில்லை. எனவே நலிவுற்றவருக்கு உதவுவதே சைவசமயம் புகட்டும் பாடமாகும். சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று இல்லாமல் வாழ்வுடன் இணைந்து மானிட சமுதாயம் உய்யும் வண்ணம் ஒவ்வொருவரும் வாழவேண்டும். உலகில் உள்ள அனைத்து உயிர்களும் நலமாக வாழவேண்டும் என்று நினைக்க வேண்டும். ஆலயங்களுக்குச் சென்று தனக்கு மட்டும் வேண்டாது நாட்டில் இடம் பெற்றுவரும் சகல பாதிப்புக்களிலிருந்தும் எல்லாவிதமான இடர்களையும் களையும் வண்ணம் இறைவனை வேண்டுதல் செய்யவேண்டும்.

நமது சமயத்தில் அன்றாடம் சமூகப்பணிகள் சமயப்பணிகள் செய்யுமாறு வலியுறுத்தப்படுகிறது. இவ்விதமாக சமய, சமூகப்பணிகளை ஆற்றும்பொழுது நாம் ஒடுங்கிய மனப் பான்மையிலிருந்து விலகி பரந்த மனப்பான்மையுள் உள் வாங்கப்படுகின்றோம். "சமயம் வெறும் வயிற்றுக்கு உரியதல்ல" என்று இராமகிருஷ்ண பரமஹம்சரும் "கடவுளை அடையச் சிறந்த வழி மனிதருக்கு சேவை செய்வதே" என்று சுவாமி விவேகானந்தரும் கூறியிருப்பதன் கருத்தினை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக அமைவது மனம்தான் மனதுமது செம்மையானால் மந்திரம் தேவையில்லை. அவ்வகையில் எமது மனம் நல்ல நினைவோடு இருக்குமானால் எல்லோரும் எல்லாமும் பெறுவார்களாக.

உ

# சந்நிதிமுருகன் ஆனந்தக் களிப்பு



தானாத னானந்த தானா - தன்னா
தனனாத னாந்த தானான தானா என்ற நடை

தொண்டைமா னாற்றிலே ஒருவன் - அவன்
சுடர்நெடும் வேலேந்திச் சும்மா இருப்பான்
அண்டரும் போற்றிடும் - அழகன் - அங்கே
ஆறுமுகம் பன்னிரு கையோடிருப்பான்
(தொண்டை)

பண்டைய நாளிலே பலபேர் - அவனை
பராமுகம் பண்ணிப் பரிகசித்தார் - இன்று
மண்டியிட்டே வந்து நோற்றே - தங்கள்
மரபுய்ய தாவரம் எனமன்றாடு கின்றார்
(தொண்டை)

கண்டவர் விண்டிலர் என்பர் - ஆயினும்
விண்டவரும் கண்டிலர் என்பர் - அவனோ
தண்டைசிலம்புடன் ஆடி - இந்த
தாரணி யெல்லோர்க்கும் தான்காட்சி கொடுப்பான்
(தொண்டை)

ஆண்டான் அடிமையென்று பாரான் அவன்
அன்படியாரிடம் அகந்திலே யிருப்பான்
மாண்புடனவர்களை வைப்பான் - தனது
மானடி மலரிலும் சேர்த்துவைப் பானே
(தொண்டை)

பன்னுதற் கரிய இரு கையான் - துன்பம்
படுவோர்க்கு ஆறுகின்ற முகமாகி நிற்பான்
எண்ணிவிட முடியாதவன் முகத்தை - கரத்தை
ஈசனே முருகன் போல் ஏற்றம் பெற்றானே
(தொண்டை)

ஆணவம் கன்மம் மாயை யென்று - நின்று
அடங்காத அசுரராய் தேவருயிர் வாட்டும்
ஈனர்களை அடக்கியாளும் முகத்தால் - கரத்தில்
இனிய தாம் ஞான வேல் ஏந்தி நின்றானே
(தேவர் - உயிர்கள்) (தொண்டை)

வினை தீர்ந்த நேவ, உயி ரெல்லாம் - அந்த
வேலவற்கு தாம் வளர்த்த தேவயானை தன்னை
துணையாக ஏற்க நிறைஞ்ச - ஐயனும்
துதிக்கின்ற தேவர் யானையைத் துணையாக ஏற்றான்
(தொண்டை)

கலைபூஷணம், முதுபெரும் புலவர்
ஆசிரியர் : வை.க. சிற்றம்பலவனார்

# புரட்டாதி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**Dr. M. யோகேஸ்வரதேவர்**
(நெல்லியடி, கரவெட்டி)

**Dr. K.இராதாகிருஷ்ணன்**
(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**Dr. G. உதயசீலன்**
(சுதுமலை, மானிப்பாய்)

**தலைவர்**
(தெல்லிப்பளை. ப.நோ.கூ.ச.தலைமையகம்)

**இ.குலேந்திரன்**
(கொமர்சியல் வங்கி, சுண்ணாகம்)

**க. சொர்ணவடிவேல்**
(கதிர்காமசிங்கம் அன்சன்ஸ், அளவெட்டி)

**வே. தர்மராசா**
(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

**செ. புவனேந்திரராசா**
(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**
(இளை.அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**
(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தம்**
(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**இ. சுப்பிரமணியம்**
(இளை.கிராமசேவையாளர், ஏழாலை)

**ப. நடராசாக்குருக்கள்**
(ஆவரங்கால், புத்தூர்)

**சீ. முருகவேள்**
(கிராமசேவையாளர், இடைக்காடு)


**N .குமாரசாமி**
(சங்கரத்தை, வட்டுக்கோட்டை)

**க. ஸ்ரீஸ்கந்தராசா**
(பிரதி அதிபர், அச்சுவேலி மத்திய கல்லூரி)

**க. குமாரதாசன்**
(பொது சுகாதார பரிசோதகர், தும்பளை)
**க. இரத்தினம்**
(இளை. கிராமசேவையாளர், கரணவாய்)
**வ. இராசையா**
(வத்தனை, புலோலி)
**சோ. தனராசா**
(வாணிமஹால், வட்டுக்கோட்டை)
**நாகேந்திரம் கண்ணம்மா**
(மானிப்பாய்)
**வ. கந்தசாமி**
(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)
**சி. சிவச்செல்வம்**
(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)
**கு. மதனமோகன்**
(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)
**சி. பகீரதன்**
(பிள்ளையார் கோயிலடி, கெருடாவில்)
**க. கந்தசாமி**
(வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)
**ஆ. திருநாவுக்கரசு**
(இணுவில் மேற்கு)
**நா. கனகலிங்கம்**
(தபால் வீதி, கொக்குவில்)
**ரஞ்ஞனசாந் ஜஷாந்**
(யாழ்ப்பாணம்)
**க. வக்சலாதேவி**
(பூமகள் வீதி,அரியாலை)
**சு. பேரம்பலம்**
(புன்னாலைகட்டுவன் தெற்கு)
**து. இராசகுலநாயகம்**
(கைதடி)
**A. சிவதாசன்**
(மதவடிலேன், சுதுமலை)
**R. கணேசலிங்கம்**
(உரும்பராய்)
**சு.சண்முகசுந்தரம்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**க. தெய்வானைப்பிள்ளை**
(V.M. றோட், பருத்தித்துறை)

**ம. நிர்மலதாசன்**
(தில்லையர்கடையடி, கம்பர்மலை)
**நா. ஸ்ரீகணேசன்**
(சங்கானை)
**திருமதி. ப. தேவமனோகரன்**
(கந்தபுஷ்கரணி, நவாலி)
**சி. துரைராசா**
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
**அ. ஆறுமுகம்**
(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)
**கயிலைநாதன் மங்களகாந்தி**
(வேழலகம், ஆனைக்கோட்டை)
**க. கணேசலிங்கம்**
(சரவணபவனம், இணுவில் மேற்கு)
**இ. சர்வேஸ்வரன்**
(கலைவாணி வீதி, கோண்டாவில்)
**த. விசயகுமாரன்**
(பழம்றோட், கந்தர்மடம்)
**செல்வி. சு. பகீரதி**
(செட்டித்தெரு, நல்லூர்)
**சி. யோகராசா**
(ஏழாலை மேற்கு, சுண்ணாகம்)
**கனகேஷ்வரன் பிரகாஷ்**
(கைதடி கிழக்கு)
**சி. செல்வரத்தினம்**
(புன்னாலைக்கட்டுவன்)
**சு. சத்தியேந்திரன்**
(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
**சி. சகுந்தலாதேவி**
(வங்களாலேன், மல்லாகம்)
**ஆ. விபுலானந்தராசா**
(இணுவில் மேற்கு, இணுவில்)
**ம. நாகேஸ்வரி**
(நவிண்டில்)
**த. லதாசந்திரிக்கா**
(மகாத்மா வீதி, நெல்லியடி)
**திருமதி. வேலாயுதம் ஈஸ்வரி**
(கரணவாய் கிழக்கு)

**க. நற்குணராஜா**
(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)
**செ. இராஜேஸ்வரி**
(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)
**சு. நவரட்ணம்**
(முத்தமிழ் வீதி, கொட்டடி)
**த. பூபாலன்**
(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)
**கா.ஆ. சச்சிதானந்தம்**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)
**மா. கிருஸ்ணம்மா**
(கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்)
**செ. கேஷிகன்**
(அரசடி வீதி, திருநெல்வேலி)
**நா. கமலநாதன்**
(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)
**ஆ. புவனயோகேஸ்வரன்**
(புனித அந்தோனியார் வீதி, சுண்ணாகம்)
**செ. சோதிப்பெருமாள்**
(சரஸ்வதி மஹால், இணுவில்)
**க. பரணிதரன்**
(சுண்ணாகம் கிழக்கு)
**S. தர்மஜெயசூரியர்**
(இளை. இ.வ. உத்தியோகத்தர், உரும்பராய்)
**கி. சிவப்பிரகாசம்**
(புலோலி தெற்கு, புலோலி)
**R. ஜெயராஜ்**
(சிவராஜ் றேடிங்கோ, பருத்தித்துறை)
**க. இரவிச்சந்திரன்**
(சாயிகிருஷ்ணா, வதிரி)
**திருமதி ஸ்ரீரஞ்ஜினி ஸ்ரீகரன்**
(கதிர்காம கோயிலடி, வதிரி)
**Dr. வை. தியாகராஜா**
(முத்திரைச் சந்தி, யாழ்.)
**சி. மகாலிங்கம்**
(நீர்வேலி மேற்கு, நீர்வேலி)
**சி. வேலாயுதம்**
(வதிரி, கரவெட்டி)



உ

# விபூதிக் கலாசாரம்

- T. நாகராசா அவர்கள் -

சிந்து வெளியில் ஆரம்பித்த இந்து மதம் பாரததேசம் யாவும் பரவி மக்களிடையே ஆத்மீக விழிப்புணர்வை ஏற்படுத்திற்று. இந்து மதமென்று சொல்லப்பட்ட இம்மதம் காலப்போக்கில் சைவம், வைஷ்ணவம், சாக்தமெனப் பிரிந்து நின்று செயற்பட்டது. ஆனால் காலப்போக்கில் சாக்தம் தன் நிலையினின்று மறைந்து சைவம், வைஷ்ணவத்திடையே நின்று செயற்பட்டது. குறிப்பாக கி.பி. 7ஆம் நூற்றாண்டிலிருந்து சைவ, வைஷ்ணவப் பிரிவுகள் தமிழ் நாட்டில் வளர்ச்சி பெற்ற காலமாகும். முறையே நாயன்மார்கள் நால்வரும் பன்னிரு ஆழ்வார்களும், மேற்குறிப்பிட்ட பிரிவுகளின் வளர்ச்சிக்காக அளப்பரிய பணிகளை ஆற்றியுள்ளனர். உதாரணமாக கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய சம்பந்தரும், திருநாவுக்கரசரும் தமது சைவத்திற்குரிய விபூதி தரித்தலை அல்லது விபூதிக் கலாசாரத்தை மக்களிடையே பரவச்செய்வதற்கு அளப்பரிய பணிகளை ஆற்றியுள்ளனர். சிறப்பாக பல்லவர் காலமாகிய பக்தி நெறிக்காலத்தில் மன்னர்களது ஆதரவுபெற்று சைவமதத்தை வளர்ச்சியடையச் செய்ததுடன் விபூதி கலாச்சாரத்தையும் மக்களி டையே வளர்த்தனரென்பதை அவர்களது ஆத்மீக வாழ்க்கை நெறியைக் கொண்டு செவ்வனே அறியலாம்.

குறிப்பாக, திருநாவுக்கரசர் (அப்பர்) சரியைத் தொண்டைக் கடைப்பிடித்து சிவ ஆலயங்களை பிற்கால வழிபாட்டிற்குரிய இடமாக மாற்றினார். தமது அடியார் கூட்டத்துடன் தமிழ் நாட்டில் காணப்படுகின்ற சிவாலயங்களின் தூய்மையைப் பேணுவதற்காக புல் பூண்டுகளை தனது உழவாரப்பணி மூலமாக இல்லாமல் செய்து சிவாலயங்களை வாழ வழிவகுத்தார். அவர் தமது அடியார்கள் கூட்டத்துடன் மேற் குறிப்பிட்ட பணிகளைச் சிறப்பாகச் செய்தார். அவர் இப்பணியினை மேற்கொண்டபோது அடியார்களிடையே காணப்பட்ட சுரத்தினை விபூதி கொடுத்து மாற்றினார் என்பதை அறியக் கூடியதாகயிருக்கின்றது. இவரைப் போலவே சம்பந்தரும், சுந்தரரும், மாணிக்கரும் விபூதிக் கலாசாரத்தை மக்களிடையே வளரச் செய்வதற்கு தங்களாலான பணிகளைச் செய்து காட்டினர். இதில் குறிப்பாக சம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகம் சிறப்பாக அமைந்துள்ளது. சம்பந்தர் பெருமான் பாடிய திருநீற்றுப் பதிகத்தில் திருநீற்றின் சிறப்பை செவ்வனே கண்டு கொள்ளலாம். இரண்டாம் திருமுறையில் வருகின்ற இப்பதிகத்தில் பதினொரு பாடல்கள் வருகின்றது. இதில் முதலாவது பாடலில் பின்வருமாறு பாடியுள்ளார்.

எண்ணங்கள் விருந்தினர்களைப் போல் வரவேற்கப்பட வேண்டும்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே

இத் தேவாரத்தில் திருநீற்றின் மகிமையைக் குறிப்பிடும்போது விபூதி மந்திரமாகின்றது. தேவர்களிலும் பார்க்க மேலானது; அழகுடையது. வணங்குவதற்கு சிறப்பானது; தந்திரமானது என்று கூறி சைவ மதத்தில் உள்ளது. இத்திரு நீறாகுமென்கின்றார். இறுதியாக செந்துவர் வாயையுடைய உமையின் பங்கன் என்று கூறி திருவாலவாயான் திருநீறே என்று முடிக்கின்றார். மேலும் சிறப்பாக வேதத்தில் உள்ளது கொடிய துயரைத் தீர்ப்பது, போதம் தருவது, புன்மை தவிர்ப்பது படிப்பதற்கு உவந்தது, உண்மையிலுள்ளது என்று கூறி சீதப்புனல் வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறேயென்று முடிக்கின்றார். எனவே இவர் பாடிய பதினொரு பாடல்களில் பத்தும் திருநீற்றின் சிறப்பைக் கூறிச் செல்கின்றன. எனவே நால்வர்களும் விபூதிக் கலாசாரம் தமிழ் நாட்டில் சிறக்க அரும் பணி ஆற்றியுள்ளனர். விபூதிக் கலாசாரம் தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஈழநாட்டிலும் பரவத் தொடங்கிற்று. திருமூலரால் சிவபூமியென்று சொல்லப்படுகின்ற ஈழ நாட்டில் பாடல்பெற்ற தலமாகிய திருகோணமலை, திருக்கேதீஸ்வரம் போன்ற இடங்களில் சம்பந்தர், சுந்தரர் போன்றோரால் பாடப்பெற்ற தேவாரத்தில் சைவத் தின் வளர்ச்சியையும் அத்துடன் தொடர்புடைய விபூதியின் முக்கியத்துவத்தையும் கண்டுகொள்ள முடிகின்றது. வெளிப்படையாக விபூதியின் சிறப்பை எடுத்துக் கூறாமல் விட்டாலும் சைவமதத்தின் வளர்ச்சிக்காக அடையாளச் சின்னமாகிய விபூதியைப் பயன்படுத்தினர். மக்கள் இடையே இவற்றைப் பரவச் செய்தனர் என்று அறிந்து கொள்ளலாம்.

தமிழ் நாட்டில் வளர்ச்சியடைந்த விபூதிக் கலாசாரம் படிப்படியாக இலங்கை யில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் செழிக்கச் செய்தவர் ஆறுமுக நாவலர் பெரு மானாகும். அவர் சைவமத கலாசாரத்தை வளர்ப்பதற்கு தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஈழநாட்டிலும் வளர்ப்பதற்கு அரும் பணியாற்றினார். தன்னை முழுமையாக அர்ப் பணித்த நாவலர் பெருமான் சைவ கலாசாரத்திலுள்ள விபூதி தரித்தலை முக்கி யத்துவம் பெறச் செய்தார். குறிப்பாக தீட்சை வைத்தல், விரதமிருத்தல் என்பவை ஒன்றோ டொன்று இணைந்தவையாகும். இவற்றினை மக்களிடையே பரவச் செய்தவர் ஆறுமுக நாவலராகும். போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற வர்களால் ஆட்சிசெய்யப்பட்ட எமது நாடு சைவக் கலாசாரத்தில் மிகவும் தளர்ச்சி அடைந்து காணப்பட்டது. இவ்வாறு காணப்பட்ட தளர்ச்சிப் போக்கை

நீக்கி எமது சைவ கலாசாரத்தையும் அதோடு இணைந்த விபூதிக் கலாசாரத்தையும் வளர்ச்சியடையச் செய்த பெருமை நாவலரையே சாரும்.

சூழ்நிலைக்கேற்ப விபூதிக் கலாசாரம் வளர முன்னின்று பணியாற்றியவர் ஆறுமுக நாவலராகும். தமிழ், சமஷ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற பெருமானார் தமிழ் மொழியை மட்டுமன்றி விபூதிக் கலாசாரத்தையும் வளர்த்தார். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் இளைஞர்கள் யுவதிகள் விபூதி தரித்தலையோ, தீட்சை பெறுதலையோ பெரும்பாலும் முக்கியமாகக் கொள்வதில்லை. இதனால் எமது விபூதி கலாசாரம் தளர்வடைந்து செல்வதைக் காணமுடிகின்றது. நாவலர் பெருமான் வளர்த்த இக்கலாசாரம் தளர்வடைந்து செல்வது மனவருத்தத்திற்குரிய விடயமாகும். இளைஞர்கள் யுவதிகள் தான் எதிர்காலத்தில் முன்னின்று பணியாற்றவேண்டும். இப்பணியினை செவ்வனே செய்வார்களேயானால் எமது விபூதி கலாசாரம் அழியாது வளர்ச்சியை நோக்கிச் செல்லுமென்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. நாவலர்பெருமான் கட்டி வளர்த்த இக்கலாசாரம் அவரது அளப்பரிய பணியின் விளைவுகளாகும். சிலர் விபூதி தரித்தல் அநாகரிகமென்று நினைக்கின்றார்களோ என்னவோ தெரியவில்லை. மூன்று விரலால் விபூதியை எடுத்து வடக்கு நோக்கி நின்று சிவசிவ என்று கூறி அணிய வேண்டுமென்கின்றார் நாவலர் பெருமான். தற்போதைய சூழ்நிலையில் விரதம் என்ற போர்வையில் ஆலயம் சென்று வருகின்றார்களேயொழிய எமது விபூதிக் கலாசாரத்தை பெரும்பாலானோர் பின்பற்றுவதில்லை. இக்கலாசாரத்தை தளர்வின்றி வளர்க்க வேண்டுமானால் சைவர்களாகிய நாம் இதற்கு எம்மை அர்ப்பணித்தல் வேண்டும். எனவே பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழல் வேண்டும்.

இதனால் நாவலர் பெருமான் சைவ சமயத்திற்கு அல்லது சைவ சமய கலாசாரத்திற்கு செய்த சேவையின் பயனைநாம் அடைய வாய்ப்புண்டு. எனவே நாவலர் பெருமானால் பங்களிப்புச் செய்த இந்து சமயத்தின் அல்லது சைவ கலாசாரத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகிய விபூதிக் கலாசாரம் ஓரளவேனும் இன்றும் வளர்ந்து வருகின்றதென்றால் நாவலர் போட்ட அத்திவாரமே காரணமாகும். மேலும் சைவ சமயத்தவர்கள் சைவ மதத்தினைவிட்டு பிறமதத்தினை தழுவ முயல்வது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

**நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல்**

**சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே**

என்பதை நாங்கள் ஞாபகத்தில் வைத்தல் அவசியமாகின்றது. நாவலர் பெருமானின் செயற்பாடுமட்டும் முக்கியமல்ல

விளைவுகளும் முக்கியமாகும். எனவே நாவலர் பெருமானால் வளர்ச்சி அடையச் செய்த விபூதிக் கலாசாரத்தை வளர்ப்பதற்கு இங்குள்ள சைவ சமய கலாசார நிலையங்களின் பங்களிப்பும் முக்கியமாகும். குறிப்பாக நல்லை ஆதீனம், வேதாந்தமடம், சைவ பரிபாலன சபை, சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை என்பன தற்பொழுது எமது விபூதிக் கலாசாரம் வளர்வதற்கு பல்வேறு பங்களிப்புகளைச் செய்து வருகின்றது. குறிப்பாக சைவ பரிபாலன சபை நடாத்தும் பரீட்சைகள், (பாடசாலை மட்டத்தில்) அதற்காக மாணவர்களுக்கு வழங்கும் பரிசுகள் என்பன எமது மதம் வளர்வதற்குச் செய்யும் அளப்பரிய பங்களிப்பாகும். அத்துடன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை எமது சைவ கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு "ஞானச்சுடர்" என்னும் நூலினை பிரசுரித்து வெளியிட்டு வருகின்றார்கள்.

அத்துடன் ஞானச்சுடருடன் சேர்த்து அனுப்பும் விபூதிப் பிரசாதம் சைவ வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் செய்யும் பெரிய பங்களிப்பாகும். அத்துடன் மலர் வெளியிடும் போது நடைபெறும் சமயச் சொற்பொழிவுகள் ஞானச்சுடருக்கு கட்டுரை எழுதி வருபவர்களுக்கு வழங்கும் பரிசுகள் என்பவையும் எமது கலாசாரம் வளர சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இயங்கிவரும் சைவ கலைபண்பாட்டுப் பேரவை செய்யும் அளப்பரிய சேவையாகும். இவ்வாறு மேற்குறிப்பிட்ட சைவ நிலையங்கள் இவற்றினைச் செய்து வராவிட்டால் எமது சைவ மதமும் கலாச்சார மரபுகளும் தளர்ச்சி அடைய வாய்ப்புண்டு. எனவே அளப்பரிய பங்களிப்பினை வழங்கிவரும் சைவ கலாச்சார அமைப்பினை நாம் பாராட்டாது இருக்க முடியாது. மேலும் விபூதியினை திரிபுண்டரமாகத் தரிப்பதால் விஞ்ஞான ரீதியாக எமது உடலிலுள்ள இரத்தம் செவ்வனே ஓடுவதற்கு வழிவகுக்கின்றது. விபூதியை மட்டுமன்றி சந்தனத்தை நெற்றியில் வைப்பதால் எமது உடல் குளிர்ச்சி அடைவதற்கு நிறைய வாய்ப்புண்டு. நெற்றியில் விபூதியை பூசுவதால் இருப்பத்தைந்து வீதம் (25%) உடலில் ஒளி காணப்படுகின்றதென்றும் இதைப் பூரணமாக நிறைவேற்றினால் அதாவது நெற்றி கைகள், மார்பு, கால்கள், முதுகு போன்றவற்றில் திரிபுண்டரமாக விபூதியைத் தரிப்பதால் எழுபத்தைந்து வீதம் (75%) ஒளியைக் கொடுக்கின்றதென்றும் விஞ்ஞான ரீதியாகக் கண்டறிந்துள்ளார்கள். எனவே எமது சைவ மதம் கலாச்சாரரீதியாக சிறப்படைவதுடன் விஞ்ஞான ரீதியாகவும் வளர்ச்சியடைகின்றது. சிறப்பாக பகவான் சத்திய சாயிபாபா புட்டபத்திக்கு வரும் சாயி அடியார்களுக்கு திருநீற்றைக் கொடுத்து ஆசீர்வதிக்கின்றார். இதிலிருந்து தற்காலத்திலும் விபூதியின் சிறப்பினை அறிய முடிகின்றது. எனவே சைவமக்களாகிய நாங்கள் விபூதியைத் தரிப்போம். விபூதிக் கலாசாரத்தை வளர்ப்போம்.

முற்றிற்று

உ

# தமிழும் மெய்ந்நெறியும்

- இரா சாந்தன் J.P. அவர்கள் -

உலகம் இன்ன உண்மையியல்புடையதென்று தனது அமைப்பிலே அறிவிக்கும் மொழி ஒன்று உண்டாயின் அது தமிழ் மொழியே ஆகும். உலகத்தை அளக்கின்ற மேன்மையுடையது தமிழ் என்று சேக்கிழார் சுவாமிகள் அருளினர். "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" என்பது அவர் திருவாக்கு. உலக உண்மையை அளந்து முடிவுகட்டி அவ்வுண்மைகளைத் தன் அமைப்பிலே அளந்து காட்டுகின்ற மொழி தமிழ் மொழியே ஆகும்.

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் தமிழ்மொழி ஒப்பநின்று, அன்றும் இன்றும் குன்றாததாய் நிலவுகின்றது. முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனாய், ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாய் இறைவன் நிற்பது போல, நமது தாய் மொழியாகிய தமிழும் முதுமையும் புதுமையும் உள்ளதாய், முடிவு இல்லாததாய், எங்கும் ஒளி வீசி, உயர்தனிச் செம்மொழியாக வளர்ந்து வருவது தமிழர் செய்த தவப் பேறேயாகும்.

பொதியமலையிற் பிறந்தது. பாண்டிய மன்னர் புகழில் வளர்ந்தது. தமிழ்ச் சங்கத்தில் தங்கியிருந்தது; நெருப்பிலும் அணையாது நின்றது. நீரிலும் எதிரேறிச் சென்றது. கற்றவர் உள்ளம் கனியவைத்தது. பூமகள், நாமகள் மருங்கிற் பொருந்தி வளர்கின்றது தெய்வத்தன்மை வாய்ந்த செந்தமிழ்.

மூவாயிரமாண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்ட தொல்காப்பிய நூல் தமிழின் இலக்கண முறைகளையெல்லாம் எழுத்து, சொல், பொருள் (அகப்பொருள், புறப்பொருள், மெய்ப்பொருள்) என்ற வகையில் எடுத்துக் கூறிப் பண்டைத் தமிழர் பெருமைக்கு எடுத்துக்காட்டாய் இலங்குகின்றது. தொல்காப்பிய நூற்பாக்களில் 'என்மனார் புலவர்' என்று கூறியதற்கு இணங்க, தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரேயே, புலவர்கள் பலர் இருந்தனராயின், இதற்கும் எத்தனையாயிரமாண்டுகளுக்கு முன்னரே தமிழ் வழக்கில் இருந்திருக்க வேண்டும். இன்னும் தொல்காப்பியத்தில் மெய்ந்நெறிக்கு அடிப்படையான முனைவன். சேயோன், மாயோன் வழிபாடுகள் வெள்ளிடை மலைபோல் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சிவம், சத்தி, நாதம், விந்து என்று முறைப்படுத்தி உண்மைப் பொருள் நூல்கள் பேசும். இவ்வுண்மைப் பொருளியல்பையே தமிழ் எழுத்திலக்கணம் தமிழ் எழுத்துக்களாகிய ஒரேபொருளுக்கு ஒலிவடிவம், வரிவடிவம் என வகுக்கின்றது.

இனி அவ்வெழுத்துக்கள் உயிர் எனவும் மெய் எனவும் இருவகைப்படும்.

உயிர் என்பது ஆன்மாக்கள், மெய் என்பது அவ்வான்மாக்கள் பொருந்தி நிகழும் உடம்புகள், உடம்பினுள் உயிர்வந்து சேரும் என்பது உண்மை நூல்கள் கண்ட முடிபுகளில் ஒன்று, "உடன் மேல் உயிர் வந்து ஒன்றுவதியல்பே" என்பது தமிழ் இலக்கணம்.

உயிர்களுக்கு அவ்வவற்றின் மலங்காரணமாக உடம்புகள் ஏற்படும். ஆணவம், கன்மம், மாயை என மலங்கள் மூவகையாம். இவ்வாறு மூன்று மலத்தால் வரும் உடம்புகள் மிக்கவலிமையுடையன. ஆகையால் அவைகள் வல்லின மெய்கள் இரு மலத்தால் **இடையினம்** எனவும், ஒரு மலத்தால் பெறுவன **மெல்லின மெய்கள்** எனவும் பெறும் அமைப்பினைக் காண்பது பயனுடையதாம்.

இனி ஒரு வாக்கியத்திலே எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற பகுதிகளும், இவ்வாறே உண்மை நூற் பொருளைக் காட்டி நிற்கின்றதா என ஆராய்வோம். ஒரு உயிர் "சீலமின்றி..... அறிவின்றித் தோலின் பாவைக் கூத்தாட் டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை" தான் கிடந்த இடத்தினின்றும் "எழுவாயாக" என்று இறைவன் கருணையால் எடுத்து எழுவித்தபோது இறைநூல்களில் இவை யிவை செய்யத்தக்கவை என்று விதித்தபடிக்குள்ள செயப்படுபொருள் களைச் செய்யின் உறுதிப்பயனிலே நிலைபெறும் என்ற கருத்துத் தமிழ் வாக்கிய அமைப் பிலே உள்ளுற அமைதல் கண்டுகளிப்போம்.

ஆகவே மெய்ந்நெறி அமைப்பும் தமிழின் மொழியிலக்கண அமைப்பும் ஒன்றே என்பது வெளிப்படையாகும். இனி அகம், புறம் எனப் பொருள்கள் இருவகை யாம். அகப்பொருள் இலக்கணம், புறப் பொருள் இலக்கணம் என்பன தமிழ் மொழிக்கே சிறப்பாயுரியன. இவ்வமைப்பும் வரையறையும் வேறெந்த மொழியிலு மில்லை. மெய்ந்நெறியாகிய சிவநெறி இயல்பும் இதுவே. அகமும், புறமும் என்ற இருவகையிலே உலகம் அடங்கும். தமிழ்ப் பொருளிலக்கணம் உலகத்திலே அகம், புறம் ஆகிய பொருள்களின் உண்மையியலையே, உரிப்பொருள், கருப்பொருள் என வகுத்து விளக்கியது.

களவு, கற்பு என்ற அகப் பொருட் பிரிவுகளையும், மெய்ப்பாட்டியலில் எண்வகை மெய்பாடுகளையும், மரபு முதலிய பிற அமைப்புக்களையும் இவ்வாறே பொருளியல்புகளைக் குறிப்பனவாகக் காண்கின்றோம்.

**புணர்ச்சி** என்றசொல்லுக்கு பொருள் 'ஒன்றோடு ஒன்று சேர்வது' என்று கூறவேண்டும். உலகத்துத் தோன்றிய உயிர்கள் எல்லாம் ஆணும், பெண்ணும் கூடியபோது இன்பத்தையடைகின்றன. எழுத்துக்களும் ஒன்றொடொன்று கூடிய போதுதான் சொல்லின்பம், பொருளின்பந் தோன்றுவதைக் காண்கின்றோம். சொற் களை கட்டுவதால் யாப்பு என்றும், சொற்கள் தொடர்ந்து நிற்பதால் தொடர்பு எனவும், பரந்துபட்ட ஓசையுடைமையால் பா எனவும் பெயர் பெற்றது செய்யுள். எழுவகைத் தாதுக்களால் மனிதனது உடம்பு உயிருக்கிடமாக அமைந்திருப்பது போல எழுத்து, அசை, சீர், தளை, முதலிய உறுப்புக்களால் பொருளுக்கிடமாக

அமைந்திருப்பது பாட்டு. உடம்பிற்கு யாக்கை என்பது பெயர். பாட்டிற்கு யாப்பு என்பது பெயர். இவ்வொற்றுமையை மதிக்கிறோமா?

தனு, கரணம், புவனம், போகம் என்ற பொருள்களை வரையறுத்தலால் தமிழ் இலக்கணத்துள்ளே பொருள் இலக்கணமே சிறந்ததாய் எண்ணப்படுகின்றது. எழுத்தும், சொல்லும், வல்லாரைப் பெற்றும் பொருள் வல்லாரைப் பெறாதபோது, பாண்டியன் "எழுத்துஞ் சொல்லும் பெறுதல் பொருள் பற்றியன்றே" என்று உணர்ந்து இறைவனிடம் பொருளிலக்கணம் பெற வேண்டினான் என்பது இறையனார் அகப் பொருள் வரலாற்றிற் கண்டது. தமிழ் இலக்கணப் பொருளையே சிறப்பாகக் கொண்டது. திருவள்ளுவர் குறள் வெண்பாவில் நீதியையமைத்து காட்டுவதற்கு புணர்ச்சியிலக்கணமே போதிய சான்றாயிருந்தது.

**"கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு**
**மொணடொடி கண்ணேயுள"**

புணர்ச்சியிலக்கணத்தைத் துணையாகக் கொண்டுதான் இக்குறள் வெண் பாவை யாத்திருக்கின்றார் வள்ளுவர் பெருமான்.

ஆகவே தமிழ் இலக்கணவமைப்பு மெய்ந்நெறியியல் பின் அமைப்பையே உட்கொண்டு விளங்குவதைக் குறிப்பிட்டோம். ஒரு நாட்டு செல்வங்களுள் மொழியும் ஒன்றாகும். மொழித்துணையின்றி ஒரு நாட்டார் நாகரீகமாகவும் வசதி யாகவும் வாழ்வதரிது. முன்னோர் அரும்பாடு பட்டீட்டிய அறிவுச் செல்வமெல்லாம் மொழி வாயிலாகவே போற்றப்பட்டு வருகின்றது. தொன்று தொட்டு இன்றுவரை கணக்கற்ற தலைமுறைகளாய்த் தொடர்ந்தும் திரண்டும் வரும் அரும் பெருஞ் செல்வத் திரட்டாகிய தமிழை எத்துணைக்கவனமாகவும், கண்ணியமாகவும் பேணுதல் வேண்டும்.

தமிழ்க் கலையின் சிறப்பை தில்லைக் கூத்தனது தாண்டவத்திலும், இசைக் கலையின் தெய்வீகத்தன்மையை ஏழு வல்லமைகளைக் குறிக்கும் ஏழு நெட்டுயிரெழுத்துக்களிலும் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) கவிதையின் கட்டழகை மோனை, எதுகைகளின் பல்வேறு பிரிவுகளிலும், மருத்துவக்கலையின் வளப் பத்தை சித்தவைத்தியத்தின் தொன்மையிலும், யோகமுறையிலும் உண்ணா விரதத்திலும், அகத்துறையறிவைத் திருக்குறள், திருக்கோவையார் முதலிய நூல்களிலும், தமிழரின் மெய்ப்பொருள் ஞானத்தைத் தொல்காப்பியம், தேவாரத் திருமுறைகளிலும் கண்டுணர்ந்து தெளிவோமாக.

முருகப் பெருமானின் திருவுருவமே தூய எழுத்துக்களாய் அமையப் பெற் றுள்ளனவென்று சிவ, ஆகம நூல்கள் இயம்புகின்றன. அவனருளாலே அவன் தாள் வணங்கி மேலும், ஆராய்ந்து முடிவு கட்டுவோமாக. இத்துறையில் எத் தனையோ வழிகாட்டிகள் உண்டு. அவற்றை மறவாது, இங்கும் விஞ்ஞானமேம் பாடுள்ள மேலை நாடுகளிலும் புத்தாராய்ச்சி ஒளி மூலம் மெய்ந்நிலை விளக்க முற்படுவோமாக.

உ



# பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் சிவன் பற்றிய கருத்துக்கள்

- திருமதி கு. செந்தில்பிரியா அவர்கள் -

ஆதியும் அந்தமும் இல்லாத அநாதியான எமது சைவ சமயமானது எப்போது, எங்கே, யாரால் முதலில் தோற்றுவிக்கப்பட்டது என திட்டவட்டமாக கூறமுடியாத பெருமை வாய்ந்த சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்குகின்றது. சிவம் என்பதன் பொருள் மங்கலம், சுபம், பாக்கியம், பேரானந்தம் என பொருள் படுகின்றது.

தென்னாட்டிலே வளர்ச்சி பெற்ற சைவ சமயத்தினுடைய முக்கியமான வரலாற்றுக் கூறுகளை பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்தும், புராதன தொல்பொருட்கள், நாணயங்கள், முத்திரைகள் ஆகியவற்றில் இருந்து அறிந்து கொள்ளப்படுகின்றது. வட இந்தியாவில் வைதீக சைவம் என்ற பெயரிலும் வளர்ச்சியடைந்ததை சைவத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்த வகையில் இக்கட்டுரை எழுதுவதன் நோக்கம் பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் சிவன் பற்றிய கருத்துக்களை ஆராய்ந்து அறிந்து கொள்வதாகும்.

தமிழ் இலக்கியங்களுள் மிகவும் பழமை வாய்ந்த இலக்கண நூலான தொல்காப்பியத்தின் பொருளதிகார சூத்திரத்தில்

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரு உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி மருதம் நெய்தலாச்
சொல்லிய முறையிற் சொல்லவும் படுமே"

(தொல். கா. பொ.5)

எனக் கூறப்படுகிறது. மாயோன், முருகன், இந்திரன், வருணன் ஆகிய

நான்கு தெய்வங்கள் பற்றி குறிப்பிட்டு; சிவனை குறிப்பிட்ட நிலத்திற்குரியவனாக கூறப்படவில்லை. காரணம் குறிப்பிட்ட நிலத்திற்கு சிவன் மூத்தவன் என்பதினால் குறிப்பிட முடியவில்லை என்றும், நன்றாகத் தெரிந்த ஒருவரை மீண்டும் மீண்டும் சொல்வதினால் பிரயோசனம் இல்லை எனவும், மரியாதைக்குரியவரை சுட்டி ஒருவர் பெயர் கூறிச் சொல்வது அவருடைய மரியாதையைக் குறைக்கும் என்றும் இத்தகைய காரணங்களினால் சிவனை ஒரு நிலத் தெய்வமாகச் சுட்டப்படவில்லை என்றும் இவற்றுடன் மேலே கூறப்பட்ட "மாயோன் மேய மைவரை உலகம்" என்பதில் சேயோனை சிவனின் மகனான கந்தனோடு ஒன்றிக்கப்படுகின்றதுடன் பாலை நிலத்துக்குரிய கொற்றவையை சிவனின் துணைவியாகிய உமையுடன் போற்றப்படு கின்ற செய்திகளை நாம் அறிகின்றோம். இவற்றினூடாக சிவன் பற்றிய செய்தி அக்காலத்தில் உள்ளது என்பதை ஊகிக்க முடிகின்றது.

தொல்காப்பியத்திற்கு பலர் உரைகண்டுள்ளனர். அவர்களுள் உச்சி மேற்புல வர் கொள்நச்சினார்க்கினியார் அற்புதமான உரை ஒன்று வகுத்துள்ளார். அச்செய் யுளியல் உரையில் அப்பெருமான் மேற்கோள் காட்டும் பாடல் ஒன்றில் கணபதி பற்றியும் அவன் தன் தந்தையாம் சிவபிரான் பற்றியும் பேசப்படுகின்றது.

**"தடந்தாட் கொத்த தமணியச்சிலம்பு**
**மடந்தாழ் கச்சைப் பாம்பொடுமிளிர**
**வென்றாடு திருந்தானத வியத்தகை துடி கொட்ட**
**நின்றாடு மழகளிந்தை நினைவாரே வினையிலமே"**

என்ற பாடலில் கணபதி ஆடுவதும் அவ்விளையாட்டைக் கண்டு தந்தையான சிவபெருமான் மகிழ்ந்து கைகொட்டி சுவைத்தலும் கூறப்பெற்றுள்ளது. செய்யுளியல் 19வது நூற்பாவின் உரையில் நச்சினார்க்கினியார் எடுத்துக்காட்டிக் கூறுகின்றார். இதே போன்று இன்னொரு செய்யுளில்,

**"கொடிநிலை கந்தழி வள்ளி எனவரு நீங்கு சிறப்பின்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே"**

என்பதில் கந்தழி என்பது பற்றுவிட்டவன், பற்றினை அழிப்பவன் என்றவாறு குற்றம் நீங்கிய அச்சிறப்புடைக் கடவுளை வாழ்த்துவதாகவும் கருத முடியும். நச்சினார்க்கினியார் உருவமற்ற சுதந் திரமான மேலான உட்பொருள் எனத் தமது உரையில் சுட்டியிருப்பதும் இதனை உணர்ந்தும் இவை சித்தாந்தச் செம்பொருள் துணிபினைத் துலக்கும் ஓர் பரி மாணமாகவும் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட பொருள்களில் தொல்காப்பியத்தில் சிவன் பற்றிய கருத் துக்கள் காணப்படுகின்றது. எனினும் சிவன் பற்றிய கருத்துக்கள் வெளிப்படையாக

இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப் பாட்டுக்களில் சிவன் பற்றிய அதிகமான வர்ணனைகளைக் காணமுடிகின்றது. எனினும் இவற்றுள்ளும் "சிவன்" என்ற பெயர் நேரடியாக சுட்டப்படவில்லை.

* தாள்சடை பொலிந்த அருந்தவத்தோன், * முக்கட்செல்வன், * கறை மிடற்று அண்ணல், * முதுமுதல்வன், * முக்கணான், * ஆலமரச் செல்வர், * கணிச்சியோன், * மைங்கட்பார்பான், * காய்கடவுள் என்னும் பல்வேறு அடை மொழிகளில் வர்ணித்துள்ளன.

அக் கடவுளர்களுக்குரிய உருவப் பொலிவும், அங்க அடையாளங்களும் அத் தெய்வத்திற்கு நிலவிய உருவ வழிபாட்டினை எடுத்துக்காட்டுவதாகவே கொள்ளலாம்.

இவ்வர்ணனைகளால் அக்கடவுள் ஆனவன் * நீண்ட சடையை உடையவன், * சடையிலும் மார்பிலும் கொன்றை மாலை அணிந்தவன், முடிமேல் பிறைச் சந்திரனை அணிந்தவன், * முடிமேல் கங்கையை தாங்கியவன், * மூன்று கண்களை உடையவன், * கழுத்தில் விசக்கறை உடையவன், * கையில் கபாலம் ஏந்தியவன், * எட்டுக்கைகள் உடையவன், * புலித்தோல் உடையை அணிந்தவன், * உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டவன், * ஆலமரத்தின் அடியில் இருப்பவன், * கரங்களில் மழுவை ஆயுதமாக ஏந்தியவன், * இடபத்தை வாகனமாகக் கொண்டவன், * எரிந்த சாம்பலை பூசியவன் போன்ற வர்ணனைகளில் சிவனுக்குரிய பல்வேறு பண்புகளும், குணாம்சங்களும் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இத்தகைய குறிப்புக்களிலிருந்து சிவனானவன் வேறெந்தக் கடவுளுடனும் இணைக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. தொகைநூல்களில் சிவன் பெரும் தெய்வமாக வணங்கப்படவில்லை எனக் கூறும் ஆய்வாளரிற் சிலரும் இறுதியிலே "சிவனுக்குரிய அடைமொழிகள் பலவற்றை நோக்கினாலும் சங்கத்தமிழ் பாடல்கள் பலவற்றில் இறை துதியாக சிவனே பெருமளவில் வணங்கப்பட்ட கடவுள் என்றே முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

சிவனின் குறிப்புக்களை எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் தொகுத்துப் பார்த்த நாம் அந்நூல்கள் சிலவற்றினை விரிவாக நோக்குவோம் எனின் சிவன் பற்றிய கருத்து எமக்கு பூரணமாகும்.

எட்டுத்தொகை நூல்களான புறநாநூறு, கலித்தொகை, அகநாநூறு, பரிபாடல் போன்ற அகப்புறப்பாடல்களில் சிவன் பற்றிய கருத்துக்கள் தனித்தனியே உள்ளன.

புறநாநூற்று 56ஆவது பாடலில் உலகத்தைக் காக்கும் தெய்வங்கள்

சிவபெருமான், பலராமன், திருமால், முருகன் என்னும் நால்வரென்றும் அவர்களுள் முதல்வன் சிவபெருமான் என்றும் கூறப்படுகின்றது.

**"பெருமலை விடரகத்து அருமிசைக்கொண்ட**
**சிறியிலை நெல்லித்தீங்கனி குறியாது ஆதல்**
**நின்னகத்தடக்கிச் சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே**
**பால் புரைபிறைநுதற் பொலிந்த சென்னி நீலமணிடற்று**
**ஒருவன் போல மன்னுக பெரும நீயே"**

(புறநானூறு 91:8-10, 5-7)

என்றும் புறநானூற்று இன்னொரு பாடலில் கடையெழுவள்ளல்களுள் ஒருவனாகிய அதியமான் நெடுமான் அஞ்சி ஏறுவதற்கரிய மலையுச்சியில் அரிதாகக் கிடைத்த நெல்லிப் பழத்தை அதன் பெருமையைத் தன் மனத்துள் அடக்கி அச்சமயம் அங்கே வந்த ஔவையாருக்கு அளித்தான். அதனை உண்ட பின் அதன் சுவையை அறிந்து அவனைப் பார்த்து "நீ நஞ்சையுண்டும் இறவாம லிருந்த சிவ பெருமானைப் போல நிலை பெற்றிருப்பாயாக" என வாழ்த்துவதனூடாக சிவன் பற்றிய கருத்துக்கள் தெளிவாகின்றன.

புறநானூற்று இன்னொரு பாடலில் சிவபெருமானுக்கு கோயில் இருந்த தாகவும் கூறப்படுகின்றது. கோயில்களை அரசர்களும் வலம் வருதலுண்டென்பதும் அவ்வாறு வரும் போது வெண்கொற்றக்குடை பணிய வேண்டும் என்பது புறநானூற்று ஆறாவது பாடலில் -

**"முக்கட் செல்வர் நகர் வலம் செய்தற்கண்**
**நின்குடை பணிக"**

எனக் கூறப்பட்டுள்ளது. இது காரிகிழார் என்னும் புலவர் பெருமானால் பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதியைப் பாடியதாக அமைகிறது. இந்த வகையில் புறநானூற்று பாடல்கள் பலவற்றில் ஆங்காங்கு சிவன் பற்றிய கருத்துக்களையும் அவனுக்குரிய ஆலயம் இருந்த செய்தியையும் அறிய முடி கின்றது.

கலித்தொகை தரும் சிவன் பற்றிய செய்தியானது இராவணன் கயிலையைப் பேர்த்த செய்தியும் அவன் துன்புற்ற செய்தியும் உவமையாக அமைக்கப் பட்டுள்ளது. (கலி - 38: 1-9) இன்னும் சிவன் நிறம் செந்நிறம் என்பது,

**"ஆனேற்றுக் கொடியோன் எதிரிய இலவமும்"**

(கலி - 26:5)

என அமைந்துள்ளது கலித் தொகையில் முதற்பாடலாகிய கடவுள் வாழ்த்தில் சிவபெருமானுக்குரிய பாண்டரங்கம், கொடுகொட்டி, கபாலம் என்ற மூன்று

கூத்துக்களும் கூறப்பட்டுள்ளன. இவை கலித்தொகையில் சிவன் ஆடல்பாடல்களில் வல்லவன் என்ற தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றன.

அகநானூற்றில் சிவன் பற்றிய கருத்துக்களாக சிவனுக்கு ஆலமுற்றமென்ற தலம் ஒன்று கூறப்பட்டுள்ளது "ஞாலம் நாறும் நலம் கெழுநல்லிசை நான்மறை முதுநூல் முக்கட் செல்வன் ஆலமுற்றம் கவின் பெறத்தையே பொய்கை" (அக. -181:15-18) என்ற இவ்வடிகளும், ஒரு புலவர் மாலைப் பொழுதில் கடற்கரையில் நின்றார் மேல்க் கடலில் சூரியன் மறைவதையும் அது செவ்வானம், கீழே நீலக் கடல் இக்காட்சியைக் கண்ட அவருக்குச் சிவனும், திருமாலும் நினைவுக்கு வரு வதாக கூறுகின்றார். இதனை "வெகுவருகடுந் திறல் பெருந்தெய்வத்து உரு உடன் இயைந்த தோற்றம் போல அந்திவானமொடு கடலாகி கொளா அ" (அக. 360:6-9) என்னும் அடிகளின் மூலம் அகநானூற்றில் சிவன் பற்றிய கருத்துக்களை அறிய முடிகின்றது.

பரிபாடலில் சிவனுக்கு மதுரையில் ஆதிரைத் திருவிழா நடைபெற்றமை (பரிபாடல் : 11:74-78) அடிகளிலும். திரிபுர சங்காரத்தைப் பற்றிய விரிவான செய்தி கள் (பரி. -5:22-35) அடிகளில் கூறப்படுகின்றன.

சங்க இலக்கிய பத்துப் பாட்டு நூல்கள் தாங்கியுள்ள சிவன் பற்றிய கருத் துக்கள் மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் சிறுபாணாற்றுப்படை, திருமுருகாற்றுப் படை போன்ற இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன.

மதுரைக் காஞ்சியில் ஐவகைப் பூதங்களையும், மழு என்னும் ஆயுதத்தை உடையவரும் என்ற கருத்தமைந்த செய்யுள் உள்ளது.

**"நீரு நிலனுந் தீயும் வளிப்பு**
**மாவிசும் போடைந்துடனியற்றிய மழுவாளெடியோன்"**

(மதுரை 453 - 455)

என்ற அடிகளாலும் மலைபடுகடாம் என்னும் இலக்கியத்தில் "நதிரம்" என்னும் மலைமேல் சிவபெருமானுக்குத் திருக்கோயில் இருந்ததாகவும் அம்மலை இப்போது திருவண்ணாமலைக்கு வடமேற்குத் திசையில் திரிசூரிகிரி எனவும் பருவதமலை எனவும் வழங்குகின்றது. இதனை

**"பேரிசை நவிர மே எயுறையுங்**
**காரியுண்டிக் கடவுள்"**

(மலை: 82-83)

என்ற அடிகளாலும், சிறுபாணாற்றுப்படையில் பொதியில் மலைப்பகுதியை ஆண்ட ஆய் ஆண்டிரன் தனக்கு நீலநாகம் அளித்த ஆடையை ஆலமர் செல்வற்கு அளித்தான் என்ற அரிய குறிப்பு காணப்படுகின்றது. இது புறநானூற்று பாடல்களில் அவனைப்பற்றி கூறப்படாதவொன்றாகும்.

இவ்விலக்கியங்களின் பின்னர் எழுந்த திருமுருகாற்றுப்படையில் "வெற்றிக் களத்திலே உயர்த்திய இடபக் கொடியை அவன் கொண்டிருக்கின்றான். அவன் உடம்பின் ஒரு பாகத்தில் உமையாள் உறைகின்றாள். அவன் பலர் புகழும் திண் ணிய தோள்களை உடையவன் முக்கண்கள், மூவெயில் முடுக்கிய முரண்மிகு செல்வன் எனவும் ஆல்கெழுக்கடவுள் எனப் போற்றுகின்றது.

................. வெள்ளேறு
வலவையினுயரிய பலர்புகழும் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிகையா முக்கண்
மூவெயில் முடுக்கிய முரண்மிகு செல்வன்

(திரு.மு: 151-154)

ஆல் கெழுக்கடவுள்

(திரு.மு: 256)

என அமைந்துள்ளது. எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களில் ஆங்காங்கு காணப்படும் பாடலடிகள் மூலம் சிவன் பற்றிய செய்திகளைத் தருவதோடு அக் கால மக்களின் வழிபாட்டு முறைகள் அவர்கள் அணியும் அணிகலன்கள் அவர்கள் தாங்கியுள்ள சிவனின் மறுபெயர்களான இறையனார், உருத்திரன், சத்தியநாதன், பெருந் தேவனார், வெண்பூதி என்ற பெயர்களும் கொண்டு அழைக்கப்பட்டமை அக்காலத்தில் நிலவிய சிவன் பற்றிய கருத்துக்களை அறிய ஆதாரமாக உள்ளன.

சிலப்பதிகாரம், மணிமேகலை காவியங்களிலும் சிவனின் பெருமை பரவலாக பேசப்படுகின்றதைக் காணலாம். சேரன் செங்குட்டுவன் சிவன் அருளால் பிறந்தவன் எனவும் சிவபூஜை செய்பவன் எனவும் சிலப்பதிகாரம் விபரித்துள்ளது. இங்கு சிவனது ஆடல்களும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. சிவனுக்கு ஆலயம் இருந்ததை சிலப்பதிகாரம் -

ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில்
நீலமேனி நெடியோன் கோயில் என்பது போல
பிறவாயாக்கைப் பெரியோன் கோயில்
நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயில்

(சிலம்பு :5,7 காதை)

எனக் கூறப்பட்டுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களில் சிவன் பற்றிய கருத்துக்கள் ஆங்காங்கு செறிந்து காணப்படு வதுடன் அவையே பிற்பட்டகால சைவசமய வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைந் துள்ளது என்பதை உணர முடிகின்றது.

சுபம்

உ

# தினம் தினம் ஆனந்தமே....

- சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்-

பெரும்பாலான மனிதர்கள் வாழ்க்கையில் துன்பத்திற்கு ஆளாகும்போது தான். வாழ்க்கையை ஆழமாகப் பார்க்கவும். அதிலிருந்து கற்றுக்கொள்ளவும் செய்கிறார்கள். இது புத்திசாலித்தனத்தின் அறிகுறியல்ல. ஆனந்தமாக இருக்கும் போதுதான், வாழ்க்கையை மிக ஆழமாகப் பார்க்க வேண்டும்.

ஆனால், சந்தோஷமாக இருக்கும் போது பலரும் வாழும் விதம் மிகவும் மேலோட்டமானதாகவும், அற்பமானதாக வும் இருக்கிறது. வாழ்வில் ஏதாவது ஒரு அசம்பாவிதம் நடந்தாற்றான் அவர்களால் வாழ்க்கையை ஆழமாகப் பார்க்க முடிகிறது.

## ஆழமான ஆனந்தம் எங்கே?

நீங்கள் ஆசிரமத்தில் தங்கி இருப்பதாக யாரிடமாவது சொல்லிப்பாருங்கள்... உடனே அவர்கள், "ஓ! என்ன ஆயிற்று? உங்கள் கணவர் இறந்துவிட்டாரா? உங்கள் குழந்தை இறந்துவிட்டதா? அல்லது வேறு ஏதாவது மோசமான சம்பவம் நிகழ்ந்துவிட்டதா? என்று துக்கம் விசாரிப்பார்கள்.

பெரும்பாலான மனிதர்கள், தங்களது வாழ்வில் ஏதாவது மோசமாக நடந்தால்த்தான். இல்லையென்றால் எல்லாமுமே தவறாகப் போனால்த்தான், வாழ்வின் ஆழமான பரிமாணத்தை நோக்கிப் போவார்கள் என்று கருதி இத்தகைய கேள்விகளைக் கேட்கிறார்கள்.

இது மனித குலத்தின் துரதிர்ஷ்டமான வரலாறு. ஆனால் இது இப்படி இருக்கத் தேவையில்லை. அதிகமான மக்கள் ஏதோ ஒன்றைச் செய்கிறார்கள் என்றால், அது சரியான செயலாக ஆகிவிடாது.

கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தாலே இதற்கு ஏகப்பட்ட உதாரணங்களை எடுக்க முடியும்.

1970களில் கிட்டத்தட்ட 80 சதவீத ஆண்கள் புகை பிடித்தார்கள். அந்தக் காலகட்டத்தில் அது சரியான செயலாகவே கருதப்பட்டது. புகை பிடிக்காமல் இருந்தால், நீங்கள் சரியான ஆண் இல்லை என்ற கருத்து அப்போது உரு வாக்கப்பட்டிருந்தது. அதை எல்லோரும் நம்பினார்கள்.

இளைஞர் சமுதாயமோ இதை கர்ம, சிரத்தையோடு பின்பற்றியது.

.ஆனால் இன்று புகை பிடிப்பது என்பது, ஒரு அபத்தமான செயல் என்ற பெரும் பிரச்சாரம் மிகத்தீவிரமாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன் பயனாக புகை பிடிப் போரின் எண்ணிக்கை இன்று நம்ப முடி யாத அளவு குறைந்திருப்பதை நீங்கள் கண்கூடாகப் பார்க்கலாம்.

இந்தப் பிரச்சாரமும், விழிப்புணர்



வும் இதே போலத் தொடர்ந்தால், இன்னும் 50 ஆண்டுகளில் எவருமே புகை பிடிக்க மாட்டார்கள்.

கடந்த காலங்களில் மக்கள் அதிகம் புகை பிடித்தார்கள். அதிகமாக இருமினார்கள். புற்று நோயால் பீடிக்கப் பட்டாலும் புகை பிடிப்பதைத் தொடர்ந் தார்கள் என்பதை எதிர்கால சந்ததியின ரால் நம்புவதற்கு கடினமாக இருக்கும் அப்படியொரு காரியத்தை மக்கள் கடந்த காலத்தில் ஏன் செய்தார்கள் என்பதை அவர்களால் புரிந்து கொள்ளக்கூட முடி யாது.

வாகனங்களில் இருந்து வெளி யேறும் புகையையே நாம் குற்றமாக்க முயன்று கொண்டிருக்கும்போது, மனி தர்கள் எப்படி புகை பிடித்திருக்கக்கூடும்? இரு தலை முறைகளுக்குப் பிறகு, புகை பிடிக்கும் பழக்கம் என்று ஒன்று இருந்த தாக அவர்கள் நம்பவே மாட்டார்கள்.

விக்டோரியா மகாராணி காலத் தில் இங்கிலாந்திலும், ஐரோப்பாவின் பல தேசங்களிலும் காச நோயால் பீடிக்கப் பட்டிருப்பது என்பது ஒரு நாகரீகமாகவே கருதப்பட்டு வந்தது.

இதை நீங்கள் நம்புவீரகளா? ஆனால் உண்மை அதுதான்.

காச நோய் இருப்பது என்பது அன்று நாகரீகமாக இருந்தது. நிறைய இளம் புத்திசாலிகளும், கவிஞர்களும், கலைஞர்களும் புத்திசாலிகள் என்றால் இருமிக்கொண்டே இருக்க வேண்டும் எனக் கருதியதால், காசநோய்க்கு சிகிச்சை எடுத்துக் கொள்ளக்கூட மறுத்தார்கள்.

அவர்களில் பலர் நோயின் தாக்கு தல் தீவிரமாகி, இறந்தும் போனார்கள். ஒருவர் ஆரோக்கியமாகவும், வலுவாகவும் இருந்தால், அவருக்கு மூளையில்லை; அவர் வெறும் மாமிச பிண்டம் என்ற கருத் தும் அப்போது நிலவியது.

காச நோய்க்கு நாம் பரிகொடுத்த

மிகச்சிறந்த கவிஞர்களில் ஒருவர் ஜான் கீட்ஸ் தனது நோய்க்கு சிகிச்சை எடுத்துக் கொள்ள மறுத்ததால் 25 வயதிலேயே அவர் இறந்தார். இது நடந்தது ஒரு நூற்றாண்டு அல்லது இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்புதான்.

இப்போது இதை நீங்கள் நம்புவீர்களா?

ஏனென்றால், உங்கள் சமூக அடையாளத்தோடு உங்களது புத்திசாலித்தனம் மிக ஆழமாக சிக்கிக் கொண்டால், பிறகு வாழ்வின் யதார்த்தத்தோடு பொருந்தி, உங்கள் மூளை வேலை செய்யாது, இதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

உங்களது மனம், உடல், உணர்வு ஆகிய மூன்றுமே உங்கள் வாழ்வின் ஆதாரமான உயிர் சக்திக்கு எதிராக வேலை செய்கின்றன. இதுதான் துயரத்தின் ஊற்றுக்கண்.

உங்களின் உயிர்சக்தி அளவற்ற ஆனந்தத்தை அடைய எப்போதும் ஏங்கிக் கொண்டிருக்கும்போது, உங்களது மனமும், உணர்வுகளும், சில நேரங்களில் உங்களது உடலும் எதிர் திசைகளில் சென்று கொண்டிருக்கின்றன. இது முட்டாள்தனமாக உள்ளது. இல்லையா?

நீங்கள் புரிந்துகொள்ளவே முடியாத, அளவிடக்கூட முடியாத ஆழமான முட்டாள்தனம் இது. முட்டாள்களால் தாங்கள் எந்த அளவுக்கு ஆழமான முட்டாள்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. உங்கள் வாழ்விற்கு எதிராகவே நீங்கள் செயல்படுவதால், இது மிகவும் ஆழமான முட்டாள்தனமாகும்.

(ஆனந்தம் இன்னும் வரும்)


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021-2263406
021 3219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www.sannithiyan.org

உ

# படங்கள் தரும் பதிவுகள்



ஆற்றங்கரையான் (பாகம் 2) - (03.08.2010)

மலர் வெளியீட்டு நிகழ்வின் போது...



நாம் முன் செய்தவற்றை இன்று அனுபவிக்கலாம்





ஆற்றங்கரையான் மலர் வெளியீட்டில்
சிறப்பு பிரதி பெறும் நிகழ்வின் போது...



ஆற்றங்கரையான் மலர் வெளியீட்டில்
பாலர் பாடசாலை ஒன்றுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டபோது...



சந்நிதியான் ஆச்சிரமத்தின் சமூக சேவைகள் வரிசையில் அன்பர் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி ஒன்றினை வழங்கும் நிகழ்வின் போது....



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் சிறப்பு பிரதி பெறும் நிகழ்வின் போது....

இறைவனின் குணம் கருணை



சந்நிதியான் ஆச்சிரமத்தின் சமூகப் பணிகளின் வரிசையில் அன்பர் ஒருவருக்கு முச்சக்கர வண்டி ஒன்றினை வழங்கும் நிகழ்வின் போது...



ஸ்ரீ மத் மயில் வாகனம் சுவாமிகளின் குருபூசை நிகழ்வில் நடைபெற்ற பஜனை நிகழ்வின் போது பஜனைக் குழுவினர்.....

உ

# அப்பர் தேவாரத்துள் சிவன் நாகத்தை அணிந்துள்ளமை பற்றிய சான்றாதாரங்கள்

- கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள் -

"சைவநெறி" மிகத்தொன்மையும், பழமையும், பெருமையும், சிறப்பும், மகிமையும் மகத்துவமுமிக்கது. எத்தனையோ புதிய மதங்களையும், நெறிகளையும், கொள்கைகளையும், தத்துவங்களையும் உலகுக்கீந்த தாய்ச்சமயம் சைவசமயமாகும். பண்பாடுகளையும், ஆசாரங்களையும், கோயில் நடைமுறைமையினையும், விரதங்களையும், விழாக்களையும், அன்றாடநடைமுறை ஆசாரங்களையும், வழிபாட்டு மரபுகளையும் விதிமுறைகள் என வகுத்துத் தந்த பெருநெறி சைவநெறியேயாம். இத்தனைக்கும் சான்றுகள் நம்மிடத்தில் உள்ளன.

சைவசமயத்தின், இந்துமதத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமானேயாவர். பூர்வகாலத்திலிருந்து நவீனகாலம் வரையும், இனியும் 'சிவவணக்கம்' பெரு மையுடனும், பெரும்பரம்பலுடனும் நிலை பெறும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்ட வண்ணமேயுள்ளன. சைவசமயப் பாரம்பரியத் 'தெய்வக்கோட்பாடு' மிகவும் பொருள் பொதிந்தது; ஆரவாரமற்றது; தத்துவார்த்தமானது; தனித்துவமிக்கது. சிவவணக்கம் கடுமையானது; ஆசாரமிக்கது; பெரும்பயன் தரவல்லது; மரணத்தையும் பிறவியையும் வெல்லவல்லது; இயற்கையோடொன்றியது. கற்றோர், ஞானிகள், யோகிகள், சித்தர்கள், பக்குவமிக்கவர்கள், விதிமுறைகளை அனுசரிப்போரே சிவனை - சிவவழிபாட்டை உவந்தேற்பர்; கடைப்பிடிப்பர்; மேற்கொள்வர். இளைஞர், குழந்தைகள் யுவதிகள், குடும்பஸ்தர் வழிபாட்டிலே தலைமை பெறுவது முருகவழிபாடேயாம். இயற்கையின் பெற்றிகளும், தாய்மையின் குணங்குறிகளும், ஞானானந்த அனுபவத்தைப் பெறவிரும்புவோரும் சக்திவழிபாட்டில் ஈடுபடுவர். செய்காரிய மனைத்தும் நிர்விக்கினமின்றி ஈடேற்றும் வல்லபம் விநாயக வழிபாட்டாலே காணத்தக்கது. தெய்வக்கோட்பாடுகள் ஆழமானவை. சிவனும், முருகனும் ஒருவரேயெனும் கோட்பாடு சைவநெறியிலே மிகமுக்கியம் பெறுவதொன்றாகும். இதற்கான சான்றுகளைப் புராணங்களிலே பரக்கக் காணலாம். அவற்றுட் தனிச்சிறப்புமிக்கது கந்தபுராணமாகும். புராணமரபு சமய நெறியையும், கடவுள்களையும் நிலை நிறுத்துவதற்கென்றே எழுந்ததாகும். புராணச் செய்திகளை மெய்ப்பிப்பன தேவாரத்திருமுறைகள். சிவனது பரத்துவத்தையும், உருவத்தையும், குணங்குறிகளையும்,

திருவிளையாடல்களையும், அற்புதங்களையும், மகிமைகளையும் எமக்குச் சான்றுகளாகத் தந்துள்ளவை திருமுறைகளேயாம். உலக அழிவிலே நிலம், மண், பிருதுவி என்பதே இறுதியிலழியும் என்பது ஒரு தலை. ஏனெனில் மண்ணும், கல்லும் இணைந்ததே இப்பூமி. எனவே பூமியே கடைசி வரை நிலைபெறுவது. இம்மண்ணுள், நிலத்துள் புற்றெடுத்து வாழ்வனவே நாகவர்க்கம். புற்றுள் வாழும் நாகம் சில வேளைகளிலே வெளியிலே உலாவுவதுமுண்டு. பாம்புக்கு 'கட்செவி' என்றும் ஒரு பெயருள்ளது. 'கண்ணும் செவியும்' ஒன்றேயாம். பாம்புக்குப் பகலிலே காது கேட்கும். கண் தெரியாது; இரவிலே கண்தெரியும் காது கேட்காது. குறிவைத்து நோக்கிக் கிரகிக்க வல்ல வல்லமை உடையது பாம்பு. மனவடக்கமும், சூர்த்தமெய்ஞ்ஞானமும் உடைய தென்பதனாலேயே சிவனும் நாகத்தைத் திருக்கழுத்திலும், திருச்சடையிலும் அணிந்துள்ளார்போலும். "பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்" என்பது தமிழ்ப் பழமொழி. சைவவழிபாட்டு மரபிலே உள்ள சிவவணக்கமும், இலிங்க வணக்கமும், நாகபூஷணி அம்மன் வழிபாடும், புற்றுலிங்க வழிபாடும், ராகுகேது வழிபாடும், நாகதம்பிரான் வழிபாடும், சூரிய, சந்திர கிரகணங்களும் பாம்பு - நாக வழிபாடு இயற்கையோடிணைந்து இன்று வரை நிலவுகின்றன என்பதற்குச் சான்றுகளாகும். சிவவழிபாட்டோடு பெரிதும் தொடர்பு கொண்டது திருமுறை வழிபாடாகும். தேவாரத் திருமுறைகளினாற் பெறும் சாந்திநிலை, திருப்தி நிலை வேறெவற்றினாலும் ஏற்படாது.

இன்றைய இளைஞர், யுவதிகள், பெண்கள், ஆண்கள் கைத்தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி திரைப் படங்கள் CD, DVD, வர்த்தகக்கல்வி, பொருளாதாரப்பாடத்திலே பெருவிருப்பு, பிறதேசத்து மொழிகளிலே அலாதி விருப்பு, விஞ்ஞானக்கொள்கைகளிலே வரும் மமதை, ஆணவம், அழிவுக் கொள்கை இன்னும்பல நவீன இனங்களிலே ஈர்ப்பும் கவர்ச்சியுங் கொண்டு வாழும்நெறி, பக்தி, சமயம், வழிபாடு, திருமுறை, மனிதாபிமானம், கீழ்ப்படிவு, பணிவு, தெய்வ நம்பிக்கை என்னும் மனிதக் குணங்களைக் கிஞ்சித்தும் கைக்கொள்வதாக இல்லை. இவை குறைகளல்ல அழிவுக்கான முதற்படி. எனவே நீளநினைந்து, மண்ணில் நல்லவண்ணம் வாழ முயல்வோருக்கான வழிபாட்டு வாய்ப்புக்கு இக்கட்டுரை பேருதவிபுரியும். தினமும் முருகனையும், சிவனையும் நினைந்து, நைந்துருகி வழிபடுவதற்கு ஈண்டு பயன்படும் 'அப்பர் திருமுறைகள்' இக்கட்டுரை வழியும், தொண்டைமானாறு செல்வச்சந்நிதிப் பெருமானது 'ஞானச்சுடர்' வழியும் உலகெங்கும் பரவுவதாகுக. அப்பர் சுவாமிகள் அருளிய தேவாரங்களுள் திருத்தாண்டகங்கள் தனிச்சிறப்பு மிக்கவை. முழுமுதற்கடவுளான சிவனது நாகமணிந்த தோற்றம் இத்திருத்தாண்டகங்களிலே சான்றுகளாகவே இடம்பெறுகின்றன. எனவே சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், சிவனார் நாகத்தை

அணிந்துள்ள சான்றுகளும் ஒரே முறையிலே இத்திரு முறைகளிலே காணக் கிடக்கின்றன. அர்த்தத்தையும், சிவ பரத்துவத்தையும் பக்தியையும் தர வல்லவை இத்தேவாரங்கள்.

இனி பாம்பு, நாகம், அரவு என்னுஞ்சொற்கள் இத்திருத்தாண்டகங்களிலே இடம்பெற்றுள்ளன. இத்திருத் தாண்டகங்கள் சைவசமய மாணவர்களாலே மனப்பாடஞ் செய்யத்தக்கவை. திருமுறைகளை ஓதும் தகைமை மிக்கவர்கள் இத்திருத் தாண்டகங்களை மனனஞ்செய்து 'ஹரிகாம்போதி' இராகத்திலே ஆலயங்களிலே ஓதுவது பெரிதும் பக்தியையும், அநுபூதியையும் வளர்க்க வல்லது. சிவன் அருளைப் பெறுவதற்கு இதைவிட இலகு வழி வேறில்லை! பாடிப் பரவுவது பேறுகளைத் தரவல்லது.

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன்றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழநட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச் சிற்றம்பலத்தே கண்டோமிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூலுண்டே
ஓதுவதும் வேதமே வீணையுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலியார்க்கே. (1)

தூண்டு சுடர்மேனித் தூநீறாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங் காதிற் பெய்து
பொற் சடைகளவைதாழப் புரிவெண்ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சங்கொண்டார்
வேண்டு நடை நடக்கும்
வெள்ளேறேறி வெண்காடு மேவிய விகிர்தனாரே (2)

ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு
வடியோடு முடியயன்மா லறியா வண்ண
நீண்டானை நெடுங்களமா நகரான் தன்னை
நேமிவாள் படையா நீலுற வோனாஆகங்
கீண்டானைக் கேதாரம் மேவினானைக்
கேடிலியைக் கிளர் பொறிவாள் அரவோடென்பு
பூண்டானைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே. (3)

கடவுளின் சட்டம் ஒருவனுக்குத் தீங்கு செய்யாது

நீருலாஞ் சடைமுடிமேல் திங்களேற்றார்
நெருப்பேற்றார் அங்கையில் நிறையுமேற்றார்
ஊரெலாம் பலியேற்றார் அரவமேற்றார்
ஒலிகடல் வாய் நஞ்சம் மிடற்றிலேற்றார்
வாருலா முலை மடவாள் பாகமேற்றார்
மழுவேற்றார் மான்மறியோர் கையிலேற்றார்
பாருலாம் புகழேற்றார் பைங்கணேற்றார்
பலியேற்றார் பந்தண நல்லூராரே. (4)

ஏறேறி யேழுலகு மேத்த நின்றார்
இமையவர்கள் எப்பொழுது மிறைஞ்ச நின்றார்
நீரேறு மேனியர் நீல முண்டார்
நெருப்புண்டார் அங்கை யனலு முண்டார்
ஆறேறு சென்னியார் ஆனஞ்சாடி
யனலுமிழும் ஐவாயரவு மார்த்தார்
(ஐவாயரவு - ஐந்தலைநாகம்)
பாரேறு வெண்டலை யார் பைங்கணேற்றார்
பலியேற்றார் பந்தண நல்லூராரே (5)

இரவும் பகலுமாய் நின்றார் தாமே
எப்போதும் என்நெஞ்சத் துள்ளார் தாமே
அரவமரையிலசைத்தார் தாமே
அனலாடி யங்கை மறித்தார் தாமே
குரவங் கமழுங் குற்றாலர் தாமே
கோலங்கன் மேன்மேலுகப்பார் தாமே
பரவும் அடியார்க்குப் பாங்கர் தாமே
பழன நகரெம்பிரானார் தாமே. (6)

காலனுயிர் வௌவ வல்லார் தாமே
கடிதோடும் வெள்ளை விடையார் தாமே
கோலம் பலவு முகப்பார் தாமே
கோள நாக நாணாகம் பூண்டார் தாமே
நீலம் பொலிந்த மிடற்றார் தாமே
நீள்வரையினுச்சி யிருப்பார் தாமே
பாலவிடுத்தருமானார் தாமே
பழனநகரெம் பிரானார் தாமே. (7)

**திருநேரிசை**

கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்பொறி அரவும்வைத்தார்
திங்களைத் திகழ வைத்தார் திசைதிசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையுள் அனலும் வைத்தார் ஐயன் ஐயாறனாரே (8)

பொடிதனைப் பூசவைத்தார் பொங்கு வெண்ணூலும் வைத்தார்
கடியதோர் நாகம் வைத்தார் காலனைக் காலில்வைத்தார்
வடிவுடை மங்கை தன்னை மார்பிலோர் பாகம் வைத்தார்
அடியிணை தொழவும் வைத்தார் ஐயன் ஐயாறனாரே. (9)

**திருத்தாண்டகம்**

நோக்கரிய திருமேனி யுடையாய் நீயே
நோவாமே நோக்கருள வல்லாய் நீயே
காப்பரிய ஐம்புலனுங் காத்தாய் நீயே
காமனையுங் கண்ணழலாற் காய்ந்தாய் நீயே
ஆர்ப்பரிய மாநாகமார்த்தாய் நீயே
அடியானென் றடியென்மேல் வைத்தாய் நீயே
தீர்ப்பரிய வல்வினைநோய் தீர்ப்பாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதீ. (10)

வானுற்ற மாமலைகளானாய் நீயே
வடகயிலை மன்னியிருந்தாய் நீயே
ஊனுற்றவொளி மழுவாட்படையாய் நீயே
ஒளிமதியோ டரவு புனல் வைத்தாய் நீயே
ஆனுற்ற ஐந்தும் அமர்ந்தாய் நீயே
அடியானென்றடியென் மேல் வைத்தாய் நீயே
தேனுற்ற சொல் மடவாள் பங்கன் நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதீ. (11)

நீறலைத்த திருவுருவு நெற்றிக்கண்ணும்
நிலாவலைத்த பாம்பினொடு நிறைநீர்க் கங்கை
ஆறலைத்த சடைமுடியும் அம்பொன் தோளும்
அடியவர்க்குக் காட்டியருள் புரிவார் போலும்
ஏறலைத்த நிமிர்கொடி யொன்றுடையார் போலும்

ஏழுலகுந் தொழு கழலெம் மீசர் போலும்
கூறலைத்த மலைமடந்தை கொழுநர் போலுங்
குடந்தைக் கீழ்க் கோட்டத்தல் கூத்தனாரே. (12)

மெய்யானைத் தன்பக்கல் விரும்புவார்க்கு
விரும்பாத அரும்பாவி யவர்கட் கென்றும்
பொய்யானைப் புறங்காட்டி லாடலானைப்
பொன் பொதிந்த சடையானைப் பொடிகொள் பூதிப்
பையானைப் **பையரவ மசைத்தான்** தன்னைப்
பரந்தானைப் பவளமால் வரைபோன் மேனிச்
செய்யானைத் திருநாகேச்சரத்துள்ளானைச்
சேராதார் நன்நெறிக்கட் சேராதாரே. (13)

முத்தினை மணிதன்னை மாணிக்கத்தை
மூவாத கற்பகத்தின் கொழுந்து தன்னை
கொத்தினை வயிரத்தைக் கொல்லேறுர்ந்து
**கோளரவொன்றாட்டுங்** குழகன் தன்னைப்
பத்தனைப் பத்தர் மனத் துளானைப்
பரிதிபோல் திருமேனியுடையான் தன்னை
அத்தனை ஆரூரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்த்தலாறே. (14)

கைகிளரும் வீணை வல்லவன் கண்டாய்
காபாலி கண்டாய் திகழுஞ் சோதி
மெய்கிளரு ஞான விளக்குக் கண்டாய்
மெய்யடியார் உள்ளத்து வித்துக் கண்டாய்
பைகிளரும் **நாகமசைத்தான்** கண்டாய்
பராபரன் கண்டாய் பாசூரான் கண்டாய்
வைகிளருங் கூர்வாட் படையான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன் தானே. (15)

பாடுவார்பாடல் உகப்பாய் போற்றி
பழையாற்றுப் பட்டீச்சுரத்தாய் போற்றி
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
வேழத்துரி வெருவப் போர்த்தாய் போற்றி

நாடுவார் நாடற் கரியாய் போற்றி
**நாகம்** அரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடும் ஆன் ஐந்தும் உகப்பாய் போற்றி
அலைகெடில வீரட்டத்தாள்வாய் போற்றி. (16)

ஆர்த்தான் காண் **அழல்நாகம்** அரைக்கு நாணா
அடியவர்கட் கன்பன்காண் ஆனைத் தோலைப்
போர்த்தான்காண் புரிசடைமேல் புனலேற்றான் காண்
புறங்காட்டிலாடல் புரிந்தான் தான் காண்
காத்தான் காண் உலகேழுங் கலங்காவண்ணங்
கனைகடல் வாய் நஞ்சதனைக் கண்டத்துள்ளே
சேர்த்தான் காண் திருமுண்டீச்சரத்து மேய
சிவலோகன் காண் அவனென் சிந்தையானே. (17)

ஆகத்தோர் **பாம்பசைத்து** வெள்ளேறேறி
அணிகங்கை செஞ்சடைமேலார்க்கச் சூடிப்
பாகத்தோர் பெண்ணுடையார் ஆணுமாவார்
பசுவேறியுழி தருமெம் பரமயோகி
காமத்தால் ஐங்கணையான் தன்னை வீழக்
கனலா எரிவிழித்த கண்மூன்றினா
றோமத்தா னான்மறைக ளோத லோவா
ஒளிதிகழுமொற்றியூருறை கின்றாரே. (18)

வெள்ளத்தடஞ் சடைமேல் விரும்பி வைத்தீர்
வெண்மதியும் பாம்புமுடனே வைத்தீர்
கள்ளத்தை மனத்தகத்தே கரந்துவைத்தீர்
கண்டார்க்குப் பொல்லாது கண்டீரல்லை
கொள்ளத்தான் இசைபாடிப் பலியுங் கொள்ளீர்
**கோளரவுங்** குளிர்மதியும் கொடியுங் காட்டி
உள்ளத்தை நீர் கொண்டீர் ஓதலோவா
ஒளிதிகழு மொற்றியூருடைய கோவே. (19)

பக்திநலனும், தமிழ்வளமும், கருத்துச்செறிவும், சிவனது கீர்த்தியும் உணர்த்த வல்லவை இத்திருத்தாண்டகங்களும் திருநேரிசைகளும். இவை ஞானத்தைச் சுடர்விக்கும் தூண்டிகள்.

உ

# தர்ப்பைப் புல்லின் தனிச்சிறப்பு

- நீர்வை மணி அவர்கள் -

இந்து சமய வழிபாடுகளிலும் சுபகாரியங்கள், அசுபகாரியங்கள், யாகங் கள், கிரியைகள் யாவற்றிலும் தர்ப்பைப் புல் தனிச்சிறப்புடன் பலவிதமாக முக்கிய இடம் வகிக்கின்றது.

எமது சமயவழிபாடுகளிற் சங்கற்பம் செய்வது, பூரணகும்பம் வைத்துப் பூசை செய்வது, அக்கினி காரியங்கள் செய்வது, கொடியேற்றி மகோற்சவங்கள் செய்வது, போன்ற சமயக்கிரியைகளிலும், விவாகம், சாந்திகள், சிரார்த்தங்கள், யாகங்கள், கிரகப்பிரீதிகள் போன்ற பல்வேறு காரியங்கட்கும், பிதிர்களுக்குத் தர்ப்பணம் செய்வதாகிய எள்ளும் நீரும் இறக்கும் பிதிர்கடன்களுக்கும் தர்ப்பைப் புல் முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

தர்ப்பைப் புல்லைக் கயிறாகத் திரித்தும், கூர்ச்சம், பவித்திரம், விடுபுல், தர்ப்பைக் கட்டை, தர்ப்பைப் பாய் (ஆசனம்) தர்ப்பைப் புல் விரிகதிர்ப்பாய் (கொடி மரத்திற்கு) எனவும் தேவைக்கேற்றவாறு பயன்படுத்துவார்கள்.

தர்ப்பைப் புல் சகல தோஷங் களையும் நீக்கவல்லது. இதனைப் பவித் திரமாக முடிந்து மோதிரவிரலிற் போட்டுக் கொண்டே சமயக் கிரியைகளைச் செய் யும்போது, செய்யும் கடமையில் திருப்தியும், அனுகூலமும், சிந்தனைத் தெளிவும் தெய்வீக சிந்தனையும் நல்ல முறையிற் தாம் சங்கற்பம் செய்த காரியம் எவ்வித விக்கினங்களுமின்றி ஈடேறும் எனும் நம்பிக்கையும் உண்டாகின்றது. தர்ப்பைப் புல்லில் மும்மூர்த்திகளான பிரமா, விஷ்ணு, ருத்திரன் வாசம் செய்வதாகவும், இப்புல் லின் அடியிற் பிரமாவும், மத்தியில் விஷ்ணுவும். நுனியில் ருத்திரனும் இருந்து சமய வழிபாடுகளில் அருள் பாலிப்பதாகவும் சாஸ்திரநூல்கள் கூறியுள்ளன.

இந்தவிதத்திலே நாம் தர்ப்பணஞ் செய்தல் எனும் எள்ளும் தண்ணீரும் இறைக் கும் போது தேவர்களை நினைந்து நுனித் தர்ப்பையாலும், மானிடர்களை நினைந்து மத்தியபகுதியாலும் பிதிர்களை நினைத்துத் தர்ப்பையை மடித்து நுனிப் பாகத்தாலும் தர்ப்பணம் செய்தல் வேண்டும்.

ஆலயக்கிரியைகள், கும்பாபி ஷேகம் எனப்படும் குடமுழுக்குவிழா, மகோற் சவம், யாகபூசைகள், ஹோமவழி பாடுகள், சங்காபிஷேகம் மற்றும் நித்திய நைமித் தியக் கிரியைகளிற் தர்ப்பைப் புல்கொண்டு கூர்ச்சம், பவித்திரம், தர்ப்பைக் கயிறு என்பன குறிப்பிட்ட ஆகமப் பிரமாணங்கட்கு ஏற்ற அளவுகளிற் செய்து மந்திரபூர்வமாக

தேவைக்கேற்பப் பயன்படுத்தலாம்.

கோபுர கலசங்கள், கொடித்தம்பம், யாகசாலை, பூரணகும்பங்கள் என்பவை தர்ப்பைப் புற் கூர்ச்சங்களால் அலங்கரித்துப் பூசை செய்யும்போது நல்ல ஆற்ற லைச் சேர்க்கவும் வழிபடுவோர்க்குத் தரவல்லதுமாக அமைகின்றதென ஸ்மிருதி நூல்கள் விளக்கியுள்ளன.

மேலும் இத்தர்ப்பைப் புல்லானது குறிப்பிட்ட அளவுகளிலும், பூர்வக்கிரியை கட்கு வலப்பக்கமாகவும், அபரக்கிரியைகட்கு இடப்பக்கமாகவும் முடிதல் வேண் டும் எனவும், குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்டனவாக இருத்தல் வேண்டும் என வும் ஆகமங்கள் எடுத்துக் கூறியுள்ளன.

சமயக்கிரியைகளில் இடம்பெறும் அக்கினி காரியங்கள், ஓமவழிபாடுகளிற் தர்ப்பையைச் சுட்டு அச்சாம்பலை எடுத்துத் திலகம் இட்டுக் கொள்ளுதல், புஷ்ப பாஞ்சலி செய்யும்போது பூக்களுடன் தர்ப்பைப் புல்சேர்த்து சொரிந்து வழிபாடு செய்தல் என்பன தர்ப்பைப் புல்லின் சிறப்பை எமக்கு நன்கு உணர்த்துவதாக உள்ளது.

இந்தவிதத்திலே எமது சமயக் கிரியைகளிற் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருட்களும், ஆன்மீக, விஞ்ஞான, சுகாதார ரீதியான பல்வேறு உண்மைகளைக் கொண்டனவாகவே விளங்குகின்றன. இவற்றை நாம் நன்கு அறிந்து, தெரிந்து சமய நெறிகளைக்கடைப்பிடிப்பதும், தெரிந்தோர் தெரியாதவர்கட்குத் தெரி யவைப் பதும் பயனுடைய செயற்பாடாகும்.

# ஐப்பசி மாத குருபூசை தினங்கள்

| | | |
|---|---|---|
| 23.10.2010 | ஐப்பசி 6 சனி | – திருமூலர் பூசை |
| 24.10.2010 | ஐப்பசி 7 ஞாயிறு | – நெடுமாறர் குருபூசை |
| 25.10.2010 | ஐப்பசி 8 திங்கள் | – இடங்கழியார் குருபூசை |
| 30.10.2010 | ஐப்பசி 13 சனி | – சத்தியார் குருபூசை |
| 06.11.2010 | ஐப்பசி 20 சனி | – மெய்கண்ட தேவர் குருபூசை |
| 07.11.2010 | ஐப்பசி 21 ஞாயிறு | – பூசலார் குருபூசை |
| 08.11.2010 | ஐப்பசி 22 திங்கள் | – ஐயடிகள், காடவர் கோ குருபூசை |

பகைமையைப் பகைமையால் தணிக்க முடியாது.

உ

# 2010ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| திருமதி முருகையா | கொழும்பு | 2,000.00 |
| செ. நமசிவாயம் | இளவாலை வடக்கு | 7,200.00 |
| சுதாகரன் | இடைக்காடு, அச்சுவேலி | 500.00 |
| பொன்னையா குடும்பம் | புதுச்செட்டித்தெரு | 6,000.00 |
| S. கார்த்திகன் | புதுச்செட்டித்தெரு | 5,000.00 |
| குபேரானந்த உதயம் | இணுவில் | 1,000.00 |
| செ. சுப்பிரமணியம் | மில் ஒழுங்கை, மல்லாகம் | 2,000.00 |
| சந்திரகுமார் அருண் | | 2,000.00 |
| K. மாலினி | மட்டக்குளி, கொழும்பு | 2,000.00 |
| வேலுப்பிள்ளை செல்வராசா | | 2,000.00 |
| சுப்பிரமணியம் ரூபன் | வரணி | 550.00 |
| சு. நிருவாதரன் | வெள்ளவத்தை, கொழும்பு | 5,000.00 |
| S. கணபதிப்பிள்ளை | அச்சுவேலி | 3,000.00 |
| T. தயாபரன் | கந்தர்மடம், யாழ். | 500.00 |
| T. கேமாலினி | K.K.S. வீதி, மல்லாகம் | 1,000.00 |
| K.N. இராசரெட்ணம் | வெள்ளவத்தை | 1,000.00 |
| K. கைலைநாதன் | வட்டுக்கோட்டை, சங்கானை | 500.00 |
| குலேந்திரன் | கனடா | 2,000.00 |
| சி. குமாரசாமி ஆசிரிய குடும்பம் | கதிரிப்பாய் | 2,000.00 |
| சோ. வைகுந்தன் | உரும்பிராய் | 3,000.00 |
| T. சிவசுப்பிரமணியம் | சண்டிலிப்பாய் | 1,000.00 |
| V. குலசேகரம் | கொழும்பு - 11 | 1,000.00 |
| திருமதி பொ. இரத்தினசோதி | பருத்தித்துறை | 3,000.00 |
| முத்துமாணிக்கம் குமரேந்திரன் | ஊறணி, வல்வை | 2,000.00 |
| சரவணபவன் தயாளினி | கொக்குவில் மேற்கு | 5,000.00 |
| இராஜேஸ்வரி உமாபதி | (ஜேர்மனி) | 10,000.00 |
| பாலசுந்தரம் ரஞ்சினி குடும்பம் | | 5,000.00 |
| பொ. கனகலிங்கம் | சிறுப்பிட்டி | 2,000.00 |
| தம்பித்துரை மகன் (கனடா) | ஊரெழு | 5750.00 |

| | | |
|---|---|---|
| ம. பிரவின் | சித்தங்கேணி | 14,200.00 |
| V. ஜீவன் | காட்டுப்புலம் | 10,000.00 |
| வ. சஜீவ் | வல்வெட்டி | 2,000.00 |
| மு. மனநாயகம் | கே.கே.எஸ். வீதி | 1,000.00 |
| செ. சத்தியமூர்த்தி | கொக்குவில் | 2,000.00 |
| K.V. துரைசாமி (நினைவு) | மயிலிட்டி | 1,000.00 |
| முகுந்தன் | தொண்டைமானாறு | 1,000.00 |
| திருமதி லோகநாயகி கதிர்காமநாதன் | | 1,500.00 |
| த. சண்முகரத்தினம் | குப்பிளான் தெற்கு | 2,000.00 |
| க. ஈஸ்வரி | புலோலி மேற்கு, பருத்தித்துறை | 5,000.00 |
| உமாகாந்தன் அபிநயன் | கொற்றாவத்தை | 2,000.00 |
| ஜெயானந்தன் குடும்பம் (வித்தகி) | யாழ். வீதி, சிறாம்பியடி | 10,000.00 |
| தம்பிப்பிள்ளை மகேந்திரன் | வட்டுக்கோட்டை | 2,000.00 |
| வ. நந்தகுமார் சத்தியவாணி குடும்பம் | | 5,000.00 |
| ஞானசௌந்தரி பாலசுப்பிரமணியம் | கோப்பாய் | 5,000.00 |
| ச. லிங்கேஸ்வரி | வட்டு. கிழக்கு | 2,000.00 |
| துர்க்கேஸ்வரன் குடும்பம் | வட்டு. கிழக்கு | 5,000.00 |
| தி. மனோரஞ்சன் | ஏழாலை | 1,000.00 |
| தீ. ஜெயபூரணி | வி.எம். வீதி, பருத்தித்துறை | 1,000.00 |
| த. இராசதுரை | அச்சுவேலி | 1,000.00 |
| இ. யோகராசா மக்கள் வங்கி | அச்சுவேலி | 1,000.00 |
| N. செல்வரெட்ணம் | சுண்டிக்குளி | 2,500.00 |
| ந. விக்னேஸ்வரன் | சுண்ணாகம் மேற்கு | 1,000.00 |
| ந. தணிகாசலம்பிள்ளை குடும்பம் | | 5,000.00 |
| திருமதி அல்லிமலர் தெய்வமலர் | உடுவில் தெற்கு, சுண்ணாகம் | 2,000.00 |
| த. தீபகுமார் | இடைக்காடு | 1,000.00 |
| செல்வி. த. தங்கப்பொன் | திருநெல்வேலி | 2,000.00 |
| ப. சேயோன் | மயிலணி வீதி, சுண்ணாகம் | 2,000.00 |
| S. சின்னத்துரை | நெல்லியடி, கரவெட்டி | 500.00 |
| க. தம்பு | அல்லாரை, மீசாலை | 1,000.00 |
| பொன்னுத்துரை, பரிமளம் | யாழ்ப்பாணம் | 1,000.00 |
| மு. அனுராதா | வல்வெட்டி | 1,000.00 |
| M. செந்தில்நாதன் | சுவிஸ் | 2,000.00 |
| சங்கரப்பிள்ளை குடும்பத்தினர் | கரணவாய் | 500.00 |
| S. சிவகுமார் | கோண்டாவில் | 1,000.00 |

உ

# வினையின் விளைவு

- க. சிவசங்கரநாதன் அவர்கள் -

மனித வாழ்க்கையின் குறிக்கோள் ஞானத்தை பெறுவதேயாகும். மனிதன் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கு ஏற்ப அவனுடைய பண்பு மற்றும் குணம் உருவெடுக்கின்றது. அவனுடைய உள்ளத்தில் உருவெடுக்கும் எண்ணங்களே உள்ளக்கிடக்கை எனப்படும். அதை மனித இயல்பு என்றும் சொல்லலாம். மனித இயல்பை அவனது வினையானது ஓயாது வகைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. வினையின் ஆதிக்கம் மிகப் பெரியது ஆகும். அதனை வாழ்க்கைக்கு ஏற்றதாக பயன்படுத்திக் கொள்ளுதல் மனிதனுடைய கடமையாகும். மனதைப் பண்படுத்தினால் மனப்பரிபாகத்துக்கு ஏற்ப அவனுக்கு ஆற்றல் உண்டாகிறது.

மனிதன் ஆற்றுகின்ற வினைப்படி அவனுடைய உணர்வும் எண்ணமும் உருவெடுத்து ஆற்றலை வகைப்படுத்துகின்றது. அந்த ஆற்றலை யாராலும் அழிக்க முடியாது. எண்ணியதை எண்ணியபடி சாதிக்கும் வினைத்திறன் அவர்களுக்கு அமைந்து விடுகின்றது. மனிதன் அடைகின்ற பேறு அனைத்தும் அவன் ஆற்றுகின்ற வினையின் வாயிலாகவே அவனுக்கு வந்து அமைகிறது. அவன் எதைப்பெற தகுதியுடையவனாக இருக்கிறான் என்பதை அவனது செயலே நிர்ணயிக்கிறது. அவனை உயர்த்திக் கொள்ளுதற்கேற்ற ஆற்றலும் அவனிடத்தே இருக்கிறது. அவனுடைய நிலை அவன் ஆற்றியுள்ள வினையின் விளைவேயாகும் ஆகவே அவன் தன்னை மேலும் உயர்த்திக் கொள்ளப் பாடுபட முடியும் என்பது வெளிப்படை தன் நிலை உயர்வதற்கு அவன் எடுத்துக் கொள்ளும் முயற்சியின் விளைவே காரணமாகும். வகையுடன் வினையாற்றாவிட்டால் அவனுடைய ஆற்றல் வீண் விரயமாய்விடும். மனித மனது பேராற்றல் படைத்தது. ஆற்றல் அனைத்தும் புதைந்து மறைந்து கிடக்கிறது. ஆனால் நல்வினை ஆற்றுதல் தான் மனிதனுடைய கடமை ஆகும் கைமாறு கருதாது தன் கடமையை ஆற்றுகின்றவனுக்கு யாவும் வந்து அமைகின்றது. மிகப் பெரிய நிலையை அடைகின்றான். மனிதன் ஆற்றும் வினைகளும் உயர்ந்தவை தாழ்ந்தவை என்ற வேற்றுமை

இல்லை. ஆனால் இன்பத்தை நாடுதல் மனித வாழ்வின் லட்சியம் ஆகாது. இன்பம் என்பது துன்பமாக வடிவெடுத்து மனிதனைப்பாடு படுத்திய பின் அவனுக்கு உண்மை விளங்குகின்றது. அவனை பக்குவப்படுத்துவதில் இன்பத்தைவிட துன்பத்திற்கு அதிக பங்குண்டு. உடைமையை விட வறுமையே அதிகமாக பாடம்பு கட்டுகிறது. புகழ்ச்சியைவிட இகழ்ச்சியே அதிக பாடத்தை புகட்டுகின்றது. ஆகவே நல்வினையே ஓயாது ஊக்கத்துடன் செய்யவேண்டும். இடையறாது நல்ல செயல்களை செய்து கொண்டே இருக்க வேண்டும். இயற்கையின் விதியும் அதுவேயாகும். ஆகவே வாழ்க்கை ஒரு போராட்டம் என்றும் சொல்லலாம்.

மனிதன் சுயநலம் கலவாத செயல்களையே செய்ய வேண்டும். முறையாக முயற்சி எடுத்துக் கொண்டால் சுயநலம் அவனைவிட்டு நீங்கிவிடும். அவன் பேராற்றலும் அமைதியும் படைத்தவன் ஆகின்றான். அந்தப் பெரு நிலையை நோக்கி வாழ்வு என்னும் நீண்டபாதையில் மனிதன் சென்று கொண்டிருந்தால் கடவுளின் பேராற்றல் அவன் மூலம் செயல்புரிகிறது. எப்பொழுது மனிதனுடைய செயல்கள் எல்லாம் இறைவனுடைய செயல்களாய் விடுகின்றன. மனிதன் ஊக்கத்தோடு இடைவிடாது வினையாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று பகவத்கீதை போதிக்கிறது அர்ச்சுனா எனது இயல்பைப் பார். ஒரு நொடிப்பொழுதுக்கு நான் வினை ஆற்றாது வெறுமனே இருந்துவிட்டால் அண்டங்கள் அனைத்தும் அடிபட்டுப் போய்விடும். அனைத்துக்கும் நானே ஈசன் எனினும் நான் ஏன் வினையாற்றுகின்றேன்? உலகின் மீது நான் அன்பு கொண்டிருப்பதால் அங்ஙனம் செயல் புரிந்து வருகின்றேன் என்று கிருஷ்ண பகவான் பகர்ந்துள்ளார்.

அன்பே கடவுள் என்பது கோட்பாடு மனிதன் பிறருக்கு பணிவிடை செய்து கொண்டே இருக்கவேண்டும். ஒருமனிதன் மற்றொரு மனிதனுக்கு உதவி புரிந்து கொண்டே இருக்க வேண்டும். ஒப்புயர்வு அற்ற உதவி செய்யலாம். மனிதன் எப்பொழுதும் பேருபகாரியாகத் திகழவேண்டும் மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகும். உலக மக்களுக்கு மனிதன் கடமைப் பட்டிருக்கின்றான். உலகுக்கு நன்மை செய்வது மனிதனின் முதற்கடமை. பிறருக்கு உதவி செய்வதன் மூலம் மனிதன் தன்னை உயர்த்திக் கொள்கின்றான் என்பது உண்மையே. உலகுக்கு உழைப்பதன் மூலம் மனிதன் உயர்வு அடைகின்றான். உலகுக்கு உதவி புரிதல் என்கின்ற எண்ணம் கடவுளுக்கு உதவி புரிவதாக வந்துமுடிகிறது.

மனிதன் தனது வாழ்வை முறையாக நடத்துவது அவனுக்கு அமைந்துள்ள நல்ல பயிற்சி ஆகும். அதன் மூலம் அவனுக்கு மனத்திடமும் நேர்மையும் உண்டாகின்றன. வாழ்க்கையில் மனிதர் எத்தகைய நிலைகளில் வைக்கப் பட்டிருக்கிறார்களோ அத்தகைய நிலைகளுக்கு ஏற்ப கடமையானது வடிவெடுக்கின்றது. மனிதனுடைய கடமையைக் குறித்து பகவத்கீதை பலவிதங் களில் புகட்டுகின்றது. கடமைகளில் ஏற்றத் தாழ்வு இல்லை. எத்தகைய வினையாற்ற மனிதன் தகுதியுடையவனாய்

இருக்கிறானோ. அத்தகை வினையே அவன் கடமையாக வந்து வாய்க்கும் வினை யைப் பற்றிய விதி இதுவே. அத்தகைய கடமை எதுவாயினும் அதை மகிழ் வோடு நிறைவேற்ற மனிதன் ஆயத் தமாக இருக்கவேண்டும்.


செயலுக்கேற்ற வினைப்பயன் மனிதனுக்கு உண்டு. கெட்ட செயல களைச் செய்தால், அவனுடைய தீவினை கள் அதிகரித்துக் கொண்டே போகும். நல்வினைகள் அவனை உறுதிபடைத்த வனாக ஆக்குகின்றது. நன்கு வினை யாற்ற தெரிந்துகொண்டவனே, நன்கு வாழத் தெரிந்துகொண்டவனாகின்றான். உலகம் இறைவனிடத்திலிருந்து உண்டா வது, உடல் எடுத்திருக்கும் எல்லோரும் உழைத்தே ஆகவேண்டும்.

வினையாற்ற கடமைப்பட்டுள் ளாய். வினைப்பயனில் ஒரு பொழுதும் உரிமைபாராட்டாதே வினைப்பயன் விளை விப்பவன் ஆகிவிடாதே வெறுமனே இருப்பதில் விருப்புக் கொள்ளாதே என் பது கீதை. அன்பின் வழியது உயர் நிலை பிறர் நலத்தின் பொருட்டு தொண்டு புரிதலிலேயே மனிதன் திருப்தி அடைய வேண்டும். அதுவே அவன் அடையும் ஆத்ம திருப்தியாகும். ஆகவே ஆற்ற லும் அருளும் அவன் பெறுகின்றான். தற் போதைய காலத்தின் தேவைகளை உணர்ந்து செயல்படுவோமாக.

# செல்வச் சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை (உ)

மடமதனில் வேலை நடுஅவர்க ளேக
மாறுபடியுங் கோயி - லைமவாகு
மென்வருளு கோவி னுரைமுறைய தாக
முருகுனது பூசை - தரவேதான்
மடைமையதில் மூழு மவர்கதவை மூடி
மறுபடியு மேகக் - குலமோடு
மடியவடி வேலின் மகிமையுண ரூனன்
மருதர்கதிர் காமர் - தனைநாடி
உடைமையவை யோடு கதவதனின் சாவி
பிடியுமென வோதி - செலவேதான்
உரிமையொடு வேலன் புகலுமிடந் தேடி
உவமையில தாக - அமைகோவில்
இடமதனை நாடி இனியவமு தால
மிலையதனி லீய - உரைகோனே!
இகமதருள் வார வெனகழனி சூழ்சந்
நிதியதனில் வாழு - முருகோனே



- இராசையா குகதாசன்,
நாயன்மார்க்கட்டு.

# பெரியபுராணத்தின் சிறப்பு

- செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் -

பன்னிரு திருமுறைகளில் இறுதியாக அமைந்தது பெரியபுராணம். புராணம் என்பது வரலாறு. அதை மாக்கதை என்றும் வழங்குவர் அநபாய சோழனின் மந்திரி சேக்கிழார். திருமுறைப் பாடல்களில் கூறப்பட்டுள்ள பொருளையும், இசையமைப் பையும் நயந்த அநபாய சோழன் சேக்கிழாரிடம் அவற்றின் வரலாறுகளைக் கேட்டறிந்து அவற்றைக் காவியமாக்கித் தருமாறு கேட்டான்.

பரந்துபட்ட இவ்விஷயத்தை யான் எப்படிக் காவியமாகப் பாடுவேன் என மனங்கலங்கினார். தில்லையம்பலம் சென்று கூத்தப் பெருமானை வணங்கி, "பெரு மானே! சோழமன்னன் கேட்டபடி அடியார்கள் வரலாறுகளை சிறியேனால் பாட முடியுமா? தேவரீர் அருள் செய்ய வேண்டும்" என மெய்யுருக அழுது நின்றார். அவ்வமையம் 'உலகெலாம்' என்று தொடங்கிப் பாடு" என அசரீரி கேட்டது. மகிழ்ந்த சேக்கிழார் "உலகெலாம்" என்று தொடங்கி அறுபத்துமூன்று நாயன்மார் கள், ஒன்பது தொகையடியார்களின் பெருமைகளையும் பாடிமுடித்தார். பெரிய புராண காவியத்தை மன்னனிடம் தந்தார். மன்னன் மகிழ்ந்து சேக்கிழாரையும், காவியத்தையும் யானை மேலிருத்தி பவனிவரச்செய்து உலகோர் அறிய வைத்தான். இறைவன் அடி எடுத்துக் கொடுக்க மனிதன் பாடியமையால் இது தெய்வீக நூலா கும். இனி, உலகெலாம் என்று தொடங்கும் பாடலை நோக்குவோம்.

"உலகு எலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகு இல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" எனத் தொடங்கிய

புராணம்,

"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என

முடிகிறது. பாடல்களின் பொருள் வெளிப்படையாகத் தெரிகிறது. உலகம் எல்லாவற்றையும் ஆக்கி, அளித்து மறைத்து எல்லாமாக நின்று உணர்த்துபவன்;

அவனை நம்மால் உணர்ந்து சொல்வதற்கு அரியவன். இங்கு 'உலகெலாம்' என்ற சொல்லில் எவை அடங்கியுள்ளன? உலகம் + எல்லாம் உலகம் எனும் போது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் அடங்கும். எல்லாம் என்று சொல்லும் போது பூமியிலுள்ள ஓரறிவு முதல் ஆறு அறிவு ஈறாகவுள்ள உயிரினங்கள் தாவரங்கள், மலை, கடல், ஆறு, சூரிய சந்திரர்கள் யாவும் இவற்றைச் சிருஷ்டித்த இறைவனுள் அடக்கம். நிலவையும் கங்கையையும் அணிந்த சடையை உடையவன்; அளவில்லாத சோதிப் பிரகாசமானவன்; தில்லையம்பலத்தில் நடனம் செய்பவன். அவன் அம்பலத்துள் ஆடும் ஆட்டம் பஞ்சகிருத்தியம். அதை நம் ஊனக் கண்களால் காணமுடியாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மலர்ப்பாதங்களை வணங்குவாம் எனத் தொடங்கியவர் காவியம் பாடி முடிவு வந்துவிட்டது. இறுதியாக வாழ்த்துப் பாடுகிறார். பாடல் உலகமெலாம் என முடிகிறது.

**"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க**
**நான் மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

வானம் குறைவின்றி மழை பொழிக! அதனால் நாட்டில் வளம் செழிக்க; அரசன் நீதி தவறாது ஆட்சி செய்வானாக! மக்கள் எவ்வித குறைகளுமின்றி வாழ்வார்களாக! நால்வகை வேதங்கள், வேத வேள்விகள் சிறந்து விளங்குக. நல்லாட்சியில் மேலான சைவநீதி உலகமெலாம் பரந்து செறிந்து விளங்குமாக என வாழ்த்துகிறார்.

உலகம் செழிக்க வேண்டுமாயின் மழை வேண்டும். அரசன் நல்லாட்சி செய்வானாயின் மாதம் மும்மாரி பெய்யும். "கோன் முறை தவறின் மாரி வளம் குன்றும். அந்தணர் வேதமுறைப்படி ஆகுதி சொரிந்து வேள்வி செய்ய மழை சொரியும் நாடு செழிக்கும். மன்னனின் நீதி நெறி தவறாத ஆட்சியில் மக்கள் பஞ்சம், பசி, பட்டினி, கொலை, களவு, ஊழல்கள் நடவாது மன்னனும் மக்களும் மகிழ்சியாக வாழ்வார்கள். இறைவனுடைய பெருமை பேசப்படும். சைவ நீதி உலகமெலாம் பரவும்.

ஆனால், சேக்கிழார் பாடிய புராணச் சிறப்பைச் சொல்ல வந்த யான், மேலும் ஒரு விளக்கம் கூறுகிறேன்

**"வேதநெறி தழைத்தோங்க**
**மிகுசைவத் துறை விளங்க**
**பூதபரம்பரை பொலிய**
**புனிதவாய் மலர்ந்தழுத"**

ஞான சம்பந்தக் குழந்தை மாறாக வாழ்க, வீழ்க, ஓங்குக, ஆழ்க எனப்பாடுகிறார்.

**"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயதெல்லாம் அரன்நாமமே**
**சூழ்க வையகம் முன்துயர் தீர்கவே"**

அந்தணர். வானவர், ஆனினம் வாழ்க, தண்புனல் வீழ்க. (மழை) அரசனுடைய ஆட்சி ஓங்குக; தீயதெல்லாம் ஆழ்க (இல்லாமலாக) வையகம் முன்துயர் தீர்க, அரன் நாமம் எங்குமே சூழ்க எனப்பாடுகிறார். வாழ்க! வீழ்க இச்சொற்கள் தனியே பயன்படும்போது எதிர்மறைப் பொருளில் வரும். இரண்டும் ஒன்றாகச் சேருமாயின் நேரிடையான நல்ல பொருள் தரும்

**தர்மம் வாழ்க அதர்மம் வீழ்க**
**நன்மை வாழ்க தீமை ஒழிக**
**வன்முறை ஒழிக வீழ்க**

அந்தணரை வாழ்த்தி தண்புனல் வீழ்க என்கிறார். அந்தணர் ஆகுதி செய்யும் வேதவேள்விகளால் அந்தணர் வாழவேண்டும். குளிர் மழை பொழிவதால் வீழ்க தண்புனல் எனவும், உலகில் தீய செயல்கள் இல்லையாயின் எங்கும் இறை நாமம் பேசப்படும். பிறவித் துன்பமும் நீங்கும் எனக் கூறுகிறார்.

இன்னும் ஓர் புராணம் பற்றியும் சிந்திப்போம். பெரிய புராணம் உலகெலா மாகி நிற்கும் இறைவனை வாழ்த்தி நாயன்மார்கள் அடியார்களைப் பற்றிப் பாடி, 'மேன்மை கொள் சைவ நீதி" உலகெலாம் பரவப் பாடியது. ஆனால் சிவபுராணம் என ஒன்றுளது. அது சிவனைப் பற்றிப்பாடியது. மாணிக்கவாசகர் முன்னை வினைப் பயன் முழுநிறைவாக சிவபெருமானே ஞானாசிரியராக வந்து ஆட்கொள்ளப்பட்ட வர். ஞானம் மேலிடுகிறது. இறைவனை வாழ்த்தி, வணங்கி பாடத்தொடங்குகிறார்.

"நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" எனத் தொடங்கும் முதல் ஐந்து அடிகளில் வாழ்க என வாழ்த்தியும் "வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடி" எனத் தொடங்கும் ஐந்து அடிகளில் வெல்க! வெல்க! என வாழ்த்தியும், "ஈசனடி போற்றி முதல், ஆராத இன்பம் அருளுமலை போற்றி" என ஆறு அடிகளில் வணக்கம் செலுத்தி சொல்கிறார். "சிந்தை மகிழ சிவபுராணம்தனை முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்" ஆனால் விண்ணும் மண்ணும் நிறைந் திருக்கும் நின் பெருமையை, "பொல்லா வினையேனாகிய யான் புகழுவதெப்படி என்று தெரியவில்லையே" என அவையடக்கத்துடன் (தன்னை, தன்னறிவை தாழ்த்தி) சிவனுடைய பெருமைகளைப் பாடுகிறார். எவ்வாறு? "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேன் எம்பெருமானே" எனத் தொடங்கி அல்லற் பிறவி அறுப்பானே" எனக் கூவி அழைத்து சொல்லற்கு அரியவனாகிய இறைவனைப்பற்றி பாட்டின் பொருளை உணர்ந்து, அறிந்து யார் சொல்லுகிறார்களோ அவர்கள் தப்பாது சிவனுடைய பாதத்தை அடைவர் எனப் பயன்கூறி முடிக்கின்றார்.

சிவபுராணம், வாழ்த்து, வணக்கம், அவையடக்கம், வரும்பொருள் உரைத் தல், பயன் என ஐந்து அம்சங்களை அடக்கியுள்ளது. புராணங்கள் தெய்வீக மானவை. படிக்கப் படிக்க பக்தி பெருகும். இறையுணர்வு உண்டாகும். வாழ்வு செழுமையுறும்.

**சைவநீதி உலகமெலாம் பரவும்.**

தொடர்

# கர்மமும் மறுபிறவியும் விதி

- கு. கோபிராஜ் அவர்கள் B.A. (Hons) (இந்து நாகரிகம் சிறப்பு) -

கந்தரனுபூதி வினையைப் புரிவது உடம்பு. உடம்பை மீளவும் தருவது விதி. இந்த விதிக்குக் காரணம் ஏலவே செய்தவினை. வினையோ விதியோ எது முன்னையது என்று சொல்வதற்கில்லை. இது உடம்பை மையமாகக் கொண்டு "இருள் சேர் இருவினை"ப் பட்டு உழல்வது ஆன்மா. இங்ஙனம் மீட்சி இல்லாமல் நெடுங்காலம் பிறந்திறந்து உழன்று கொல்வதும் முறையோ? அப்படி எனின் இந்த வினைமூலம் எங்கே? மூல வினை தான் எங்கே? ஆன்மாவுக்கு ஆணவம் அநாதிவினை பிரலாகானாதி என்பர். ஆன்மாவுக்கு இச் சிறை வெறுப்பும் விடு தலையின் விருப்பும் இச்சை இருக்கிறது. இந்த இடத்தில் இறைவனின் பரங் கரு ணையாம் இச்சையை சங்கற்பிக் கிறது. புகையிரத வண்டியில் நாம் பய ணம் செய்யும் போது எம் பையினை நாம் தோளிலும் கையிலும் தாங்கியபடி பய ணம் செய்வது எவ்வளவு மடைத்தனம். அவ்வழியே நாமும் வாழ்வுச் சுமையை தாங்க வேண்டிய அவசியமில்லை. அடுத்த கணம் நடப்பது அறியாத அகக்குருடர். இறை வனின் சக்தியே நம்மை எல்லாம் கொண்டு செலுத்துகிறது என்பது வெளிப் படை உண்மை பின்னேன் சுமப்பான். சுமையைத் தோளில் போடுவான்

உடம்பு வினைக்கு காரணம், வினை விதிக்குக் காரணம், விதி உடம் பிற்கு காரணம். இது ஒரு சுழல் சக்கரம். எல்லாம் மனோபாவனையில்தான் இருக் கிறது. எல்லோரையும் எல்லாப் பொருட் களையும் புகையிரத வண்டி சுமந்து செல்லவேண்டிய இடத்திற்கு செல்கிறது. அதற்கு பொருட்களைப் பயணிகள் தலை மேல் சுமக்க வேண்டுமா? நம்மையும் சுமந்து நம் பொருட்களையும் சுமந்து நாமே போகவேண்டிய இடத்திற்கு வண்டி செல்கிறது. "இறைவனின் திருவருள் எம்மை எடுத்துச் சுமக்க இருக்கிறது. அப்போது நாம் ஏன் அவதிப்படவேண்டும்" இதையே சுந்தரனுபூதி 35ஆவது பாடல்,

"விதி காணும் உடம்பைவிடா வினையேன்
கதி காண மலர் கழல் என்றருளாம்

மதிவான் துயில் வள்ளியை யல்லது பண்
துதியா விரதா சுரபூபதியே"

வள்ளி நாயகியால் முற்பிறவியில் முருகனை நாயகனாக அடையுமாறு கடும் தவம் புரிந்ததன் விளைவாக முருகன் பல வேடங்களில் அவரைப் பரீட்சித்து பக்குவம் கண்டு அவரைப் பெரிதும் போற்றித் தம்முடையதாக்கியதாக கந்தபுராணம் கூறுகின்றது.

சைவ சித்தாந்த பார்வையில் கன்மம் என்றால் ஆணவப்பிடியில் உள்ள ஆன்மா தனித்து இயங்க முடியாத நிலை ஏற்பட அதை இயக்க வைக்க இறைவன் மாயையை முதற்காரணமாகவும், தன்னை நிமிர்த்த காரணமாகவும் திருவருட் சக்தியை துணைகாரணமாகவும் கொண்டு இவ் உலகத்தையும், உலக நுகர்ச்சிப் பொருட்களையும் வழங் கியதாகவும் உலகத்தின் மீதும், உடலின் மீதும் பற்றுக்கொண்டு தொழிற்படு வதையே சைவ சித்தாந்தம் கன்மம் என்று கூறுகிறது. இதன் குணத்தினை இருபா இருப'.து

"இருத்தலும் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவ லென்றெடுத்த
அறுவகைக் குணனுங்...."

வினைகள் பிறவிகளைத் தரும் என்ற வகையில் சைவ சித்தாந்திகளினால் மறுபிறப்புக் கோட்பாடு வலியுறுத்தப்படுகிறது. கன்மங்களுக்கு பிறவியும் பிறவிக்கு கன்மமும் என கன்மத்தின் தொடர்ச்சியினை சைவ சித்தாந்திகள் வலியுறுத்தினர். இதை மாணிக்கவாசகர்,

"புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகி
பல்விருகமாகி பறவையாய்ப் பாம்பாகி....

என்றார். இதை உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசத்தில்,

"கன்மநெறி திரிவித நற் சாதி யாயு போகக்
கடனதென வருமூன்று முயிரொன்றி கலத்தல்...."

இக்கன்மத்தின் பயன் ஒவ்வொரு ஆன்மாவையும் அனுபவிக்க செய்யும். செய்த கன்மத்தின் பயன் அவரையே விட்டு நீங்காது கூடாமலும் குறையாமலும் பொருந்தச் செய்யும். இதை வள்ளுவர்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" - என்றார்.

எல்லா ஆன்மாக்களையும் கன்மத்தைப் பெற்று மாயா காரியத்தினூடாக உய்வடைய வழி நடத்துபவன் இறைவன் இதை உமாபதி சிவாச்சாரியார்,

"உலகெலாமாகி வேறாய் உடனுமாய் ஒளியாய்
ஓங்கி அலகிலா உயிர்கள்...."

நல்லவனாய்ப் பிறப்பது சந்தர்ப்பத்தினால் என்றால்,

இக் கன்மவினைகளின் பகிர்வில் இறைவனது விருப்பு வெறுப்புக்கள் அப்பாற்பட்டவை ஆகும். மறுபிறப்பு உண்டு என்பதை சைவசித்தாந்தம், இந்து சமயம் ஏற்கின்றது. கபிலபுரத்தில் சங்கமன் எனும் வணிகன் சிங்கபுரம் போந்து நகை வாணிபம் புரிந்தான். இவனது வாணிபத்தில் அழுக்காறு காரணமாக பரதன் என்பவன் சங்கமனைப் பகைத்தான். இவனை ஒழித்துக் கட்ட சிங்கபுர வேந்தனிடம் சென்று மற்றைய நாட்டு ஒற்றன் எனக் கூறி கொலை செய்வித்தான் ஆனால் சங்கமன் மனைவி கற்புடையவள். 14 நாட்கள் கணவனுடைய பிரிவினால் பெருந்துயர் அடைந்து மலைமீது ஏறி "இந்த இடர் புரிந்தோர் இத்துயர் அடைக.." எனக் கூறி வீழ்ந்து இறந்தாள். சங்கமனை கோள்மூட்டி கொன்ற பரதனே பின் கோவலனாகப் பிறந்தான். இதையே ஊழ்வினை உறுத்தும் என்பார்கள்.

சம்பந்தர் இதை மேலும் விபரிக்கையில் "அவ்வினைக்கிவ்வினை" என்றார். இதனை எடுத்து நோக்கும் போது ஒரு கதை மூலம் விளக்கலாம். வளம்குன்றாத நகரம் தானையூர். அந்த ஊரில் வடதிசையில் ஒரு காளி கோயில் உண்டு. அங்கு பல பக்தர்கள் வழிபட்டனர். காளி கோயில் பூசாரிக்கு நல்ல கொண்டாட்டம். அவர் பொங்கலுக்கு எனக் கொடுக்கும் பணத்தை பறிப்பது தயிரன் னம் தயாரித்து தேவிக்குப் படைத்துவிட்டு வயிறு புடைக்க உறங்குவார். ஒருமுறை மாறுபட்ட உணவை உண்டு காய்ச்சல் ஏற்பட்டது. பின் தேவி! பத்திரகாளி! எனது காய்ச்சல் நீங்கி அருளும். நான் உனக்கு 2 ஆடுகளைப் பலியிடுகிறேன் என்றார். அவர் மனைவி திப்பிலி, சுக்கு, மிளகு இடித்துக் கொடுத்ததும் நோய் தீர்ந்தது. பூசாரி குணமடைந்தார். உடனே பூசாரி காளிக்கு 2 ஆட்டுகுட்டியை கதறக் கதற வாளால் அரக்கனைப் போல் வெட்டி பலியிட்டான். பின்னர் அவ்வூரில் திடீரென பஞ்சம் ஏற்பட்டது. உயிர்கள் மடிந்தன. மனிதர் எலும்புக் கூடாக காட்சியளித்தனர். புல் பூண்டு அற்றுப் போக அனல் காற்று வீசியது. பறவைகள் மாண்டு கிடந்தன. எங்கும் துன்பம். மன்னனும், மந்திரியும் யோசித்தனர். இது தெய்வத்தின் சீற்றம் என எண்ணி, காளி கோயிலை அடைந்தனர். அப்போது காளிகோயில் பூசகர் பயந்து தன் மீது கோபப்பட்டு மன்னன் வருகிறான் என எண்ணி, காளிக்குப் பின்னால் மறைந்தார். காளிக்கு முன் நின்று "தேவியே மழை பொழிய அருள் செய்" என வேண்டினான். உடனே ஏ மன்னவனே! நம் முடைய சந்நிதியில் ஒரு நரபலியிட்டால் மழை பெய்யும்" என கணீர் என்று வானொலி எழுந்தது. இதனைக் கேட்ட மன்னன் ஆறுதல் அடைந்தான். மந்திரியும் தானே பலியாகப் போகிறேன். அரசன் தான் பலியாகப் போகிறேன் என முந்தி போட்டியிட்டு பின் காளி தேவி கூறட்டும். அவள் இட்ட கட்டளைப்படி செய்வோம் என்றனர். உடனே காளி அரசனும் வேண்டாம், மந்திரியும் வேண்டாம். "பூசாரி பலியிடத்தக்கவன்" எனக் கூறினாள். உடனே பூசாரி காளி இது என்ன நியாயம்? ஏன் இப்படி செய்தாய் என மன்றாட உடனே காளி நான் அனைவருக்கும் தாய் காலையில் தயிரன்னத்தை உண்டு விட்டு பின் காய்ச்சல் வர ஆட்டுக்குட்டியைப் பலியிட்டாய்.

ஆடுகள் என்ன குற்றம் செய்தன? நீ பலியிட்ட ஆடுகள் உன்னைப் பலியிட அரசனாகவும், மந்திரியாகவும் வந்தன. வினை விதைத்தவன் வினையறுப்பான். தினை விதைத்தவன் தினையறுப்பான். செய்த வினை செய்தவனைச் சாரும். அதுதான் நியதி என்றார். பூசாரி வாயடங்கி தலை குனிய மன்னன் வாளை வீசினான் உடனே சோ என மழை பொழிந்தன. உடனே அம்பிகை என்ன வரம் வேண்டும் வேந்தா எனக் கேட்க "குற்றம் புரிந்த பூசாரிக்கு அருள்புரி எனக் கேட்க, உடனே பூசாரி எழுந்து சென்று பின் கொலையும், புலையும் தவிர்ந்த அன்பு வழிபாடு செய்தான். பின் பலியிடல் நீங்கி அகிம்சை ஓங்கி கருணை வெள்ளம் தேங்கியது. கொலை நீங்கியது.

கன்மங்களில் இருந்து ஒருவன் விடுபட, பற்றற்ற கன்மங்களைச் செய்ய வேண்டும். பற்றற்ற கன்மங்களைச் செய்யும்போது ஒருவன் ஆகாமிய வினைகளை செய்யாது தப்பித்துக் கொள்ள முடியும். பற்றற்றவினையினூடாக இருவினையொப்பு நிகழும். இன்நிலையில் மலபரிபாகம் உண்டாகும் மலபரிபாகம் ஏற்பட சத்தினிபாதம் ஏற்படும். இதில் ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலக்கும். திருவருள் குருவாய் வருவதால் ஆணவம் வலிகுன்றும் இதனை உமாபதி சிவாச்சாரியார்,

"ஈட்டிய தலத்தினாலே
யிறையருளுருவாய் வந்து...."

மேலும் முத்தியடைய சரியை, கிரியை, யோகம், ஞானம். இவை முத்தியடைய வழியாகும். மேலும் தாயுமானவர்.

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய் கனி போல் அன்றோ..." என்று கூறுகின்றார்.

# கார்த்திகை மாத ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட உற்சவ தினங்கள்

| | | |
|---|---|---|
| *05.11.2010 ஐப்பசி 19 வெள்ளி* | – | *தீபாவளி தினம்* |
| *06.11.2010 ஐப்பசி 20 சனி* | – | *ஸ்கந்தசஷ்டி விரதாரம்பம்* |
| *11.11.2010 ஐப்பசி 25 வியாழன்* | – | *ஸ்கந்தசஷ்டி விரதம் சூரசங்காரம்* |
| *12.11.2010 ஐப்பசி 26 வெள்ளி* | – | *பாரணை தினம், ஐப்பசிக் கடைசி வெள்ளி விரதம், மாலை தெய்வானை அம்மன் திருக்கல்யாண விசேட உற்சவம்* |
| *21.11.2010 கார்த்திகை 5 ஞாயிறு* | – | *திருக்கார்த்திகை தினம் குமாராலய தீபம், விசேட உற்சவம்* |

நாவலர் பக்கம் : உ (தொடர்ச்சி...



# திருவிளையாடற்

## உலவாக் கோட்டை அருளிய படலம்

**ஆறுமுகநாவலர் - படலம் – 38**

மதுரைத் திருநகரிலே வேளாளர் குலத்திலே "அடியார்க்கு நல்லான்" எனப் பெயர்பெற்ற ஒருவன் இருந்தான். அவன் சிவபக்தியிலும், சிவனடியார்களைப் போற்றுவதிலும் மிகச் சிறந்தவன். அவன் மனைவி தர்மசீலை கற்பிற் சிறந்தவள். தன் நாயகனுக்கு எல்லா நெறியிலும் தனித் துணையாகி நிற்பவள் அடியார்க்கு நல்லான் வேளாண்மை செய்து, அதனால் வரும் ஊதியத்திலே அரசனுக்கு வரியாகக் கொடுப்பதுபோக, மிகுதி அனைத்தையும் மகேஸ்வர பூசைக்காகச் செலவிட்டு வந்தான். மணற்கேணியைத் தோண்டும் போது ஊற்றுநீர் பெருகுவதுபோல, மகேஸ்வர பூசையின் மகோன்னதத்தால் செல்வம் பெருகிற்று. அவன், தன் செல்வங் குன்றினாலும் மகேஸ்வர பூசையின் நியமங்குன்றான் என்பதை உலகத்தாருக்குக் காட்ட எண்ணிய சோமசுந்தரக் கடவுள் அவனுக்கு விளைவு குன்றும் வண்ணம் செய்தருளினார். விளைவு குறைந்து வருவாய் குன்றியபோதும் அதனைப் பொருட்படுத்தாது, கடன் வாங்கி மகேஸ்வர பூசையை முன்போலச் சிறப்பாகச் செய்து வந்தான். அவனுக்குக் கடன் கொடுப்பார் இல்லாவண்ணம் சிவபெருமான் தடை செய்தருளினார்.

சிவனடியாரைத் திருவமுது செய்வித்த பின்னரே தான் போசனஞ் செய்வதை நியமாகக் கொண்ட அவ்வடியார்க்கு நல்லான், தன் உயிர்த்துணையாளுடன் பட்டினியிருந்து உடலும் உள்ளமும் சோர்ந்து துன்பப்பட்டான். ஒருவாறு தெளிந்து சோமசுந்தரக் கடவுள் திருச்சந்நிதிக்குச் சென்றான். "எம்பெருமானே! அடியேனுக்கு வயல் விளைவு குன்றியமையால் உமது அடியவர் பூசைக்கு இடையூறு விளைந்தது. கடன் தருவாருமில்லை. கடன் தரவல்லவரைக் காட்டியருள வேண்டும். இல்லை எனில் நாம் இருவரும் உயிரை மாய்த்துக் கொள்வோம்" என விண்ணப்பஞ் செய்தான். அப்பொழுது ஆகாயத்திநின்றும், "அன்பனே! அஞ்சாதே. உன் வீட்டில் அரிசிக் கோட்டையொன்று வைத்தோம். அது எவ்வளவு எடுக்குந்தோறும் சிறிதுங் குறையாதிருக்கும். நீ அதை நாடோறும் பூசைசெய்து, அதில் வேண்டியதை எடுத்து மகேஸ்வர பூசையுடன், யாவருக்கும் அன்னதானம்

முதலிய நானாவித தருமங்களும் செய்து வாழ்ந்திருக்கக் கடவாய். உரிய காலத்தில் முத்தியுந் தருவோம்" என்று ஓரசரீரி வாக்குக் கேட்டது.

அடியார்க்கு நல்லான் அசரீரி வாக்கினைக் கேட்டு, மனம்மிக மகிழ்ந்து, மனைவியோடும் வீடு சென்று அங்கிருந்த உலவாக் கோட்டையைக் கண்டு வியந்து நின்றான். அவ்வுலவாக் கோட்டையை நாள்தோறும் புஸ்பம் - சந்தனம் - தூப தீபம் என்பவற்றினாலே பூசை செய்து, அன்னத்தின் பொருட்டும் அதனோடு இயைந்த ஏனைய செலவுகளுக்காகவும் வேண்டுமளவும் எடுத்து சிவனடியார், பிராமணர், விருந்தினர்கள் என யாவர்பொருட்டும் செலவு செய்து குபேரன் போல நெடுங்காலம் வாழ்ந்திருந்தான். சிலகாலம் செல்ல சிவசாருப்பியம் பெற்றுச் சிவலோகத்தைச் சென்றடைந்தான்.

## மாமனாக வந்து வழக்குரைத்த படலம் — படலம் – 39

மதுரைத் திருநகரிலே, வைசியர் குலத்திலே தனபதி எனப் பெயர் கொண்ட ஒருவன் இருந்தான். அவன் மனைவி பெயர் சுசீலை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திரபாக்கியம் இல்லாமையால் வருத்தமுற்றிருந்தனர். அதனால், தனபதி, தன் மருமகனையே தனக்குப் புத்திரனாகக் கொண்டு அன்போடு வளர்த்து வந்தான். தனபதி, தன் சகோதரி செய்த நன்றியைப் பாராட்டாது தன் மனைவிமேல் வைத்த ஆசை மயக்கத்தால், தினமும் தன் தங்கையுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். ஒரு நாள் தனபதியின் சகோதரி கோபித்து, "உனக்கு என்ன பெருமிதம் வேண்டி உள்ளது. நீ பிள்ளைப் பெறாத பாவி. எனது அருமைப் பிள்ளையினாலன்றோ நீ இருமைப் பயனையும் அடைந்தாய்" எனக் கேட்டுவிட்டாள். தனபதி இதுகேட்டு மிக்க வருத்தமடைந்து, "அடுத்த பிறவிக்காயினும் பிள்ளைப் பேற்றினைத் தரவல்ல தவத்தை இப்பிறவியிலேயே செய்ய வேண்டும்" எனத் துணிந்து, தன் செல்வமெல்லாவற்றையும் தன் மகனுக்கே கொடுத்து, மனையாளொடும் தவஞ்செய்யப் போயினான்.

ஊருடன் தனபதிக்கிருந்த தொடர்புகள் குறைவடைந்து வந்தமையினால், அவன் தன் மருமகனுக்குக் கொடுத்த வீடு, விளைநிலம், ஆடை ஆபரணம், திரவியம், பசுக்கள் எல்லாவற்றையும் தாயத்தார்கள். வல்வழக்குப் பேசிக் கவர்ந்து கொண்டார்கள். அதனால் தனபதியின் தங்கை மிகவும் மனத்தளர் வடைந்து தன் புதல்வனோடு சோமசுந்தரக் கடவுள் சந்நிதானம் சென்று தனக் கேற்பட்ட நிலைமையைக் கூறி வருத்தமுற்றாள். "என் மகன் அறிவிலாச் சிறு வன். அவன் மாமன் கொடுத்த செல்வமனைத்தையும் தாயத்தார்கள் பொய் வழக் கிட்டு அகபரித்தனர். அடியேம்களுக்குத் துணைவர யாருமில்லை. அருட்பெருங் கடலே! எங்கும் நிறைந்துள்ள நீர் இவையெல்லாம் அறியீரோ" என விண்ணப்பித்து

விழுந்து வணங்கி அங்கேயே இருவரும் துயில் கொண்டனர். அவளுக்குச் சொப்பனத்திலே தோன்றிய இறைவன், "கேளாய், பெண்ணே! விடிந்ததும் அரசாணை கொண்டு வல்வழக்குப் பேசிய அனைவரையும் தருமசாலைக்கு அழைப்பித்து விடு. நாம் வந்து வழக்குப் பேசித் தீர்த்துத் தருவோம்" என்றருளிச் செய்தார்.

விடிந்ததும் பஞ்சாயத்து சபையைக் கூட்டி தனது முறைப்பாட்டினைத் தெரிவித்தாள். அவர்களோ ஏளனமாகப் பேசி அவளை வைது அனுப்பினர். அவள் நேராக அரசவையின் தருமசபையை அடைந்து, சபையினருக்குத் தன் வழக்கைச் சொன்னாள். அதுகேட்ட சபையினர் ஏவலாளர்களை அனுப்பி தாயத்தார்களைச் சபைக்கு அழைப்பித்தனர். அப்பொழுது சிவபெருமான் தனபதி போலத் திருவுருக் கொண்டு, சிங்கம் போன்ற வீறுநடையுடன் சபைக்கு வந்தார். தன் தங்கையையும் மருமகனையும் ஆரத்தழுவி, "ஐயையோ! இப்படி வறியவரானீர்களே" என்று சொல்லி அழ, தங்கையும் புதல்வனும் தனபதி காலில் விழுந்து அழுதார்கள். தனபதியாக வந்த சோமசுந்தரக் கடவுள் சபையோரை நோக்கி, "இந்த வழக்கையும் தாயத்தார் வழக்கையும் சீர்தூக்கிப் பார்த்து நியாயம் வழங்குங்கள்" என தம்பக்க நியாயங்களை எடுத்துரைத்தார். இரு பக்கத்தாரின் நியாயங்களையும் கேட்டறிந்த தருமசபையினர், "தாயத்தார் வழக்குப் பொய்வழக்கு" என்றனர். இதுகேட்டு அச்சமடைந்த தாயத்தார், "இவர் நமது தனபதிச் செட்டியார் இல்லை" என்று வாதிட்டனர். அப்பொழுது தனபதியார் கைகொட்டிச் சிரித்து, அவரவர் குடிப்பெயர், தாய் தந்தையர், மாமன் மாமி, சுற்றத்தார், அவர்களது குண இயல்புகள், சொத்துகள், நிலபுலன்கள் எல்லாவற்றையும் சிறிதும் பிழையின்றி எடுத்துரைத்தார். இதனைச் செவிமடுத்த தருமசபையினர், "தனபதிச் செட்டியார் இவரே" என்றும், தனபதிச் செட்டியாருடைய சொத்தெல்லாம் அவர் மருமகனுக்கே உரியன என்றும் தீர்ப்பெழுதிக் கொடுத்தார்கள், பாண்டியன் இதனை அறிந்தால் தம்மைத் தண்டிப்பான் என்று பயந்த தாயத்தார்கள் ஒவ்வொருவராக விலகிச் சென்றனர். தனபதியாக உருவங்கொண்ட சிவபெருமானும் எல்லாரும் காண மறைந்தருளினார்.

சுந்தரேசபாத சேகர பாண்டியன் இதனைக் கேள்வியுற்று, தனபதியுருக் கொண்டு வந்து மறைந்தவர் சோமசுந்தரக் கடவுளே எனத் தெளிந்து வியந்து, தனபதியுடைய புதல்வனுக்குப் பல வரிசைகள் கொடுத்தனுப்பினான். சோமசுந்தரக் கடவுள் சந்நிதிக்குப் பல திருப்பணிகளைச் செய்வித்து, பின்னர், தன் புத்திரனாகிய வரகுணபாண்டியனுக்குத் தன்னரசைக் கொடுத்து, சிவபிரானது திருவடி நிழலைச் சென்றடைந்தான்.

உ




# கௌதமரின் சாபம்

***ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்***
***இந்திரனே சாலும் கரி.*** (குறள் - 25)

படைப்பவரான நான்முகப் பிரும்மா இதுவரை பிறக்காத அளவு அழகில் சிறந்த ஒரு பெண்ணைப் படைக்க எண்ணி ஒருத்தியை உருவாக்கினார். அவள் தான் அகல்யா.

மிகவும் அழகில் சிறந்தவளான அவளைக் கல்யாணம் செய்து கொடுக்க நினைத்தார். மாபெரும் அரசர்களும், மனிதருள் சிறந்த ரிஷிகளும், உயர்ந்த வானுலகத் தேவர்களும், அவர்களின் தலைவனான இந்திரனும் அகல்யையை மணந்து கொள்ள முன் வந்தனர்.

பற்றை விட்டு ஒழுக்க நெறியில் நின்று உயர்ந்த பண்புடையவர் பெருமை யைத் தான் உயர்வாக சாத்திரங்கள் சொல்லும். ஏனெனில் துறந்தவர் உலகத்தைப் பொறுத்தவரை ஆசையில் இறந்தவரைப் போல இருப்பர் என்று அவரது புகழ் மதிப்பிடப்படும். இப்படி இருப்பது எல்லோராலும் முடியாது. இவ்வாறு அரியகாரியம் செய்கிறவரே பெரியோர். இம்மை எனும் இவ்வுலக நிரந்தரமற்ற வாழ்க்கை, மறுமை எனும் மோட்சமான துன்பக் கலப்பற்ற பேரின்ப நிலையான வாழ்க்கை இரண்டின் தன்மை உணர்ந்து ஐம்புலன்களில் பற்றை விடும் அறத்தை மேற்கொண்ட வர் என்ற பெருமை உள்ளவர் துறந்தவர்.

இப்படிப் புலன்களை அறிவு எனும் அங்குசத்தால் அடக்கிக் காப்பவர் முனிவர் ஆவர். இவர்களில் சிலர் துறவறம் நடத்துவர். சிலர் இல்லறம் காப்பர். கௌதம முனிவர் என்பார் தம் புலன்களை வென்று தவத்தில் சிறந்தவராயிருந்தார். அழகில் சிறந்த அகல்யாவைத் தவத்தில் சிறந்த அவருக்கு பிரும்மா திருமணம் செய்தனுப்பிவிட்டார்.

இந்திரன் அகல்யாவின் அழகைக் கண்டு அவளைத் திருமணம் செய்து கொள்ள எண்ணி முடியாமல் தோற்றுவிட்டான். புலன்களை வெல்லும் அரிய

செயலைச் செய்யாத சிறியவனாக அவன் அவளை மறக்க முடியாமல் தவித்து சமயம் நோக்கியிருந்தான். நள்ளிரவில் ஒருநாள் இந்திரன் கௌதம முனிவரின் ஆசிரமத்திற்கு வந்தான். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன் தேட்டம் உள்ளவனாக உலக சுக இன்பம் நாடி வந்தான். இந்த ஐந்தும் பெண் ஒருத்தியிடம் உள்ளன. ஆகவே, உலகமும் பெண்ணும் சமம். ஆசையை அடக்க இயலாத இந்திரன் அகல்யையை அடைய வந்தான்.

ஐந்துபுலன்களையும் அடக்கித் தவம் புரிந்தவரான கௌதமரின் ஆற்றலை இந்திரன் அறிந்தே இருந்தான். ஆகவே, அஞ்சி தந்திரம் செய்தான். கோழி போலக் கூவினான். அதைக் கேட்ட முனிவர் விடிந்து விட்டது என எண்ணி காலைத் தவத்திற்கு வெளியே கிளம்பிப் போனார். அவரறியாமல் பூனைபோல ஆசிரமத்துள் நுழைந்த இந்திரன் அகல்யை சம்மதிக்க வேண்டுமே என கௌதமரின் வடிவெடுத்துக் கொண்டு அவளை அணைத்தான். தொடுகையின் வேறுபாட்டால் அது கணவரில்லை என அவள் உணர்ந்தாலும், 'வந்தது இந்திரன் என்றறிந்து தன்னை அடைய இந்திரனே வந்தானே' என்று கர்வம் கொண்டு கலங்கி சும்மா இருந்து விட்டாள்.

நடுவழியில் வானத்து நட்சத்திரங்களைப் பார்த்து, 'இன்னும் விடியவில்லை' என அறிந்து திரும்பி தம் இல்லத்துக்கு வந்த கௌதம முனி இந்திரனின் மோசடியை உணர்ந்தறிந்தார். மீண்டும் பூனைபோல அவருக்கஞ்சிய அவன் தன் எண்ணம் ஈடேறிவிட அவருடைய குடிலிலிருந்து வெளியேறும்போது கண்டுவிட்ட அவர், இந்திரனைச் சபித்தார்.

"எதற்கு ஆசைப்பட்டு அகல்யாவைத் தேடிவந்து குற்றம் புரிந்தாயோ அந்தக் குறியே உடல் முழுதும் உள்ளவனாக ஆவாய்" என்றார். அப்படி அவர் சபித்தும் அகண்ட வானுலகின் தேவர் தலைவனான அவனால் அவரை எதிர்த்து எதுவும் செய்ய இயலவில்லை. ஆக, ஐம்புலனடக்கிய முனிவரின் ஆற்றலுக்கு இப்படி இந்திரனே சாட்சியானான்.

சக்தி நிறைந்த மொழியான வாழ்த்தும், சாபமும் கொடுக்க வல்லவர் பெருமை அவர் கண்டறிந்த வேத மந்திரங்களால் அறியப்படும். அப்பேர்ப்பட்ட அருள் ஒருவரான கௌதமரின் கோபம் அடுத்த கணமே கைவிடப்பட்டது. அகல்யையை எவராலும் அறியப்படாமல் உணர்ச்சியற்ற பொருளாய் (கல்லாய்) இருக்க சபித்த அவர், உடனே இராமபிரான் திருவடிபட விமோசனம் உண்டாகும் என்றார்.

இப்படி சபிக்க சக்தி உள்ளவரானாலும், தவத்தால் மந்திரமறிந்த வேத வழியில் நடக்கும் ரிஷிகள் சாத்வீக குணத்தால் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராவர். கருணை கொண்டே குற்றம் களையவே சபிப்பர். சாதாரண உயிருக்கு சக்தி உள்ளவர் தீமை செய்துவிடக் கூடாது என்றே தம் கோபத்தையும் பயன்படுத்துவர்.

முனிவர் ஆற்றலில் மிக்கவரானாலும் கருணை கொண்டவராவார்.

உ

திருவாசக ஆராய்ச்சியுரை | தொடர்ச்சி



# சிவபுராணம்

- சங்க நூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் -

**இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே**

**அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்**

**சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே**

**ஆதியனே யந்த நடுவாகி யல்லானே**

**ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே**

*பதவுரை:* இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே - இன்பமும் துன்பமுமாகிய இரண்டும் இல்லாதவனே, அவையிரண்டும் உள்ளவனே; அன்பருக்கு அன்பனே - அன்பு செய்வார்க்கு அவர்கருதும் அன்புருவாய் அருள் செய்பவனே. யாவையும் ஆய் அல்லையும் ஆம் சோதியனே - எல்லாப் பொருள்களுமாகிய அவையல்லாத வேறுமாகியும் உள்ள ஒளியையுடையவனே, துன் இருளே - நெருங்கிய இருளையுடையவனே, தோன்றாப் பெருமையனே - புலனாகாத பெருமையையுடையவனே, ஆதியனே - எல்லாவற்றிற்கும் முதலாயிருப்பவனே, அந்தம் நடு ஆகி அல்லானே - முடிவும் நடுவும் ஆகி, ஆதியும் அந்தமும் நடுவும் அல்லாதவனுமாய் இருப்பவனே, ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே - என்னை வலியவந்து இழுத்து அடிமை கொண்டருளிய எமது தந்தையாகிய பெருமானே.

உலகத்து இன்ப துன்பங்கள் மாறிமாறி வந்து அழியுந்தன்மையுடையன. இறைவன் நித்திய நிரதிசய ஆனந்தமுடையனாதலின் 'இன்பமும் துன்பமும் இல்லானே' என்று அருளிச் செய்தார். இனி, தம்மைத் தலைக்கூடிய அடியார்க்கு உலகத்தாலும் உலகத்துப் பொருள்களாலும் உயிர்களாலும் வரும் இன்ப துன்பங்கள் அவ்வடியாரைத் தாக்காமல் முதல்வனே ஏன்று கொள்வானாதலின் 'இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே' என்றார் எனினுமாம். "துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்கு" (திருப்பொற் 20) என அடிகள் அருளியமையுங் காண்க.

"இவன் உலகில் இதம்அகிதஞ் செய்த எல்லாம்
இதம் அகிதம் இவனுக்குச் செய்தார்பால் இசையும்
அவன் இவனாய் நின்றமுறை யேக னாகி
அரன்பணியின் நின்றிடவும் அகலுங் குற்றங்
சிவன்இவன் செய்தியெல்லாம் என்செய்தி யென்றுஞ்
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்
பவம் அகல உடனாகி நின்றுகொள்வன் பரிவாற்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே"

(சூத் 10)

எனச் **சிவஞானசித்தியாரில்** வருதலும் ஈண்டு அறியற்பாலது.

அன்பருக்கு அன்பனே என்பதற்கு அன்பராயினார்க்குத் தானும் அன்பனாயுள்ளான் எனின் அன்பரும் இறைவனும் ஒத்த இயல்பினராவர். அதனால் அன்பனே என்பதற்கு அன்பர்க்கு அன்புருவாய் அருள் செய்பவனே என உரைக்கப்பட்டது. 'அன்பானினை வாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேறல் இறையியல்பு' எனப் பரிமேலழகர் கூறுதலும், (குறள் 3 உரை) "யாதொரு தெய்வங் கொண்டீர். அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர்" எனச் **சிவஞான சித்தியாரில்** வருதலும் (சூத் 2. செய் 25) காண்க.

இறைவன் வியாபகத்துள் உலகம் முழுவதும் அடங்குதலின் 'யாவையுமாய்' என்றும், அவனது வியாபகம் உலகப் பொருள்களுக்கு அப்பாலுமாய் இருத்தலாலும், தன்னுள் வியாப்பியமான உலகப் பொருள்களால் இறைவன் தாக்குண்ணாது வேறாய் நிற்றலினாலும் 'அல்லையுமாய்' என்றும் அருளிச் செய்தார். இறைவன் ஒளியுடையவனாதலின் 'சோதியனே' என்றார்.

எல்லாவுயிர்களையும் மறைக்கும் ஆணவ வல்லிருளால் தான் மறைக்கப்படாது தான் அதனுள்ளும் மறைந்து நிறைந்திருத்தலின் 'துன்னிருளே' என்றார். துன்னுதல் - நெருங்குதல். "துன்னிநங் காதலர் துறந்தேகு மாரிடை" (கலி:6) என்புழிப்போல, செறிதலுமாம். இறைவன் சோதியனாயும் துன்னிருளாயும் உள்ளான் என்பது "சோதியுமா யிருளாயினார்க்கு" (திருப்பொற் 20) என்பதனாலுமறியப்படும்.

இறைவன் பெருமை எத்துணைக் காலமிருந்தும் அறியப்புகினும் வரையறைவின்றி விரிதலின் அது புலனாகாது என்பர். 'தோன்றாப் பெருமையனே' என்றார்.

"ஞானத் தானுரு வாகிய நாயக னியல்பை
யானும் நீயுமாம் இசைத்துமென் றால∴. தெளிதோ
மோனந் தீர்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை"

(சூரமைச் 128)

எனக் **கந்தபுராணத்து** வருதலுங் காண்க.

இறைவன் ஆதியும் அந்தமும் நடுவுமாகியும் அவையின்றியும் உள்ளாதலின் 'ஆதியனே யந்த நடுவாகி யல்லானே' என்றார்.

"ஆதியே நடுவே யந்தமே" **கோயில்** 9.

எனவும்,

"மூன் ஈறும் ஆதியும் இல்லான்" **திருப்பொற்** 3.

எனவும் அடிகள் அருளியமையுங் காண்க. இறைவன் ஆதியும் அந்தமும் நடுவும் உடையனாம் எனின் அவனது இறைமைக் குணத்திற்கு குற்றமாகாதோ வெனின் ஆகாது; என்னை? இறைவன் அன்பராயினார்க்கருள் செய்யும் பொருட்டு அருளுருக் கொண்டு தோற்றி நின்று மறைதல்பற்றி அவையுடையனாகத் தோன்றினும், உண்மையில் இலனாமாகலின், இது பற்றியே,

"ஆட்பாவலர்க் கருளு வண்ணமுமாதி மாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா"

(தே. 312:4)

என **ஆளுடையபிள்ளையாரும்** அருளிச் செய்வாராயினர்.

ஈர்த்தென்னை யாட்கொண்ட என்றது என்னை வலியவந்து இழுத்து அடிமை கொண்ட என்றவாறு.

"நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க" திருவண்ட 99

"கள்ளேன் ஒழியுங் கண்டுகொண் டாண்டதெக் காரணமே" நீத் 2.

எனவும் அடிகள் பிறாண்டும் கூறுவன காண்க. எந்தை பெருமான் - எமது தந்தையாகிய பெருமான். "எந்தாய் எந்தை பெருமானே" ஈசனே யென்னெம்மானே எந்தைபெருமான்" (சத 24, 51) என வருவன காண்க.

உ



# 97ஆம் அகவையில் முதுபெரும் புலவர் (16.09.2010)

முதுபெரும் புலவர்,
கலாபூசணம்
**வை.க. சிற்றம்பலம் ஐயா**
அவர்கள் செம்மொழியாம்
தமிழின் சுவையென நீடுழிவாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

---

# மறை வேதத்தின் மிகத் தொன்மை

காடுடைய சுடலைப்பொடி பூசியனும் – கடலலை
மீது பள்ளி கொள்ளும் பரந்தாமனும்
மேடுடைய மலைகளிலுறைகின்ற முருகனும்
வயல் நிலங்களைக் காக்கும் கணபதியும்
பூனூலுடைய அந்தணர் வழியால் நால்வகை
நிலத்தினின்றும் பரவிய இயற்கை வழிபாடு
செங்கோலுடைய மன்னரையும் மக்களையும்
காக்கும் இறையாகியருள் புரிவது போல்
நாலுடை மறை வேதத்தின் மிகத் தொன்மை
யுணர்த மௌன பூசையேற்று
தொண்டைமானாறு மேவுகின்ற செல்வச்
சந்நிதி வேலுடைய பெருமானே!



இராம ஜெயபாலன்

தவிர்க்கத் தெரியாதவன் தேர்ந்தெடுக்க அறியான்

வாரியார் பக்கம் : உ



# "ஓதுதல்"

- வாரியார் சுவாமிகள் -

**ஓது வித்தவர் கூலிகொ டாதவர்**
**மாத வர்க்கதி பாதக மானவர்**

**ஓதுவித்தவர் - கல்வியைக் கற்பித்தவர்**

உணவினால் உடம்பு வளர்கின்றது. கல்வியினால் உணர்வு வளர்கின்றது. ஓதுவதனால் உணர்வு வருகிறது என்பதை "ஓதியுணர்த்தும்" என்ற திருவாக்காலும் அறிக. கல்வி என்ற சொல்லுக்கு அறியாமையை அகழ்வது என்பது பொருள். "கல்" என்ற பகுதி "தோண்டு" என்ற பொருள்பட நிற்பதையறிக. கற்றவரே கண்ணுடையவராவார். கல்லாதவர்களைக் கண்ணில்லாத விலங்கு களோடு சேர்த்து எண்ணுதல் வேண்டும்.

கல்வி கடலை ஒக்கும். "கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும்" என்றார் மாணிக்கவாசகர். கடலைக் கப்பலின்றிக் கடக்க முடியாது கப்பலை மாலுமி செலுத்துகின்றான். கப்பல் போன்றது கல்விக் கழகம். மாலுமி போன்றவர் ஆசிரி யர். மாலுமியின்றிக் கப்பலில் ஊர்ந்து கடலில் செல்ல முடியாது. அதுபோல, ஆசிரியர் இன்றிக் கல்வியைக் கற்றுக்கொள்ள முடியாது.

மேலும் கல்வி கடல்நீரை நிகர்க்கும், தாகவிடாய் கொண்டவன் கடல்நீரை மொண்டு பருகுவானாயின் விடாய் கூடுமேயன்றிக் குறையாது. அதுபோல் சந்தேக விபரீத அறியாமையுடையவன் தானே கலைகளைக் கற்கத் தொடங்குவானாயின் அவனுடைய ஐய விபரீத அறியாமைகள் அகலா, கடல் நீரை மேகம் பருகி உவரைமாற்றி நன்னீராகப் பொழிவதுபோல், ஆசிரியர் கலைக் கடலைப் பருகிப் பக்குவ நிலைக்குத் தக்கவாறு கூறுவார். மேகம் போன்ற ஆசிரியர் மூலம் கல்வி கற்று நலம்பெற வேண்டும்.

இத்தகைய ஆசிரியர்க்குத் தக்கிணை தருவது இன்றியமையாத கடப்பாடா கும். குரு தக்கிணை தருவதற்காக உதங்கமுனிவர் செய்த முயற்சி மிகப்பெரியது. குருதக்கிணை தரும்பொருட்டுக் காதிமுனிவர் படாதபாடு பட்டனர். ஆதலின் ஓதுவித்தவருக்கு ஓதனமாகத் தராதவர் நரகில் வீழ்ந்து துன்புறுவர் என்று அடிகள் கூறுகின்றனர். நரகில் வீழ்ந்து துன்புறுவோர்களாகிய பதினொரு தீயவர் களில் முதன்மை இடம்பெற்றவர் குருத்துரோகிகள் என்பதை உய்த்துணர்க.

***பழுதற வோதி:-***

"ஓதுவதொழியேல்" என்ற ஔவையார் திருவாக்கின்படி, அறநூல்களை ஓயாது ஓதுதல் வேண்டும். அங்ஙனம் ஓதுங்கால் குற்றமற ஓதுதல் வேண்டும்.

***குற்றம் என்பது என்ன?***

ஐயம், திரிபு, மயக்கம் என குற்றங்கள் மூன்றென உணர்க. பொருளினிடத்தில் உண்டா? இல்லையா? என ஐயுறுதல்; ஒன்றையொன்றாக மாறுபட அறிதல்; உண்மையறியாமல் மயங்குதல் என்ற குற்றம் நீக்கிக் கற்றல் வேண்டும்.

இதனையே திருவள்ளுவர் கற்க; கசடறக் கற்க; கற்பவை கற்க; கற்றபின் அதற்குத்தக நிற்க என்று கூறுகின்றார்.

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

ஓதுவதன் பயன் ஒழுக்கமுடைமை என்றுணரப் படுதலால், ஒழுக்கமில்லாதவர் ஓதியும் பயனில்லை என உணர்க.

**"ஓதலின் நன்று ஒழுக்கமுடைமை"**
**"ஓதாதார்க் கில்லை ஒழுக்கமும் உயர்வும்"**
**"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை"**

- முதுமொழிக்காஞ்சி

இனி, ஓதுகின்ற நாள்களும் குற்றமில்லாத நாட்களாக அமைய வேண்டும். அட்டமி, சதுர்த்தி, பௌர்ணமி, அமாவாசை, பிரதமை என மாதத்தில் எட்டு நாட்கள் ஓதக்கூடாது.

**அட்டமியி லோதினால் ஆசானுக் காகாது**
**சிட்டருக்குப் பன்னான்கு தீதாகும் - கெட்டவுவா**
**வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையில்**
**பித்தரும் பேசார் பிழை.**

- ஔவையார்

ஆசிரியர் கற்பிக்கும்போது கவனமின்றிக் கேட்டல்; பராக்குப் பார்த்தல்; சிந்தையை வேறு இடத்து செலுத்துதல்; அசட்டையாக இருத்தல்; அவமதிப்புடன் நிற்றல் முதலியவைகளும் குற்றம் என அறிக. எனவே, குற்றம் நீக்கிக் குணங்கொண்டு அடக்கமும் பணிவும் மேற்கொண்டு, அறிவை வளர்க்கும் அறநூல்களை ஓதுதல் வேண்டும்.

உ

# இறைவனை அடையும் வழி

- கு. நவரத்தினராஜா அவர்கள் -

வெகு காலத்திற்கு முன் ஒரு சிற்றூரில் வேதியன் ஒருவன் இருந்தான். அவன் இறைவன்பால் மிகுந்த பக்தியும் நல்லொழுக்கமும் கொண்டவன். ஏழை என்றாலும் பொருளாசை அவனிடம் இருந்ததில்லை. இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவன். வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும் என்பதில் பெருவிருப்புடையவன். தன்னால் இயன்ற அளவு எளியவர்களுக்கு உதவி புரிந்தான். துறவிகளுக்கு தொண்டு செய்தான். அதனால் வரவுக்கேற்ற செலவு அவனுக்கிருந்தது.

ஆனால் வேதியனின் மனைவியோ அவனிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவளாக இருந்தாள். அவளுக்கு பேராசை மிக அதிகம். சுயநலவாதி. சுகபோகமாக வாழவேண்டும் என்று நினைப்பவள். தனது ஆடம்பரச் செலவுகளுக்குத் தேவையான பணம் இல்லாததால் எப்படியேனும் அதிக பணம் சம்பாதிக்கும்படி கணவனை வலியுறுத்தி வந்தாள்.

வேதியன் நல்ல பண்புகளையும், செயல்களையும் எடுத்துக் கூறியும் அதனை அவள் காதில் போட்டுக்கொள்வதே இல்லை. தான் சொன்னதையே மீண்டும் மீண்டும் கூறி தொல்லை கொடுத்து வந்தாள். இதனால் வேதியன் நரக வேதனை அடைந்தான்.

ஒருசமயம் வேதியன் வாழ்ந்த சிற்றூருக்கு ஒரு துறவி வந்தார். அவரிடம் அற்புதங்கள் படைக்கும் பல சித்திகள் இருப்பதாக செய்தி பரவியது.

இதனை அறிந்த வேதியனின் மனைவி "நமது ஊருக்கு வந்துள்ள துறவி பெரிய மகானாம். அவரிடம் பற்பல யோக சித்திகள் உள்ளனவாம். அவர் நினைத்தால் எதுவும் நடக்குமாம். நீங்கள் அவரிடம் சென்று வறுமை நீங்கி செல்வம் கொழிக்க ஏதாவது செய்யும்படி கேளுங்கள்' என்று வலியுறுத்தினாள்.

'ஒரு சாதுவிடம் சென்று அறிவு, ஆற்றல், பக்தி போன்ற தெய்வீகப் பண்புகளைப் பெற ஆசீர்வதிக்கும்படி கேட்கலாம். அவரிடம் பணம் கிடைக்க வழி கேட்பது முறையல்ல' என்று வேதியன் எவ்வளவோ எடுத்துக் கூறினான்.

உறுதியான மனிதனைக்கண்டு வேலையே அஞ்சும்

அதையெல்லாம் வேதியன் மனைவி காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. பண வெறிபிடித்த அவள் "சாது விடம் சென்று நான் சொன்னதை அப்படியே கேளுங்கள்" என்று வேதியனை விரட்டினாள். வேறு வழியே இல்லாத அவன் மனைவியை அமைதிப்படுத்த தன்மானத்தைத் தூக்கி எறிந்து விட்டு வேண்டா வெறுப்புடன் சாதுவின் இருப்பிடத்திற்குச் சென்றான்.

சாதுவின் முன்னிலையில் அமைதி யாக அமர்ந்தான். மனைவி கூறியவற்றை சாதுவிடம் கூற மிகவும் கூச்சப்பட்டான். மிகுந்த தயக்கத்துடன் நீண்ட நேரம் அங்கேயே அமர்ந்து இருந்தான். நீண்ட நேரமாக அங்கேயே அமைதி காக்கும் வேதியனை கவனித்த சாதுவே பேச ஆரம்பித்தார்.

"அன்பனே! நீ மனதில் எதையோ வைத்துக்கொண்டு கூறமுடியாமல் குழப்பத்துடன் உள்ளாய். எதுவென்றாலும் தயங்காமல் கேள்" என்றார்.

வேதியன் கூற ஆரம்பித்தான். "சுவாமி தாங்கள் மிகுந்த யோக சக்தி படைத்தவர் என்றும், அதன் மூலம் பல அற்புதங்கள் நிகழ்த்துகிறீர்கள் என்றும் எனது மனைவி தெரிவித்தாள். நாங்கள் மிகவும் ஏழைகள் தொட்டதெல்லாம் தங்கமாகும் மாயக்கல் கிடைத்தால் எங்கள் வறுமை நீங்கி செல்வம் கொழிக்கும் என்று என் மனைவி நினைக்கிறாள். அவளது வற்புறுத்தலால்தான் அந்த மாயக் கல்லைப் பெற இங்கு வந்தேன் என்று மிகுந்த வெட்கத்துடன் கூறினான்.

உடனே சாது "ஓ.... இதுதான் விஷயமா" நீ கூறுவதைப் போன்ற மாயக் கல் என்னிடம் இருந்தது. அதனை நேற்றுத்தான் தெருக்கோடியில் உள்ள சாக் கடையில் வீசி எறிந்துவிட்டேன். நீ வேண்டுமானால் அங்கு சென்று தேடி எடுத் துக் கொள்ளலாம் என்று சர்வ சாதாரணமாகக் கூறினார்.

வேதியன் சாது குறிப்பிட்ட சாக்கடைக்குச் சென்றான். சிறிது நேரம் அங்குமிங்கும் தேடினான். முக்கோண வடிவமான ஒளி பொருந்திய கல் ஒன்று அவன் கைக்குக் கிடைத்தது. அதுதான் சாது குறிப்பிட்ட கல் என்று புரிந்து கொண்டான். அந்த மாயக்கல்லினால் அருகிலிருந்த ஒரு சிறிய கல்லைத் தொட் டான். உடனே அது தங்கமாக மாறியது. அந்த மாயக்கல்லுடன் வேதியன் மகானின் முன்பாகச் சென்று அமர்ந்தான். அவரிடம் "சுவாமி தொட்டதெல்லாம் பொன்னாக மாறக்கூடிய அதிசயக் கல்லையே மிகவும் அற்பமாக நினைத்து வீசி எறிந்திருப்பதால் இதைக் காட்டிலும் அற்புதமான மேலான பொருள் உங் களிடம் இருக்க வேண்டும் என்று நான் நினைக் கிறேன். அதனைத் தாங்கள் எனக்கு அளிக்கலாமா," என்று கேட்டான்.

உடனே சாது வேதியனிடம் "அப்பனே! நீ நினைப்பது உண்மைதான். இந்த மாயக்கல்லைவிட பல்லாயிரம் மடங்கு மேலான "ஆண்டவனின் திருநாமம்

என்று ஒரு பொருள் என்னிடம் உள்ளது. அதனை மிகுந்த மனநிறைவுடன் உனக்குத் தர விருப்பமுடன் உள்ளேன். ஆனால் அதனைப் பெறுவதற்கான மனப்பக்குவத்தை உனது மனைவி இன்னும் அடையவில்லை. அவள் பேராசை பிடித்தவளாக இருக்கிறாள். அவளிடம் இந்த மாயக்கல்லைக் கொடுத்துவிட்டு நீ இங்கே வரலாம். இந்த மாயக்கல்லைவிட எல்லா விதத்திலும் உயர்ந்த இறைவனின் திருநாமத்தை உனக்கு மகிழ்ச்சியுடன் அளிக்கிறேன்" என்று தெரிவித்தார்.

வேதியன் துறவி கூறியபடியே மாயக்கல்லை தனது மனைவியிடம் கொடுத்து விட்டு மனைவி, மக்கள், வீடு, சொந்தம் அனைத்தையும் துறந்தவனாக மீண்டும் சாதுவிடமே திரும்பி வந்தான். அனைத்தையும் துறந்து வந்த அந்த உத்தமனுக்கு எல்லாச் செல்வங்களிலும் மேலான "ஆண்டவனின் திருநாமம்" எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதை சாது விளக்கமாக எடுத்துரைத்தார். பின்னர் வேதியனுக்கு ஆண்டவனின் திருநாமத்தை சாது தந்தருளினார்.

வேதியன் சாதுவிடமிருந்து பெற்ற திருநாமத்தை சர்வகாலமும் மிகுந்த ஆர்வத்துடன் ஜெபித்து வந்தான். அதன் காரணமாக அவனுக்கு ஆண்டவன் தரிசனம் கிடைத்தது. பிறவிச் சூழலிலிருந்து முற்றிலும் விடுபட்டான். கடலில் கலக்கும் நதிபோல இறைவனிடம் முத்தி நிலையைப் பெற்றான்.

---

# கோயில் வாசலுக்கு நேராக நின்று தொழுவது ஏன் ஒழுங்கில்லாதது?

கோயிலில் வழிபாட்டுக்கு வரும் பக்தர்கள் ஸ்ரீ கோயிலுக்கு நேராக வாசலில் நின்று வணங்குவதை பெரியோர்கள் கண்டிப்பதுண்டு. அனேக கோயில்களில் இதைத் தவிர்க்கவே வேலிகட்டி அடைத்துள்ளது காணலாம். வாசலுக்கு நேராக நிற்காமல் இடது பக்கம் அல்லது வலதுபக்கம் தள்ளி நின்று சுமார் முப்பது டிக்ரி சரிந்து நின்று வணங்க வேண்டும். விக்கிரகத்தில் குடி கொள்ளும் காந்தக் கதிர்கள் அதாவது ஜீவசக்தி பக்தரை நோக்கி பாம்பு வடிவத்தில் வந்து கொண்டிருக்கும். இந்நேரம் கை, கால்கள் சேர்ந்து, இருகைகளும் தாமரை மொட்டுப் போல் பிடித்து கண்களடைத்து தியானிக்க வேண்டும் என்பது ஆசாரியவிதி. அப்படி செய்யும்போது ஒன்றுக்கொன்று தொடும் விரல்கள் வழியாக மூளையின் ஜீவ சக்தி அதி வேகத்தில் உடல் முழுவதும் பரவும்.

இவ்வாறு உயிர் சக்தி பரவும் வழி ஆசாரியர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். பூமிசக்தி சிறுவிரல் வழியாக, ஜலசக்தி மோதிர விரல் வழியும், அக்னி சக்தி நடுவிரல் வழியாகவும், வாயு சக்தி ஆள்காட்டி விரல் வழியாகவும், ஆகாய சக்தி பெருவிரல் வலியாகவும் உருவாகின்றன. பூமி சக்தி உடல் பலமும் ஜலசக்தி உயிர் பலமும், அக்னி சக்தி மனோ பலமும், வாயுசக்தி உணர்வு பலமும் ஆகாய சக்தி ஆத்தும பலமும் வழங்குகின்றது.

உ

# செய்திச் சிதறல்கள்

❋ களுத்துறை மத்துகம பள்ளகொட தோட்டத்திலுள்ள ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 15.09.2010ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்று 17.09.2010ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவிளக்கு, ஊர்வலம், தீ மிதிப்பு நிகழ்வுகளுடன் நிறைவுபெற்றது.

❋ உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மஹோற் சவம் 14.09.2010ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறமும், 22ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 23.09.2010ஆம் திகதி வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெற்றது.

❋ யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 10ஆவது ஆண்டு நிறைவையொட்டி செப்ரெம்பர் 16ஆம் திகதி முதல் 21ம் திகதி வரை மாபெரும் கல்விக் கண்காட்சி நடைபெற்றது.

❋ திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தான திருவாவடுதுறை ஆதீனம், அருள்மிகு ஞான மாநடராசப் பெருமான் புரட்டாசி வளர் பிறை சதுர்த்தசி திருநீராட்டு விழா 22.09.2010 புதன்கிழமை கொண்டாடியது.

❋ யாழ். ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தியநாதன் தேவஸ்தானத்தினால் அருட்குரு கடையிற் சுவாமிகளின் 119ஆவது குருபூசைத் தினம் 22.09.2010ஆம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் கடையிற் சுவாமி பற்றிய சொற்பொழிவும், பிரார்த்தனையும் மகேஸ்வர பூசையும் இடம்பெற்றது.

கவலையில் உள்ளதைச் செலுத்தக் கூடாது

உ

# சந்நிதியான்



நேரம் காலை 6.30 மணி ஆகிக்கொண்டிருக்கிறது. சந்நிதியான் ஆச்சிரமத்தின் அன்றாட செயற்பாடுகள் வழமைபோல ஆரம்ப மாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆச்சிரமத்தின் முன் மண்டபம் மற்றும் முற்றங்கள் எல்லாம் கூட்டித்துப்புரவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேநேரம் ஆச்சிரமத்தின் சமையல் அறையில் தேனீர் தயாரிக்கும் செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதிகாலையிலேயே அந்தத் தேனீரைப் பெற்று அதனைச் சுடச்சுட அருந்துவதனூடாக உடற்தெம்பையும், மனநிறைவையும் அடைந்து வருகின்ற அந்த அடியார்கள் ஆச்சிரமத்திற்கு வெளியே ஆர்வத்துடன் வரிசையாகக் காத்து நிற்கின்றார்கள். ஆம்! ஆலயமே தஞ்சமென ஆலயத்தில் தங்கியிருக்கின்ற அந்த அன்பர்களுடைய அன்றாட வாழ்க்கை அந்த காலைத் தேனீருடன் தான் கலகலப்பாக தினசரி ஆரம்பமாகிறது என்பது அங்கே இடம்பெற்றுவரும் வழமையான செயற்பாடாகும். இவர் கள் அடுத்த நேரச் சாப்பாடு பற்றியோ, அன்றாடம் செய்யவேண்டிய தொழில்பற்றியோ அல்லது தினசரி நாம் வீடுகளில் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றியோ எல்லாம் எங்களைப் போன்று இவர்கள் கவலைப்படுவதில்லை. உணவு, உடை, உறையுள் என்பன எல்லாம் ஆலயச் சூழலிலேயே கிடைத்து வருகின்றன. இத னால் அடிப்படைத் தேவைகள் பற்றிய எந்தவித கவலைகளுமின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சுதந்திரமான குழுவினராக அவர்கள் தமது காலத்தை போக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆச்சிரமத்தின் சுவாமிகள் அன்றைய தினம் வழமைக்கு மாறாக காலை 6.45 மணிக்கே ஆச்சிரமத்திலிருந்து வெளியே புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அதேநேரம் ஆலயத்தில் தங்கியிருக்கின்ற இந்த அன்பர்களுக்கு தேனீர் வழங்குகின்ற செயற்பாட்டையும்

கீழ்ப்படிவினால் மற்றவர்களை பணிய வைக்கலாம்

வழமைபோல செய்து முடித்துவிட்டே வெளியே புறப்படுவதற்கு ஏற்ற விதத்தில் ஒழுங்குகளை செய்து கொண்டிருந்தார்கள்.

இதற்கிணங்க, சுடச்சுட தயாரிக்கப்பட்ட தேனீர் பெரிய வாளியில் ஆச்சிரம முன்மண்டபத்திற்கு அருகில் அதற்கென பயன்படுத்தப்படும் அந்த நாற்காலியில் கொண்டுவந்து வைக்கப்படுகிறது. சுவாமிகள் முன் மண்டபத்திலிருந்தவாறே ஆச்சிரம வாசலை நோக்கி தேனீர் வாங்குகின்ற ஆட்கள் உள்ளே வாருங்கோ என்று அழைப்பு விடுக்கின்றார். ஆச்சிரமத்திற்கு வெளியே தேனீர் வாங்குவதற்கு தயாராக நின்றவர்கள் வரிசையாக உள்ளே வருகின்றனர். அப்பொழுது சுவாமிகள் கைபிடியொக் கால் தேனீரை அள்ளி வரிசையாக நிற்கின்ற ஒவ்வொருவருடைய பாத்திரத்திலும் தாராளமாக ஊற்ற ஒவ்வொருவரும் நிறைவான திருப்தியுடன் அதனைப் பெற்றுக் கொண்டு வெளியே செல்கின்றனர். ஆம் கொடுப்பவர் உள்ளத்திலும் நிறைவு! பெறுகின்றவர்கள் உள்ளத்திலும் ஒரு நிறைவு! காணப்படுகிறது. இவ்வாறான ஒரு மனநிறைவுக்காகத்தானே மானிடவர்க்கம் ஏங்கிக் கொண்டிருக்கிறது.

அனைவருக்கும் நிறைவுதரக் கூடிய செயற்பாடுகளே நாள்முழுவதும் ஆச்சிரமத்தில் நடைபெறுகின்றன என்பதற்கு முதல் அடையாளமாக காலையில் தேனீர் வழங்குகின்ற இந்த செயற்பாடு இவ்வாறு தினமும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

ஏற்கனவே அடியேன் கேட்டுக் கொண்டதற்கிணங்க சுவாமிகளும் அடியேனும் அன்றுகாலை 6.45 மணிக்கு ஆச்சிரமத்திலிருந்து புறப்படுவதற்கு திட்டமிட்டிருந்தோம். இதற்கிணங்கவே அடியேன் குறிப்பிட்ட நேரத்திற்கே ஆச்சிரமத்திற்கு வருகை தந்து மேற்படி செயற்பாடுகளை அமைதியுடன் அங்கே அவதானித்துக் கொண்டிருந்தேன். தன்னுடைய தேனீர் வழங்கும் செயற்பாடு முடிவடைந்ததைத் தொடர்ந்து சுவாமிகள் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். அடியேன் அந்த இடைவெளியில் ஆலயத்திற்குச்சென்று சந்நிதியானை வெளிவாசலில் நின்று ஒருமுறை வழிபாடு செய்து விட்டு வருவதாகக் கூறி ஆலயத்தை நோக்கி நடக்கலானேன்.

சந்நிதியானின் வாசலில் வெளிவீதியில் நின்றவாறே சந்நிதியானை வணங்கி விட்டு அடியேன் ஆச்சிரமத்திற்கு வந்துசேர அங்கே சுவாமிகளும் தனது மோட்டார் சைக்கிளுடன் ஆயத்தமாக நின்றார்கள். இருவருமாக மோட்டார் சைக்கிளில் காலை 6.45 மணியளவில் ஆச்சிரமத்திலிருந்து புறப்பட்டு நாம் போக வேண்டிய இடமான இணுவிலைநோக்கி போய்க் கொண்டிருந்தோம். அப்பொழுது யாழ். மாவட்டத்தின் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அவர்களாவார். திரு. ஆர்.சுந்தரலிங்கம் அவர்கள் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு புறப்படுவதற்கு முன்பே அவரது வீட்டிலே அவரைச் சந்திப்பதற்காகவே அவ்வாறு காலையிலேயே புறப்பட்டுச்சென்று கொண்டிருந்தோம். அடியேன் அப்பொழுது

உடுத்துறை கொத்தணி அதிபராக யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். கல்விப்பணிப்பாளர் ஏற்கனவே எனக்கு அறிமுகமானவர். அத்துடன் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் மட்டுமே அவருடன் உரையாடி ஒரு முக்கிய விடயத்தை அறியவேண்டிய தேவை எனக்கு இருந்தது.

கல்விப்பணிப்பாளர் அமரர் ஆர். சுந்தரலிங்கம் அவர்கள் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிய சிறந்த கல்விப்பணிப்பாளர்களில் ஒருவர். சிறந்த அனுபவசாலி யாருக்கும் தீங்குவிளைவிக்காதவர். இறைபக்தி உள்ளவர். சிரித்த முகத்துடனும் நகைச்சுவையுடனும் செயற்படுகின்ற சுபாபமுள்ளவர். அதுமட்டுமல்ல நகைச்சுவை உணர்வுடனேயே தன்னுடன் கடமைபுரியும் சக ஊழியர்களையும், கல்விப் புலத்தில் உள்ளவர்களையும் நெறிப்படுத்தி வழிப்படுத்தி நிர்வாகத்தை செம்மையாகச் செயற்படுத்தும் தனித்துவமான திறமை படைத்தவர். அது மட்டுமல்ல அதில் வெற்றியும் கண்டவர். ஆனாலும் தந்திரமாகச் செயற்படக்கூடியவர் என சிலர் விமர்சிப்பது முண்டு.

ஒருமுறை டிசம்பர் க.பொ.த. (சா.த) பரீட்சையை நடாத்துவதற்குரிய அறிவுறுத்தற் கூட்டம் கல்விப் பணிப்பாளர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலையில் நடைபெற்று முடிந்து விட்டது. கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் அவர்களும் சில மேற்பார்வையாளர்களும் அடியேனும் மண்டபத்தின் ஒரு பக்கத்தில் நின்று பொதுவான சில விடயங்கள் பற்றி உரையாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது இங்கிதம் தெரியாத ஒரு பரீட்சை மேற்பார்வையாளர் அவ்விடத்திற்கு வந்தார். அவ்வாறு வந்தவர் கல்விப்பணிப்பாளரை நோக்கி "சேர் பரீட்சைக்கு கட்டாயம் பீயோனை (பணியாள்) கூட்டிக்கொண்டு போகவேண்டுமா" எனக் கேட்டார். இந்தக் கேள்வியால் அதில் நின்ற எல்லோருமே பெரிய சங்கடத்திற்கு உட்பட்டோம். நிலமையை நன்கு புரிந்துகொண்ட கல்விப் பணிப்பாளர் சுந்தரலிங்கம் அவர்கள் எந்தவித சலனமுமின்றி உடனடியாகவே கேள்வி கேட்ட அந்த மேற்பார்வையாளரை நோக்கி "அப்ப சிலபேர் செய்வது போல இரண்டறக் கலக்கப் போகின்றேன் என்று சொல்கிறீர்கள்" என சிரித்தபடியே பதில் கூறினார்.

பரீட்சை நடாத்தும் பொழுது ஒரு பணியாளருக்கு (பீயோன்) கொடுப்பனவு வழங்கப்படுகிறது. சில பரீட்சை மேற்பார்வையாளர்கள் அப்படி ஒரு பணியாளரை வேலைக்கு அமர்த்தாமலே அதற்குரிய கொடுப்பனவைப் போட்டு தாமே எடுப்பதுண்டு. இது சட்டப்படி பிழை. அதுவும் ஒரு கல்விப்பணிப்பாளரிடம் இது பற்றி கேட்பது மிகப் பெரிய பிழை. ஆனால் சுந்தரலிங்கம் அவர்கள் இதற்கு ஆம் என்றும் சொல்லவில்லை இல்லை என்றும் சொல்லவில்லை. அதற்கு பதிலாக மேற்பார்வையாளர் பணி, பீயொனது பணி ஆகிய இரண்டு வேலைகளையும் பரீட்சை மண்டபத்தில் நீர் ஒருவரே செய்யப் போகின்றீரா என்ற கருத்தையே இங்கே நகைச்சுவையுடன் இரண்டறக் கலக்கப் போகிறீர்களா? என்ற கேள்விக்குறியுடன் அவருக்கு பதிலாகக்

கூறி முடித்தார்கள். உண்மையில் அந்த சந்தர்ப்பத்தில் இதைவிட இங்கிதமாகவும் அதேநேரம் நகைச்சுவையுடனும் இது போன்ற ஒரு பதிலை யாரால் கூறமுடியும். அத்துடன் கல்விப்பணிப்பாளர் இவ்வாறு கூறியதால் மேற்பார்வையாளர் எப்படி தனது முடிவை எடுத்திருப்பார் என்பதையும் நாம் சிந்திக்க முடியும்.

ஆம் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற மேற்படி கல்விப்பணிப்பாளர் அமரர் சுந்தரலிங்கம் அவர்களை சந்திப்பதற்காகவே 1992ஆம் ஆண்டு ஒரு நாள் சுவாமிகளும் அடியேனும் சென்று கொண்டிருந்தோம். காலை 7.45 மணியளவில் அவருடைய வீட்டை சென்றடைந்து விட்டோம். வீட்டின் வெளியே மோட்டார் சைக்கிளை நிறுத்திக் கொண்டோம். வீட்டின் வெளிக்கதவுக்கு வெளியே நின்றவாறு உள்ளே எட்டிப்பார்த்தேன். ஆள் நடமாட்டம் எதுவும் பெரிதாகத் தெரியவில்லை. வெளிக்கதவுக்கும் வீட்டிற்கும் இடையே ஏறத்தாழ 15 அடி தூரம் இடைவெளி இருந்தது. என்ன செய்வதென்று சிறிது நேரம் சிந்தித்தோம். அடியேன் வீட்டு வெளிக் கேற்றில் நின்றவாறே சேர்! சேர்! என்று கூப்பிட்டேன். ஐந்து ஆறு தடவைகள் கூப்பிட்டேன். இப்பொழுது அங்கே வீட்டிற்குள் ஆள் நடமாட்டம் இருப்பதை உணர்ந்து கொண்டேன். சிறிது நேரத்திற்கு பின்பு.....!

ஓம் முருகா! (தொடரும்....

---

## கேள்வி - பதில்

சிவன் கோயிலில் வழிபடும்போது நவக்கிரகங்களை வழிபட்டு சிவனை வணங்குவதா, சிவனை வணங்கி விட்டு நவக்கிரகம் சுற்றுவதா? எது சரி?

சிவன் கோயில் என்றால் அந்தக் கோயிலின் பிரதான தேவதை சிவன் தான். நவக்கிரகம் என்பது பரிவார தேவதை. பிரதான மூர்த்தியை முதலில் பார்த்துவிடுகிறோம். இதன்பிறகு பிரதட்சணம் செய்யும் வழியில் உள்ள பரிவார தேவதைகளை வணங்குகிறோம். இவர் முன்னால் - அவர் பின்னால் என்பது இல்லை. மூலவரைத்தான் முதலில் தரிசனம் செய்ய வேண்டும். நவக்கிரகத்தை வணங்கி விட்டுத்தான் அங்கே போவேன் என்று வைத்துக் கொள்ளாதீர்கள். சிந்தனையில் பாகுபாடு வந்தால் ஆராதனம் கெட்டுவிடும்.

நாம் ஒரு பொருளை வாங்கக் கடைக்குப் போகிறோம். போனதும் முதற் காரியமாக அதை முதலில் வாங்கி விடுகிறோம். பின்பு அங்கே கண்ணில்படும் வேற பொருட்களையும் வாங்குகிறோம். அதுபோல்த்தான் இதுவும். மூலவர் என்பவர் முதலில் வந்தவர். பரிவார தேவதைகள் பிறகு வந்தவர்கள். முன்னவருக்கு முதல் வணக்கம்.

உ

தமிழகத் திருக்கோயில் வரிசை: தொடர்ச்சி....

# -திருநல்லூர்-

– வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்–

மூர்த்தி, தலம், தீர்த்தம் என முச்சிறப்புமுடைய இத்திருத்தலம் கைலை மலைக்கு ஒப்பானது என்பதை, சிலகாலம் அங்கேயே தங்கியிருந்து இத் தலத் திலேயே திருவடி தீட்சைபெற்ற திருநாவுக்கரசர், “வடபாற் கயிலையும் தென்பால் நல்லூரும் தம் வாழ்பதியே” என இத்தலத் திருவிருத்தம் பாடற்பகுதி ஒன்றில் பாடிப் பரவியுள்ளார்.

ஆழித் தேர் வித்தகரான தியாகேசப் பெருமானை இந்திரனிடமிருந்து முசு குந்தச் சோழன் பெற்று வருகையில் ஆரூரை அடைய முன்னர் இங்கு மூன்று நாட்கள் வைத்துப் பூசித்த பின் ஆரூர் சென்று பிரதிட்டை செய்தான். இந்நிகழ்ச்சி யினை ஸ்தல புராணம் கூறுவது மட்டுமல்லாமல், அருணகிரி நாதரின் நல்லூர்த் திருத்தலத் திருப்புகழ் “மூலமுண்ட கனுபூதி....” என்று தொடங்கி,

**“சங்கர தியாகர் வந்துறை**

**நல்லூரமர்ந்து வளர் - தம்பிரானே”** என நிறைவு பெறுவதை யும் நாம் காணலாம்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் திரண்டு வந்து நீராடி நலம்பெறும் கும்பகோணம் மகாமகக் குளத்துக்கு ஒப்பாக இந்நல்லூரில் உள்ள “சப்தசாகரம்” என்னும் திருக்குளம் மிக்க சிறப்புடையது. இதன் சிறப்பினை “மகம் பிறந்தது நல்லூரில் - மகாமகம் பிறந்தது கும்பகோணத்தில்” என்ற பொதுமக்களின் பேச்சு வழக்கில் உள்ள வாசகமும், ஒவ்வொரு மாசி மகத்தன்றும் பெருந்திரளான மக்கள் வந்திரந்து புனித தீர்த்தத்தில் நீராடி வினைகள் தீர்த்துச் செல்வதும் வழமை யானவையாகும்.

தஞ்சாவூர் கும்பகோணம் பாதையில் பாபநாசத்திற்கும் கிழக்கே திருநல்லூர் (சுந்தரப் பெருமாள் கோயில்) புகைவண்டி நிலையத்திலிருந்து தெற்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது இத் திருத்தலம். திருச்சத்திமுற்றம், திருவலஞ்சுழி, திருப்பாலத் துறை, சுவாமி மலை ஆகிய திருத்தலங்கள் திருநல்லூரைச் சுற்றியுள்ள திருக் கோயில்களாகும்.

இத் திருக்கோயில் கிழக்கில் ஐந்து நிலைக்கோபுரமும், உட்புறமாக

மூன்று நிலைக்கோபுரம் ஒன்றும், மேற்கில் ஒரு சிறிய கோபுரத்தையும் கொண்டிருக்கிறது. கிழக்கு ராஜகோபுரம் கடந்து உள்ளே வந்தால் கொடிமரத்தடிப் பிள்ளையார், கொடிமரம், பலிபீடம், இடபதேவர் என அருகருகே உள்ளனர். நமது இடது கைப்பக்கமாக (தெற்கில்) அமர்நீதி நாயனார் வரலாற்றுடன் தொடர்புபட்ட தராசு மண்டபமும், (இடப் பெறுமதி கருதி அமர்நீதியார் வரலாற்றுச் சுருக்கம் இங்கே தரப்படவில்லை) சற்றுத் தள்ளி தென் கிழக்கு மூலையில் மடப்பள்ளியும் காணப்படுகிறது.

அப்படியே வலஞ்சுழியாக வீதியை வலம் வந்தால் தெற்கு வீதியின் நடுப்பகுதியில் அஷ்டபுஜமகாகாளி சந்நிதி காணப்படுகிறது. மேற்கே மேலைக் கோபுரமும் ஈசான மூலையில் யாகசாலையும், யாகசாலை அருகே விசுவநாதர் சந்நிதியும் உண்டு. மூன்று நிலைகள் கொண்ட கிழக்குப் பார்த்தபடியுள்ள இரண்டாம் கோபுர வாசல் கடந்து உள்ளே போய் நேரே உள்ள காசிப்பிள்ளையார், வரிசையாக உள்ள தேவர்கள் பூசித்த லிங்கங்கள், தெட்சணாமூர்த்தியை வணங்கி பிரகாரத்தை வலஞ்சுழியாக வலம் வருகிறோம். வழமையாக பிள்ளையார் அமர்ந்திருக்க வேண்டிய இடத்தில் ஸ்ரீ சோமாஸ்கந்தரும், தொடர்ந்து தேவர்கள் பூசித்த லிங்கங்களும், நின்ற கோலத்தில் முருகப் பெருமானும், வழமையான இடத்தில் மகாலெட்சுமியும் - சண்டிகேஸ்வரரும் அருகே மாடத்தில் துர்க்கையும் உள்ளனர். வடக்கு வீதிக் கோடியில் தேவார மூவர், பாண்டவர்களின் தாய் குந்தவை, அமர்நீதியார் சிலைகள் இரண்டு, சூரிய சந்திரன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

தனது முற்பிறவியில் சிலந்தியாகப் பிறந்து திருவானைக்கா லிங்கத்துக்கு வாய் நூலால் விமானம் அமைத்து நற்பேறு பெற்றவன் (யானை - சிலந்தி கதை அனைவரும் அறிந்ததே) மறுபிறவியில் கோச்செங்கட் சோழனாகி 70 சிவாலயங்களைக் கட்டுவித்தான் என்பது வரலாறு. இந்தக் கோயில்கள் எல்லாவற்றிலும் ஒரு பொது அமைப்பு காணப்படுகிறது. மூலவர் இருக்குமிடம் பல படிகளுடன் உயர்ந்தோ அல்லது தாழ்ந்தோ நேர் வாசலின்றி பக்கவாயில் கொண்ட அமைப்பை அவனது கோயில்கள் எல்லாவற்றிலும் காணலாம். யானைகள் நேராக கருவறையை அண்மிப்பதைத் தவிர்ப்பதே இதன் நோக்கமாகும். திருவானைக்கா போய் வந்தவர்கள் கருவறையின் அமைப்பை நன்றிவார்கள். இந்தப் பொது விதியின்படி திருநல்லூரிலும் பெருமான் எழுந்தருளியிருக்கும் விமானம் (கருவறை) 14 அடி உயரமுடைய பலபடிகள் கொண்ட மாடக் கோயிலாக இருப்பது (இது ஒரு கட்டு மலை. செயற்கையாக உருவாக்கப்பட்டது) ஏனைய கோயில்களைவிட முற்றும் வித்தியாசமான அமைப்பு. கருவறைக்கு வலப்புறமாக உள்ள அகன்ற ஒரு வழிப் படிக்கட்டுகளே மேலே ஏறிச் செல்வதற்கும், கீழே இறங்கி வரவும் உள்ள ஒரே

பாதையாகும். வாசல் கடந்து உள்ளே சென்றால் கொடிமரம் - நந்தி - பலி பீடம். அதன் பின்னே மூலவர்.

**இறைவன் : பஞ்சவர்ணேஸ்வரன், கல்யாணசுந்தரேஸ்வரர்**

**இறைவி : கிரிசுந்தரி, பர்வதசுந்தரி, கல்யாண சுந்தரி**

மூல லிங்கத்தின் பாணப்பகுதி இன்ன பொருளினால் ஆக்கப்பட்டது என்று கூற முடியாத நிலையில் தானே உண்டான சுயம்புவாய் தாமிர நிறத்தில் விளங்குகிறது. இன்றும் கூட பஞ்சவர்ணேஸ்வரர் என்ற பெயருக்கு ஏற்றபடி தினம் பகல் ஒன்றில் ஆறு நாளிகைகளுக்கு ஒரு தடவையாக ஐந்து முறை லிங்கபாணம் நிறம் மாறுகிறது. முதல் ஆறு நாளிகையில் தாமிர நிறம், அடுத்த 6 - 12 நாளிகை களில் இளஞ்சிவப்பு, 12 - 18 நாளிகைகளில் உருக்கிய தங்கம், அடுத்த 18 - 24 நாளிகைகளில் நவரெத்தினப் பச்சை, அடுத்த 24 - 30 நாளிகைகளில் இன்ன நிறம் எனக் கூற முடியாத தோற்றம் - என பஞ்சவர்ணமாகக் காட்சி தருகிறார் மூலவர். (குறிப்பு - 1).

பிருங்கி முனிவர் வண்டு வடிவாகி வழிபட்டதால் இச் சிவலிங்கத்தில் வண்டு துளைத்த அடையாளங்கள் உள்ளன. (குறிப்பு - 2). இந்த இரு குறிப்புகளையும் பற்றி கோயில் குருக்கள் எமக்கு விபரித்தபோது நமது துர் அதிஷ்டத்தை எண்ணி மிக்க வருந்தினோம். நாம் பஞ்சவர்ணேஸ்வரைத் தரிசிக்கச் சென்றவேளை மாலை நேரத்திற்கும் பிந்திய நேரமாயிருந்தது. (யாம் பொய்யுரைக்க விரும்ப வில்லை) மின் விளக்கொளியில் அனைத்தையும் பார்க்க நேர்ந்ததால் லிங்கபாணம் என்ன நிறம் கொண்டிருந்தது என்பது பற்றியோ, அதன் மீது வண்டுகள் துளைத்த அடையாளங்களையோ சரியாகப் பார்க்க முடியவில்லை. ஆனால், குருக்கள் கூறிய இந்த இரு விபரங்களும் ஸ்தல வரலாற்றுக் குறிப்பில் அப்படியே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த லிங்க பாணத்தில் இன்னுமொரு விசேடம் உண்டு. மேற்குறித்த பிரதான லிங்கபாணம் அருகே மற்றொரு சிறிய லிங்கபாணம் உள்ளது. அதனைத் தெளிவாகப் பார்க்கவும் முடிகிறது. ஒரே ஆவுடையாரில் இரண்டு லிங்க பாணங்கள் காணப்படுவது வேறு எங்குமே காண முடியாத தனிச் சிறப்பாகும். இந்தச் சிறிய லிங்க பாணம் தமிழ் முனிவர் அகத்தியரால் வைத்துப் பூசிக்கப் பெற்றது. அகத்தியருக்குத் திருமணக் கோலம் காட்டிய சுதைச்சிற்பம் மூலவருக்குச் சரி பின்பக்கமாக சுவரோடு சர்வ அலங்காரத்துடன் அமைந்துள்ளது. எப்போதும் மாறாத நித்திய திருமணக் கோலம் இது. அதன் இரு மருங்கும் பிரமனும் திரு மாலும் நின்ற கோலத்தில் உள்ளனர். பிரகாரத்தை வலம்வர குறுகலான வழி

உள்ளது. அருகேயே தெற்கு நோக்கியபடி நின்ற திருக்கோலத்தில் அம்பிகை கல்யாண சுந்தரி அருள் பாலிக்கிறாள். அம்பிகையின் வாசலை நெருங்கியபடியே பள்ளியறை காணப்படுகிறது. மூலவர் - அம்பாள் - பள்ளியறை தவிர வேறு எதுவும் இக் கட்டுமலையில் இல்லை.

திருச்சத்திமுற்றச் சிவக்கொழுந்தீசரை வழிபட்டு "கோவாய் முடுகி" என்று பதிகம் பாடி தமக்குத் திருவடிதீட்சை செய்யுமாறு அப்பர் வேண்ட, அவரை இறைவன் திருநல்லூருக்கு வருமாறு சொல்லி, "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்று அவர்தம் சென்னி மீது பாதமலர் சூட்டியருளினார். இந் தச் செய்தியினை நம்பியாண்டார் நம்பிகள் தாம் அருளிய திருத்தொண்டர் திரு வந்தாதியில் "நற்றவன் நல்லூர்ச் சிவன் திருப்பாதம் தன் சென்னி வைக்கப் பெற்றவன்" எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் சிவன் கோயிலாக இருந்த போதி லும் இத்தலத்தில் வழிபடுவோர்களுக்குச் சடாரி (இறைவன் திருமுடி) சூட்டப்படு கிறது. சிரசினில் சடாரி வைப்பது பொதுவாக விஷ்ணு கோயில்களில் காணப்படும் வழக்கமாகும்.

அகத்தியருக்குத் திருமணக் கோலம் காண்பித்ததும், அப்பருக்குத் திருவடி தீட்சை கிடைக்கப் பெற்றதுமான இத் திருத்தலம் சென்று தரிசித்த நிரம்பிய மன தோடு வெளியே வருகிறோம்.

**"அலை மல்கு தண்புனலும் பிறையைஞ்சூடி அங்கையில்**
**கொலைமல்கு வெண்மழுவும் அனலும் ஏந்துங் கொள்கையீர்**
**சிலைமல்கு வெண்கணையாற் புரமூன்றெரித்தீர் திருநல்லூர்**
**மலை மல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே"**

- சம்பந்தர்

**பி.கு.: மறக்கமுடியாத எமது அனுபவம்**

மூலவருக்கு அண்மையில் நின்று கொண்டிருந்த வயது முதிர்ந்த அந்த ணரிடம் எமது வழமையான பாணியில் நாணயத்தாளை நீட்டியபடி பெயர் - நட் சத்திரம் கூறி அர்ச்சனை செய்து தருமாறு கேட்டோம். "ஆண்டவனுக்கு நிவேதிக்க ஒரு கதலிப் பழமோ - கற்கண்டோ ஏதாவது ஒன்று கொண்டுவந்தால் மட்டுமே அர்ச்சனை செய்வேன்" எனக் கண்டிப்பாகக் கூறியதும் எமக்கு நெற்றிப்பொட்டில் அடி விழுந்த மாதிரி இருந்தது. படிகளில் கீழிறங்கி ஓட்டமும் நடையுமாக வெளியே வந்து பழம் - பாக்கு - வெற்றிலை வாங்கி மீண்டும் ஓடோடிப் படியேறி அர்ச்சனையை நிறைவு செய்தோம். ஒழுங்கான ஒரு பாடத்தை நமக்குப் புகட்டிய அந்த அந்தணர் மூலம் பின்னர் பல விடயங்களையும் நாம் அறிந்து கொண்டோம் என்பது வேறு கதை.

உ

# ஐப்பசி மாத வாராந்த நிகழ்வுகள்

**01.10.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆன்மீகச் சிந்தனை"

வழங்குபவர் :- சு. இராஜேந்திரக் குருக்கள் அவர்கள்
ஹரேகிருஷ்ணா ஆலயம் - கொழும்பு.

**08.10.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இசை நிகழ்வு"
(பக்கவாத்திய சகிதம் )

**15.10.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "பக்திப் பாடல்"

வழங்குபவர் :- கு. கிருபாகரராசா குழுவினர் (ஆவரங்கால்)

**22.10.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

**29.10.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் 154 ஆவது மாத வெளியீடு

## ஐப்பசி 2010

வெளியீட்டுரை :- திரு. சி. பத்மநாதன் J.P. அவர்கள் [பருத்தித்துறை]

மதிப்பீட்டுரை :- சைவப்புலவர் க. நித்தியதசீதரன் (ஆசிரியர்) அவர்கள்

பதிவு இல. Q.D/46/NEWS/2010

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

